ஊற்று 1

# அமுது

துளி 2

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU

அமுது



30/-

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - நவம்பர் '98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


பாதகமான பளபளப்பு . . . . . . . . 05
**நெற்றிக் கண்** . . . . . . . . . . . . . 06
**அரசியல் அரங்கம்:**
பேச்சுகளும் வார்த்தைகளும்
பேசப்படா உண்மைகளும் . . . . . 08
சின்னச் சின்ன.... . . . . . . . . . . . 11
கவிதைகள் . . . . . . . . . . . . . . 13
**நேருக்கு நேர்:**
கொலைகள் சரியென்றால்
சுட்டவர்கள் சொல்லட்டும்! . . . . . 14
பிள்ளைக் கறி உண்ட
தேசாதிபதி. . . . . . . . . . . . . . . 17
**ஆளுமை:**
ஊனமிலா எண்ணம்
உறுதி கொண்ட.... . . . . . . . . . 18
வேரடி மண்ணோடு பிடுங்கி . . . . . 21
காவியமாகிய காதல் . . . . . . . . . 22
வானம் விழுங்காத மர்மம் . . . . . 26
**சிறுகதை:** என் நாய் . . . . . . . . . 29
குறி தவறிய... . . . . . . . . . . . . 30
**குங் ஃபூ:** சண்டையிடாது
செய்யும் சண்டை. . . . . . . . . . . 32
பிள்ளைக்கு முப்பது . . . . . . . . . 34
கண்டி சீமைக்கு கொண்டுவந்த . 35
**புலம் பெயர்ந்த பதிவுகள்:**
தொலைந்து போகும்... . . . . . . . . 36
**ஸ்ரோபரி:**
சூடு சுரணை. . . . . . . . . . . . . 38
பெண்ணென்ற பேதம் . . . . . . . . 39
**கிரக சஞ்சாரம்** . . . . . . . . . . . 40
**சிரிக்க சிந்திக்க**. . . . . . . . . . . 41
**நோயற்ற:**
தீயினால் சுட்ட புண் ஆற. . . . . . 43
**சினிமா:**
புதுசு புதுசாய்
சொல்லத் தெரிந்தால் . . . . . . . . 44
மணிரத்ன மசாலா . . . . . . . . . . 47
**நூல் அறிமுகம்** . . . . . . . . . . . 48



**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283**
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net




சின்னச் சின்ன...
**11**



சுட்டவர்கள் சொல்லட்டும்!
**14**



**18**
ஊனமில்லா எண்ணம்! உறுதி கொண்ட....



**22**
காவியமாகிய காதல்




**26**



**32**
குங் ஃபூ



**35**
கண்டிச்சீமைக்கு
கொண்டு வந்த...



புதுசு புதுசாய்
சொல்லத் தெரிந்தால் **44**


பேச்சுகளும் வார்த்தைகளும்
பேசப்படா உண்மைகளும்..... .....08
பிள்ளைக் கறி உண்ட தேசாதிபதி.... 17
என் நாய் ................. .....29
குறி தவறிய... .................30
பிள்ளைக்கு முப்பது............... 34
தொலைந்து போகும்... ....... .....36
ஸ்ரோபரி ...................... 38




**21**
வேரடி
மண்ணோடு
பிடுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை இல்லாத வித்தியாசம்!



"அமுது" முதல் இதழ் பார்த்து வியப்பு; மேற்கு நாடுகளின் சஞ்சிகைகளை ஒத்ததாக - அமைப்புமிக கவர்ச்சியாக உள்ளது. விலை.... பரவாயில்லை. தமிழ்மக்களின் ஆதரவு அமோகமாக இருக்கும்.

**கே. எம். வாசகர், கன்னன்குடா.**

முதலில் நான் வாங்கிய ஒரு "அமுது" இதழை பாடசாலைக்குக் கொண்டு சென்றேன். அடுத்த நாள் மாணவர்கள் எல்லோர் கைகளிலும் ஒவ்வோர் 'அமுது'! மாணவர்களுக்கான ஆக்கங்களையும் அமுதில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**எஸ். எம். சாதீக். இலவன்குளம், புத்தளம்.**

கவிதைகள் சுவையுள்ளதாக இருந்தன. முரளி கட்டுரையில் சிலுவை வரையப்பட்டிருந்த விதம் கவலை தந்தது.

**ஏ. டி. டேவிட், பிரதான வீதி, மாத்தளை.**

'அமுது' வெளிவரும் செய்தியை 'இன்ரர் நெற்'றில் பார்த்தோம். தாமதமாகவே கிடைத்தது. உங்கள் முயற்சி நன்று. சஞ்சிகை அழகாகவும் இருந்தது. காலாகாலத்தில் நமக்குக் கிடைக்க வழி செய்யுங்கள்.

**ஜெ. கிருபைராணி, மிடில்சக்ஸ், இலண்டன்.**

அமுதத்தைக் கண்டு எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை எப்படி எழுதுவதென்று புரியவில்லை. தென்னிந்தியப் புத்தகக் கடலின் கரைகளிலே உலவ விருப்பம் கொண்டிருந்த என்னை அல்லது என் போன்றவர்களை இலங்கையிலும் அப்படி ஒன்றைப் பார்க்க முடியும் என்ற யதார்த்தத்தைக் காண்பித்து புளகாங்கிதமடைய வைத்தது அமுது. பூபாலசிங்கம் புத்தகக் கடையில் முதல் பிரதியை நானே வாங்குவதாகச் சொன்னார்கள். ஓரிரு நாட்களிலேயே எல்லா 'அமுது'ம் தீர்ந்துவிட்டது.

**ச. கெங்காதரன், அச்சுவேலி வடக்கு.**

உன் - மாத மலர்வு மாதத்தில் பல மலர்வாகி நம் இதயத்தில் தினம் வாழ வாழ்த்துக்கள்!

**எம். ஸாலிஹ் அஸீம், புத்தளம்.**

அமுதக் கடலில் நாம் தேடி எடுக்க பல முத்துக்கள். அமைப்பும் நன்று. எங்களது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிக்கிறோம்.

**பெப்பச்சுவா, சுதும்பொல.**

'அமுது' இதழில் அச்சும், அமைப்பும் பிரமாதம். இனிவரும் இதழ்கள் இதைவிட சிறப்பாக வரட்டும், வளரட்டும்! வாழ்த்துக்கள்!

**அந்தனி ஜீவா, கண்டி.**

ஆசிரியர் தலையங்கத்தில், தலைக்குள் நிறைந்திருப்பவற்றைக் காலிசெய்யா விட்டால் புதியவற்றை எப்படி உள்வாங்கிக் கொள்வது என்று கூறியிருந்தீர்களே, அப்படியென்றால் கற்றவற்றையெல்லாம் நாம் மறக்க வேண்டுமா?

**சு. சிவநேசன், வெள்ளவத்தை.**

ஏகப்பட்ட ஆவலோடு எதிர்பார்த்த 'அமுது' உண்மையிலேயே நாம் எதிர்பார்த்ததைவிட இனித்தது. வாசித்துப் பார்த்தோம்.... பூரித்துப் போனோம்! ஈழத்து சஞ்சிகை சரித்திரத்தில் 'அமுது' ஒரு சாதனை என்பதை நெஞ்சு நிமிர்த்திச் சொல்லலாம்.

**வாஹிட் ஏ. குத்தூஸ், அக்குறணை.**

அழகிய பல்சுவை இதழ் இலங்கையில் இல்லையே என்ற குறையை அமுது நிறைவு செய்துவிட்டது. பக்க வடிவமைப்பில்....... நம்மாலும் முடியும் என்னும் எடுத்துக்காட்டு.

**மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.**

அச்சுப் பதிப்பில் மெச்சும் வகையில்
தரத்தில் உயர்ந்து தந்தாய் இனிமை
புதிய வடிவில் பூரிப்பு மனதில்
சுவைத்தோம் சுகித்தோம் வாழ்க பல்லாண்டு!

**பஹ்மிதா வாஹித், பதுளை.**

எங்கள் பிரதேசத்தில் அமுது கிடைப்பது குதிரைக் கொம்பு. கிரக பலனைப் போன்ற ஒரு சீரியஸ் விஷயத்தில் கிரகாச்சாரியின் நகைச்சுவைப் பாணி ஒரு வித்தியாசம்!

**சி. ஜெயக்குமார், கம்பளை.**

ஆசிரிய தலையங்கத்திலிருந்து, டக்ளஸ் செவ்வி, செ. யோகநாதன் சிறுகதை, உறையாத குருதி எல்லாம் நினைவில் நிற்கின்றன. கிரஹாச்சாரியின் கணிப்பு இதுவரை இல்லாத வித்தியாசம். "புலம்பெயர்ந்த பதிவுகள்" எதிர்ப்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. மொத்தத்தில் காலத்தின் தேவை "அமுது".

**வி. ரி. சகாதேவராஜா, காரைதீவு.**

புதுத்துணியை வண்ணான் பறைதட்டி வெளுப்பானாம்.... எல்லோரதும் ஆரம்ப சூரத்தனம் நன்றாகத்தான் இருக்கும். போகப் போகப் பார்க்கலாமே!

**தொலைபேசியில் ஓர் அன்பர், யாழ்ப்பாணத்திலிருந்து.**

அமுதின் அழகு உலகத் தரத்தில் உயர்ந்து நிற்கிறது.

**நல்லை அமிழ்தன், கோப்பாய்.**

கவர்ச்சியான வடிவமைப்பிலும், விஷயதானங்களிலும் 'அமுது' இங்குள்ள பல தடைகளைத் தாண்டியிருக்கிறது. அதுபோல கைத்துப் போயிருக்கும் மனங்களை மேலுயர்த்துவதிலும், சீழ் பிடித்திருக்கும் புண்களைக் கீறிப் பிளந்து ஆற்றுவதிலும் நேரக்கூடிய தடைகளையும் அமுது தாண்ட வேண்டும். உண்மையின் வெற்றிக்கு அமுது பாடுபட வேண்டும்.

**நா. தெய்வேந்திரம், கொழும்பு 06.**

உங்கள் ஆக்கங்கள், அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.
No: 35, D.R.Wijewardana Mawatha, Colombo 10.
தொலைபேசி : 454283 Fax : 32067
E-Mail: webmgr@sri.lanka.net

## தேநீர் கோப்பை



தாவோ தத்துவங்களை ஆராய்ச்சி செய்யும் ஒரு படித்த மனிதர் அதுபற்றி அறிந்துகொள்ள சாது ஒருவரிடம் சென்றார்.

சாது பேச ஆரம்பித்தால் இவர் உடனே, "ஓ... அதுவா... அதுதான் எனக்குத் தெரியுமே" என்றவாறு தனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லத் தொடங்கிவிடுவார். பின்னர் சாது எதைச் சொன்னாலும், திரும்ப எதையாவது கேட்பார். ஆனால் சாது பதிலளிக்கத் தொடங்கினால் இடைமறித்து தனது புலமையை வெளிக்காட்டத் தொடங்கிவிடுவார். சாது பேசுவதை விடுத்து வந்தவருக்கு தேநீர் பறிமாறத் தொடங்கினார். தேநீர்க் கோப்பை நிரம்பிய பின்னும் அவர் ஊற்றுவதை நிறுத்தவில்லை. பதறியபடி அவரைத் தடுத்த அந்த படித்த மனிதர் "நிறுத்துங்கள்! கோப்பையில் இனி தேநீர் கொள்ளாது" என்றார். சாது புன்னகையுடன் சொன்னார்: "மெத்தச் சரி, உங்கள் கோப்பையிலுள்ளதைக் காலி செய்யா விட்டால் புதிய தேநீரை நீங்கள் சுவைக்க முடியாது".

*'கோப்பையின் பெறுமதி அதன் வெறுமையில்தான் உள்ளது!'* The value of a tea cup is in it's emptyness.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் வீணை செய்தே....

மகிழ்ச்சி!

'அமுது' முதலாவது இதழுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு உற்சாகமளிக்கிறது.

எமது மக்களின் பொதுவான ரசனைக் கணிப்பில் தேறிவிட்டதாக ஒரு திருப்தி!

வெளியிடப்பட்ட ஒருசில நாட்களுக்குள் அனைத்துப் பிரதிகளும் தீர்ந்துவிட்டதுடன், அதிகரித்த பிரதிகள் முகவர்களால் வேண்டப்படுகின்றன. அதனால் இம்முறை பிரதிகள் தொகையை இரட்டித்துள்ளோம். அதேவேளை பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு அமுது வெளிவருகின்றதென்ற நற்செய்தியையும் உங்களுக்குத் தருகிறோம்.

ஜனரஞ்சக தமிழ்ச் சஞ்சிகையொன்று முன்னொரு போதும் இங்கில்லாத நிலையில் எமக்கு எல்லாமே பரிசோதனை முயற்சிதான். மக்கள் எதை ஏற்றுக் கொள்வார்கள், அவர்களுக்கு எதை வழங்கவேண்டும், எதை வழங்கக் கூடாது என எதிர்வுகூறக் கூடியவர்கள் இங்கு எவருமில்லை. செய்து, விளைவறிந்து, திருத்தி, மறுபடி செய்வதொன்றே ஒரே மார்க்கம்.

எழுத்தும் காட்சியும் ஒருங்கே கலந்த ஒரு விடய வெளிப்பாடே எம் சஞ்சிகை. இங்கு மொழி விழியைத் தாண்டிய பார்வையைத் தருகின்ற மற்றுமோர் புலனங்கமே. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் என்ற வகைப்பாடு இதற்கில்லை. காற்று எப்படி எல்லோரது சுவாசத்துக்குமாக வீசுகிறதோ அதுபோலவே நாமும் ஆக்கங்கள் படைப்போம்.

மக்களுக்குப் புரியுமா, அவர்கள் குழந்தைகளா, மாணாக்கர்களா, முதிர்ந்த அறிவாளிகளா என நாம் குழம்பிக் கொள்ளத் தேவையில்லை: எல்லோரையும் திருப்தி செய்யும் 'ஏகப் பொதுமை' ஒருபோதும் இல்லை. 'நிறைய' இருந்தாலும் அதில் 'குறைய' இருக்கவே செய்யும்.

எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு பதில் இருக்கத்தான் வேண்டுமென்பதில்லை. ஒரு கேள்விக்குப் பல பதில்கள் இருக்கலாம். ஒவ்வொன்றும் ஒவ்வோர் விதத்தில் சரியாக இருக்கலாம். பல கேள்விகளுக்கு ஒரே பதிலும் இருக்கலாம். ஏன் கேள்விகளுக்குப் பதிலே இல்லாமலும் போகலாம். கேள்விகளுக்குக் கேள்விகளே பதிலாகவும் ஆகலாம். கேள்விக்குள்ளே பதிலும் பதிலுக்குள்ளே கேள்வியும் அடங்குகின்ற அதேவேளை கேள்வியிலிருந்து பதிலும் பதிலிலிருந்து கேள்வியும் மீண்டும் மீண்டும் தோன்றலாம்.

நாம் எப்படிச் செய்வது என்று பேசிக்கொண்டேயிருக்காமல், செய்வோம்....., செயல் பின்னர் பேசட்டும்!

ஆ-ர்.



பிரதமஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
இணையாசிரியர்:
து. பாஸ்கரன்
கட்டுரையாசிரியர்:
சி. சிவகுமார்
ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
டி. பீ. எஸ். ஜெயராஜ்
எம். எச். எம். ஷம்ஸ்
பிரதம வடிவமைப்பாளர்:
சி. முரளிதரன்
ஓவியர், கார்டூனிஸ்ட்:
இ. ப்ரகீத்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பீரேம்குமார்
விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
நவரட்ணம் சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன
அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Chief Editor:
*S. Manoranjan*
Associate Editor:
*T. Baskaran*
Features Editor:
*S. Sivakumar*
Other Editorial Staff:
*D. B. S. Jeyaraj*
*M.H.M. Shums*
Chief Designer:
*C. Muralitharan*
Artist/Cartoonist:
*Ekkneligoda Prageeth*
Computer Page make-up:
*Gerald S. Nadesan*
Computer Typeset:
*S.M. Premkumar*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**

10814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதகமான மினுமினுப்பு





வீட்டுக் கதவு மெதுவாகத் தட்டப்படுகிறது. கூடவே ஒரு குரல் கூப்பிடுகிறது. உங்கள் சின்னமகள் 'அங்கிள்' என்று கூவிக்கொண்டு துள்ளிக் குதித்து ஓடிச்சென்று கதவைத் திறக்கிறாள். வந்தவர் அவளைச் செல்லமாகத் தூக்கி அவள் கையில் 'ஆப்பிள்' ஒன்றைத் திணித்து விடுகிறார். உடனே கீழே குதித்து உள்ளே ஓடிவந்த மகள் மாலைத் துயிற் சோம்பலில் கட்டிலில் கிடந்த உங்களை "அப்பா, ஆப்பிள் அங்கிள் வந்திருக்கிறார்" என்று கையோடு இழுத்துவந்து விடுகிறாள் ஹோலுக்கே.

இப்போதெல்லாம் விருந்தினர்கள் வீட்டுக்கு வரும்போது ஆப்பிள் ஒன்றை வாங்கி வருவது புதிய நாகரீகமாகிவிட்டது. நம் நாட்டில் எவ்வளவோ பழங்கள் இருந்தும் அவற்றைவிட 'ஆப்பிள்' அந்தஸ்தில் உயர்ந்த ஒரு கௌரவ அன்பளிப்பாகக் கொள்ளப்படுகிறது. எமக்கு எம்மிலும், எமது பொருட்களிலும் ஒரு தாழ்வு அபிப்பிராயம்..... எப்போதுமே! நாம் யாரும் சந்தித்துக்கொண்டால் 'குட் மோர்னிங்'தானே சொல்கிறோம், காலை வந்தனம் இல்லையே. கடைசி, வெறும் வணக்கம்.... ஊஹூம். அது வேறு விடயம். ஆனால் இப்போது இந்த ஆப்பிள் மோகம் எப்படி வந்தது?

அண்மைக் காலங்களில் இந்தப் புதிய நாகரிகமிகு வெளிநாட்டுப் பழங்கள் தெருக் கடைகள் தோறும் விரவிக் கிடக்கின்றன. அவற்றின் விலையும் மிகமலிவாகி விட்டது. முன்னர் ஒரு ஆப்பிளோ, ஒரேஞ்சோ சாதாரண குடும்பஸ்தர்களுக்கு எட்டாக் கனி. பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்தால் மட்டுமே யாரும் வாங்கிக் கொடுத்து சுவைத்திருப்பர்.

இப்போது எங்கள் ஊர் பழங்களை வாங்குவதானால் மூர்ச்சையடைந்து விடுமாப்போல் தோன்றுவது அவற்றின் விலை திடீரென அதிகரித்து விட்டதால் அல்ல. இந்த வெளிநாட்டுப் பழங்கள் மலிந்துவிட்ட மலிவில் எங்கள் பழங்கள் பயங்கரமாகத் தோன்றுகின்றன.

இப்போது நாட்டுக்கு வந்து குவியும் ஆப்பிள்களின் தொகை எவ்வளவென்று நினைக்கிறீர்கள்? மாதம் சுமார் 40 பெரிய கென்டைனர்கள்! அப்படியானால் சுமார் ஒன்றேகால் கென்டைனர்களுக்கு அதிகமான பழங்களை நாம் தினமும் தின்று தீர்க்கிறோம்.

நன்று....நன்று. தின்றால் என்ன, யாவும் சத்தாகிச் சதையோடு கலக்கும்தானே! ஆனால்.... அவை உண்மையிலேயே சத்தாகவா இல்லை சுகாதாரக் கேடாகவா அமைகின்றன என்ற சந்தேகம் இப்போது கிளம்பியுள்ளது.

இந்தப் பழங்கள் எத்தனை நாட்களுக்கும் வாடாமல் மினுமினுப்பாகக் கண்ணைப் பறிப்பதன் மர்மம் என்ன என சிலர் வியக்கிறார்கள். ஏதோ தெளிக்கிறார்களாமே....? என்று பலர் குசுகுசுப்பதையும் கேட்க முடிகிறது. ஒரு சில பழங்களைத் தின்றவர்கள் வயிற்றுக் கோளாறுக்கு ஆளாகியதாகவும் சிலருக்கு இருமலும் தும்மலும் வருவதாகவும் கதைகள் உண்டு.

நாமறிந்தவரை ஆப்பிள் போன்ற பழங்கள் உலராதிருக்க அவற்றின் மேற்பரப்பில் மெழுகு போன்ற பதார்த்தமொன்று பூசப்பட்டு அனுப்பப்படுகிறதாம். இங்கு அவை குளிரூட்டப்பட்ட பண்டகசாலைகளில் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

இந்த மெழுகுப் பதார்த்தம் உடலைப் பாதிக்காது என அவர்கள் தெரிவிக்கிறார்கள். தண்ணீர் தவிர வேறு ஏதும் -'ஃபோமலின்' போன்ற கிருமி நாசினிகளைத் தெளிக்கிறார்களா என்ற சந்தேகம் பரவியுள்ள போதும் அதற்கு ஆதாரமில்லையென சுகாதாரப் பரிசோதகர்கள் கைவிரிக்கிறார்கள். பழுக்கவைக்கும் வழியாக சிலர் 'காபைட்'டைப் பயன்படுத்துவதுகூட தடைசெய்யப்பட்ட முறையல்ல எனவும் அதனால் சுகாதாரக் கேடு ஏற்பட வாய்ப்பில்லையெனவும் கூறுகிறார்கள். எனினும் தரம், சுவை, வாசனை என்பன மாறுபட வாய்ப்புண்டென்பதை மறுக்கவில்லை.

ஆனால், காயப்பட்ட பழங்களில் இப்பொருட்கள் சுகாதாரக் கேட்டை விளைவிக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். தெளிக்கப்படும் தண்ணீர்கூட அசுத்தமானதாயிருந்தால் காயப்பட்ட பழங்களிலும் மெல்லிய தோலுள்ள முந்திரியைப் போன்ற பழங்களிலும் பக்டீரியா தொற்றி சுகாதாரக் கேடு ஏற்படலாம்.

இதைவிட, பகுதி அழுகிய பழங்களை சிலர் மலிந்த விலையில் திரும்பவும் விற்கின்றனர். வெளிநாட்டு ஒரேஞ்ச் சிலவேளை 4 ரூபாவுக்கும், நாலு பழம் கொண்ட ஒரு குவியல் 10ரூபாவுக்கும்கூடக் கிடைக்கிறது. ஆனால் நம் நாட்டு ரம்புட்டான் பழம் சற்றுப்பெரிதானால் 4 ரூபாவுக்கு மேல் போய் விடுகிறது. இலங்கையில் விளையும் ஒரு நல்ல மாம்பழம் 15 அல்லது 20 ரூபா. ஒரு பப்பாசிப்பழம் 20 ரூபாவுக்குக் குறையாது. அன்னாசி 25ரூபா. சில ஆப்பிள் பழங்களை சீவினால் மேற்தோலின் கீழ் உள்ள சதையில் ஒரு படை கபிலநிறமாகக் கிடக்கிறது. ஒரேஞ்சைத் தொட்டால் வெடித்த றப்பர் பந்துபோல நசிகிறது. ஈரமும் கசிகிறது. பழுதான பழங்களை விற்பதைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. பெருந்தொகை இறக்குமதியில் ஈடுபட்டுள்ள சில புள்ளிகள் சுகாதார அதிகாரிகள் தமது வயலில் மேயவராதவாறு அவர்களுக்கு பிரத்தியேகமாகப் புல்லுப் போடுகிறார்கள் என்றும் ஒரு முணுமுணுப்பு... 'எமக்கேன் வம்பு சாமி!' என்று வாளாவிருப்பவர்களிடமிருந்தும் மெதுவாகக் கேட்கத்தான் செய்கிறது.

நம்நாட்டில் பாவனையாளர் விழிப்புணர்வு பெரிதாக ஏற்படவில்லை. வாழ்க்கையின் அனேக சிரமங்களைச் சகித்தே பழகிவிட்ட எம்மக்கள் இவ்விடயத்திலும் 'கிடைத்தவரை புண்ணியம்' என்று இருந்து விடுகிறார்கள். கோளாறுகள் ஏதும் ஏற்படின் கைவைத்தியமும் கடை மாத்திரையுமாக வீட்டுக் கூரைக்குள்ளேயே தீர்த்துக் கொள்கிறார்கள்.

ஆக, இங்கு வரும் வெளிநாட்டவர்கள் அன்னாசிப் பழம் கேட்டு வாங்கிச் சாப்பிட நாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து ஆப்பிள் சாப்பிடுகிறோம். என்னே நம் பெருமை...! ஆனால் கவனம். •

Photo Sarath Samaranayake

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் முதல் பலி 'உண்மையே'




நக்கீரன்

ஓயாத அலைகள் - 2 என்று பெயரிடப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பாரிய தாக்குதல் முன்னர் "சத்ஜய" நடவடிக்கை மூலம் பறிபோன கிளிநொச்சியை முழுமையாகவும் பரந்தனின் ஒரு பகுதியையும் அவ்வியக்கத்துக்கு மீளப் பெற்றுக் கொடுத்துள்ளது.

மறுபுறத்தில் இலங்கை இராணுவத்திற்கு பல மாதங்களாக கல்லெறி தூரத்திலிருந்தாலும் கால்படாத நிலையில் இருந்த மாங்குளம் நகர்ப்பகுதியைக் கைப்பற்றி கொடி நாட்டி வெற்றிவிழாவை தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பி விட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களிலெல்லாம் மாங்குளம் பறிபோனதுபற்றி மூச்சும் கிடையாது. மாறாக கிளிநொச்சி, பரந்தனில் கிடைத்த மாபெரும் வெற்றிக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

அதே விதமாக அரசாங்கத் தரப்பு, மாங்குளத்தின் மகாத்மியம் பற்றியே முழங்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. கிளிநொச்சி, பரந்தனின் தோல்விகள் பற்றிக் கதையே இல்லை. இராணுவப் பேச்சாளர் ஒருவரோ ஒரு படி மேலே போய் கிளிநொச்சியை விட மாங்குளம்தான் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறி மாங்குள அனுகூலத்தை உயர்த்தியும் கிளிநொச்சிப் பிரதிகூலத்தைத் தாழ்த்தியும் கருத்துக் கூறி உள்ளார்.

இந்தப் பிரசார யுத்தத்தின் பின்னிப் பிணைந்த அங்கமாக போர்க்களச் சேதங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் விளங்குகின்றன. நடைமுறையில் உள்ள செய்தித் தணிக்கைக்கு இக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கட்டாயத்தைத் தவிர்ப்பதற்காகப் போர் நிலைமைப் புள்ளி விபரக் கணக்குகளை இங்கே குறிப்பிடவில்லை. ஆனால் இரு தரப்பினரும் தத்தமது இழப்புக்கள் பற்றி வெளியிடும் தகவல்களை நோக்குகையில் "போரின் முதல் பலி உண்மையே" என்ற கூற்றுத்தான் நினைவுக்கு வருகின்றது.

போர் பற்றியும் போரில் பெறும் வெற்றி பற்றியும் இரு தரப்பினர் மத்தியிலிருந்தும் எழும் வீரதீரப் பிரதாபங்கள், அவற்றையொட்டிய வாதப் பிரதிவாதங்கள் என்னதான் சொன்னாலும் இந்தப் போர் பற்றிய மூடிமறைக்க முடியாத யதார்த்தம் ஒன்று உண்டு. எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டின் வருங்காலச் செல்வமான இளைய சந்ததியையே அழித்துக் கொண்டு போகின்றது என்பதே அக்கசப்பான உண்மையாகும். அத்துடன் படைத் தரப்பினர், போராளித் தரப்பினர் ஆகியோரின் சமூகப் பொருளாதார பின்னணியை எடுத்துக் கொண்டால் அவர்களில் பெரும்பாலானோர் வளம் குறைந்த குடும்பங்களில் இருந்து வருபவர்கள் என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

வாய்ப்பும் வசதியும் கொண்டவர்கள் வேறு தொழிலைத் தேடுகின்றனர். ஆனால் இந்தப் பரிதாபத்துக்குரியவர்களோ யுத்தத்தையே தொழிலாகவும் போர்க்களத்தையே நாடாகவும் கொண்டுள்ளனர். இலங்கை மாதாவின் கருவூலத்தில் உருவாகி அவ்வன்னையின் முலையில் பால் குடித்த சகோதர இனங்கள் தமக்குள் மோதி கொடுமையும் கடுமையும் நிறைந்த சகோரத யுத்தத்தில் ஈடுபடுகின்றன.

கிளிநொச்சியைப் பற்றி எவ்வளவு தான் கிறீச்சிட்டாலும் சரி, மாங்குளத்தைப் பற்றி எவ்வளவுதான் மார்தட்டினாலும் சரி, நடைபெறுகின்ற போர் இரு தரப்பினராலும் வெல்லப்பட முடியாத யுத்தம் என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத சத்தியமாகும். போரை முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் இந்த உண்மையை உணர்ந்து ஓர் பேச்சுவார்த்தை மூலமாக இணக்கத்தைக் காண்பதே அனைவருக்கும் நன்மை பயக்கும். அத்தகைய பகுத்தறிவுடனான மனிதாபிமான முடிவுக்கு இரு சாராரையும் உந்தித் தள்ளக்கூடிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதே சமாதானத்தை வேண்டும் நாகரீக உலகின் கடமையாகும்.

ஆனால் இன்று உரத்து ஒலிக்கும் ஓசைகளோ போரை ஆதரிக்கும் குரல்களாகவே உள்ளன. "வீரவிதான" போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புகள் போர் தரக்கூடிய வர்த்தகம் மூலம் பொருளீட்டும் லாபங்களைக் குறி வைத்து யுத்தத்தைத் தொடர வேண்டும் என முன்னணி வகிக்கின்றன. அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சில சக்திகளும் போருக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் குரல் எழுப்புகின்றன.

தமிழ்த் தரப்பில் போருக்கான பிரதான உந்துசக்தியாக விளங்குவது வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களே. யுத்தத்தின் கொடுமையால் வாடிவதங்கும் சகோதரர் துன்பதுயரம் கண்டு சிந்தை இரங்காதவராக இவர்கள் இருக்கின்றனர். தம்மையும் தம் சுற்றத்தையும் பாதுகாப்பாக பிற நாடுகளுக்குக் கொண்டு சென்றுள்ள இவர்கள், அங்கு ஈட்டும் வருமானத்தின் ஒரு பகுதியைப் போர்ச் செலவுக்ககவே கொடுக்கின்றனர். இத்தகையோரது பங்களிப்பு இக்கொடுமையான போர் தொடர்வதற்கான ஊட்டச்சக்தியாக விளங்குகின்றது.

சிங்கள தமிழ் தேசிய இனங்களிலிருந்து, நடைபெறும் போருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துப் பங்களிப்புச் செய்துவரும் சக்திகளை "நெற்றிக்கண்" வன்மையாகக் கண்டிக்கின்றது. போருக்கான ஆதரவை இச்சக்திகள் மீளாய்வு செய்துகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றது.

சிங்கள இனத்துடன் செந்தமிழர் இனம் சகோரத்துவத்துடன் கூடிய சமாதான சூழலில் சகல உரிமைகளுடனும் சமத்துவமாக வாழ வேண்டும்.

போர் முரசு ஓயட்டும். சண்டைக்கான சங்கநாதம் தணியட்டும். யுத்த பேரிகை ஒலி நிற்கட்டும்.

கௌரவமும் நீதியும் நிறைந்த சமாதான சங்கீதம் நாடெங்கும் ஒலிக்கட்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒரு யானைத் தத்துவம்

மக்கள் ஆணையைப் பெற்றாரோ இல்லையோ ஒரு யானையைப் பெற்றுவிட்டார் ரணில். பல பாகன்மார் தம் பொறியில் தாமே விழுந்துவிட்டதால் தள்ளி நின்று தொட்டாற்றுத் தொண்டுசெய்தவருக்குத் தானாகக் கிடைத்த யானை அது. யானைக்கும் அடி சறுக்குமென்பது பழமொழி. ஆனால் வழிக்கு வர மறுக்கும் இந்த யானையால் இந்நாட்டின் சமாதானம்தான் சறுக்கி விழுகிறது. இருந்தும் யானைக்குத் தீனிபோட அரசியல் வயலில் விளைச்சலில்லாததால் அமெரிக்கா சென்று நிதிசேகரித்த அவர் அங்கே செப்பிய வார்த்தை வேடிக்கை தருகின்றது. யானை எப்போதும் தடைகளைத் தகர்த்துக்கொண்டு முன்னேறித்தான் செல்லுமாம். அது சரி, யானை முன்னேறினால் போதும் தான். இனப்பிரச்சினை எக்கேடுகெட்டும்போய் இலங்கை மக்கள் தவளைகளைப்போல் யானையின் காலின் கீழ் நசிபட்டாலும் கவலையில்லை!



## காக்கை தீவு கழுகருக்கு காவல்



காக்கை தீவுக் கற்பழிப்பும் படுகொலையும் காமுகர் களின் காடைத்தனத்தை மட்டுமன்றி கடமை உணர்வற்ற காவல் துறையினரின் கசப்போக்கிலித்தனத்தையும் அம்பலமாக்கியுள்ளது. கொலையுண்டது ஒரு காவல்துறை அதிகாரியின் மருமகளாக அமைந்துவிட்டதால் தடல் புடலாகத் தேடிப்பிடித்தார்கள். இதுவே சாதாரணமானவர்களுக்கு நிகழ்ந்திருந்தால்..., என்ன 'ஆல்', ஏற்கெனவே நிழ்ந்திருந்திருக்கிறதே. கடற்கரையைத் துப்பரவாக்கியபோது மண்டை ஓடுகள் வெளிவந்தனவே! ஆனால் முகத்துவார பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இப்பகுதியில் கோலோச்சும் காடையரின் இருள் ராஜ்ஜியம் பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட போது அவர் கூறியது அவர்களது மனப்பான்மையை தெள்ளெனக் காட்டுகிறது. காடையர்களின் பிரச்சினையைக் கையாளத்தான் வேண்டும், ஆனால் நாம் முன்னுரிமை அடிப்படையில் தான் செயற்பட முடியும், நாம் பயங்கரவாதத்திற்கே முதலாவது இடம் கொடுக்கவேண்டியிருக்கிறது என்றார் அவர். இதுதான் எமக்குப் புரியவில்லை. போக்குவரத்தைக் கவனிக்கத் தெருவில் நிற்கும் பொலிஸ்காரர் பக்கத்தில் ஒரு பிற்பொக்கெட் திருடன் திருடுவதைக் கண்டால் பிடிக்க மாட்டாரா? பாதுகாப்பு ஒழுங்கமைப்பென்பது எம் உடலில் ஓடும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் தொழிற்பாட்டைப் போன்றது. காயமேற்பட்ட இடத்தை நோக்கி ஓடவேண்டும். இங்கே உண்மையான கதை என்னவென்றால் பாதாள உலகத்தார் போடும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கும் இவர்களுக்கு பயங்கரவாதம் ஒரு சாட்டு! இங்கே பெண்கள் கடுந்தண்டனை கோரவேண்டியது காடையர்களுக்கா இல்லை இப்படியான காவலர்களுக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அரங்கம்

# பேச்சுகளும் வார்த்தைகளும் பேசப்பட... உண்மைகளும்

குருக்ஷேத்திரன்

இலங்கையின் இனப்பிரச்சினைப் போர் முன்னெப்போதுமில்லாத அளவு உக்கிரம் அடைந்துள்ளது. அவ்வுக்கிரத்தன்மையின் பிரதிபலிப்பு கடந்த மாத இறுதியில் வன்னிப் போரமுனைகளில் இடம்பெற்ற இரத்தக் களரி, உயிரிழப்புக்கள் மூலம் தெட்டத் தெளிவானது.

ஒருபுறத்தில் போர் மிகத் தீவிரமடைந்து வருகின்ற நேரத்தில் இன்னொரு புறத்தில் போர் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் பலமடைந்து வருகின்றது. சமாதானத்தையும் சுபீட்சத்தையும் விரும்புகின்ற, வேண்டுகிற நல்லுள்ளங்கள் அனைத்தும் பேச்சுவார்த்தை என்ற கோட்பாட்டினை வரவேற்காமல் இருக்க முடியாது.

ஆயினும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற எண்ணக்கரு எவ்வளவுதான் விருப்புக்குரிய ஒன்றாக இருந்த போதிலும் அதன் சாதக பாதக நன்மைகளை அலசி, ஆராயாது ஒரேயடியாக ஏற்றுக்கொள்வது எவ்வளவு தூரம் நன்மையளிக்கும் என்பது கேள்விக்குறியே.

மூன்றாம் உலகப் போர் என்று சில பத்திரிகைகள் வர்ணிக்கும் தற்போதைய போர் ஆரம்பமான திகதி ஏப்ரல் 18, 1995. 'ஜனவரி 8, 1995இல் கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொள்கின்றோம்' என இரவு 9.30க்கு தொலைநகல் ஒன்றை கொழும்புக்கு அனுப்பிவிட்டு 3 மணித்தியாலங்களில் அதாவது இரவு 12.30க்கு திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு கப்பல்களை விடுதலைப் புலிகள் தாக்கியழித்ததையிட்டு இப்போர் ஆரம்பமானது.

போர் மூண்டதையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கையாண்ட அணுகுமுறை ஈரம்சம் கொண்டிருந்தது. தமிழ் ஈழத்துக்குக் குறைவான ஆனால் சமஷ்டியை ஒத்த அதிகாரங்கள் தமிழ்ப்பகுதிகளுக்குக் கிடைக்கக்கூடிய விதத்தில் அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தக்கூடிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது ஓரம்சம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கெதிரான போரினைத் தீவிரப்படுத்தி அவ்வியக்கம் அதுவரை அனுபவித்துக் கொண்டிருந்த பிரதேச ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து பலவீனப்படுத்துவது இரண்டாவது அம்சம். புலிகளை நன்கு பலவீனப்படுத்துவதன் மூலம் அவ்வியக்கத்தை பேச்சுவார்த்தைக்கு வரவழைக்கச் செய்யலாம் அல்லது புலிகளை ஓரம்கட்டி அவ்வமைப்பின் பங்களிப்பு இல்லாமலேயே ஓர் அரசியல் தீர்வினை நடைமுறைப்படுத்தலாம் என்பது இவ்விரண்டாம் அம்சத்தின் குறிக்கோள்கள்.

## சங்கடத்தில் சமாதானம்

அரசாங்கத்தின் இந்த அணுகுமுறைக்கு அதாவது புலிகளை அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தி, இராணுவ ரீதியாகப் பலவீனமடையச் செய்யும் நோக்கத்துக்கு சர்வதேச ஆதரவு பெருமளவில் கிடைத்தது. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் இவ்வரசாங்கத்தின் அணுகுமுறையில் குறை கண்டதாகத் தெரியவில்லை.

இராணுவம் ஆரம்பத்தில் சில வெற்றிகளைப் பதிவு செய்துகொண்ட போதிலும் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வன்னிப் பிரதேசத்தில் போரில் பல பின்னடைவுகளைப் பெற்றுக்கொண்டே வருகின்றது. யாழ்ப்பாணத்தில் புலிகளின் மறைமுகப் பிரசன்னம் அதிகரித்துவருகின்றது. கிழக்கிலும் சில பிரதேசங்களில் புலிகளின் ஆதிக்கம் உள்ளது.

அத்துடன் பிரதேச ஆதிக்கம் புலிகளுடன் இல்லாது போனாலும் ஓர் பலமான கெரில்லா அல்லது கரந்தடிப் போர்க்குழுவாக புலிகள் இருப்பார்கள் என்றும் பேசப்பட்டு வருகின்றது. எனவே புலிகளை ஓரம் கட்டி தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் அல்லது பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள நிர்ப்பந்திக்கலாம் என்று முன்பிருந்த நம்பிக்கையும் நலிவடைந்து வருகின்றது.

அரசியல் இராணுவ முனைகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைமை இலங்கைத் தீவில் சமாதான சகவாழ்வு ஏற்படுமா என்ற அங்கலாய்ப்பினை விஸ்வரூபம் எடுக்க வைத்துள்ளது. இந்நிலையில் இத்துன்பகரமான நிலைமையை மாற்றியமைக்க ஒரு வித்தியாசமான முன்முயற்சியே தேவைப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய ஒரு முன்முயற்சிக்கான பூர்வாங்கமே அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையாகும். நிலவுகின்ற இருளினை நீக்கும் நம்பிக்கை ஒளிக்கீற்றாக இந்தப் பேச்சுவார்த்தைக்கான வேண்டுகோள் நிலவுகின்றது.

வெளிநாட்டு அரசாங்கங்கள், சில அரசு சார்பற்ற நிறுவனங்கள், சமாதானத்துக்கான அமைப்புகள், மதத் தலைவர்கள், இலங்கைத் தமிழ்க் கட்சிகள் போன்ற பல்வேறு தரப்புகளிலிருந்து பேச்சுவார்த்தைக்கான கோரிக்கை எழுப்பப்பட்டு வருகின்றது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வும் "அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நிபந்தனையின்றி தொடங்க வேண்டும்" என்று வலியுறுத்தி வருகின்றது.



யானைச் சின்னக் கட்சி என்ன காரணத்துக்காக அரசு - புலிகள் பேச்சுவார்த்தைகள் நிபந்தனையின்றி நடக்க வேண்டும் என்று கோருகிறது என்பது முழுமையாக விடுவிக்கப்பட முடியாத புதிராகவே உள்ளது. ஆனால் ஐ.தே.க. இத்தகைய பேச்சுவார்த்தைகள் இரு தரப்பினருக்குமிடையிலும் ஆரம்பமாக வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது பேச்சுவார்த்தைகளுக்கான கட்டாயத்தை பெருமளவில் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

## நிபந்தனைகளின் அவசியம் ஏன்?

புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென கோரிக்கை எழும்போதெல்லாம் அரசாங்கம் ஒரு மறுமொழியைக் கூறி வருகிறது. உரிய காலம் வரும்போது சில நிபந்தனைகளுக்கமைய புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்பதே அதுவாகும். இதில் நிபந்தனைகள் என்ற வகையறாவில் முக்கியமாக உள்ளவை "தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட வேண்டும், ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்" என்பதாகும்.

இத்தகைய முன்நிபந்தனைகள் விதித்து பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பது மறைமுகச் சரணாகதிக்கு ஒப்பானது. தன்மானமுள்ள எந்தவொரு விடுதலை இயக்கமும் இவ்வாறான நிபந்தனைக்குட்பட்டு பேச்சுவார்த்தைகளுக்கு வரமாட்டாது. எனவே நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகளே தேவை என்ற கருத்தும் நிலவுகின்றது. இக்கருத்தில் ஓரளவு நியாயம் உள்ளது என்பது உண்மையே.

இலங்கையில் நடத்தப்பட்ட பல பேச்சுவார்த்தைகள் நிபந்தனைகள் போடப்பட்டும், போடப்படாமலும் நடத்தப்பட்டதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இறுதியில், எவையுமே சமாதானத்தைக் கொண்டுவரவில்லை. மாறாக, முன்னிருந்ததை விட மிக உக்கிரமான யுத்தத்தையே இந்நாட்டு மக்கள்மீது சுமத்தியது. எனவே, இன்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமா என்ற சந்தேகங்களை விட, பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டாலும் அவை பலனைத் தருமா, சமாதானத்தை உருவாக்குமா என்கின்ற சந்தேகங்களும் விரக்தியுமே மேலோங்கி நிற்கின்றன.

ஏனெனில், புலிகளைப் பற்றி அரச தரப்பினருக்கும், அரசாங்கம் பற்றி புலிகளுக்கும் இருக்கும் அனுபவங்களை விட, இவ்விருதரப்பினரையும் பற்றி மக்களுக்கு இருக்கும் அனுபவம் அதிகமே! எனவே, பேச்சுவார்த்தைகள் நிபந்தனைகளின்றி நடைபெறவேண்டுமா நிபந்தனைகளோடு நடைபெறவேண்டுமா.... அப்படியாயின் போடப்பட வேண்டிய நிபந்தனைகள் எப்படியானவையாக இருக்கவேண்டும் என மக்களிடம் கேட்டால்கூட உருப்படியான பதில் ஏதும் கிடைக்கலாம். ஆனால் இன்னொரு கோணத்திலிருந்து நோக்கினால், முன்நிபந்தனைகள் இல்லாமல் ஒரு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடக்குமா என்பதும் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. எந்தவொரு ஆயத்தமோ அல்லது ஏற்பாடோ இல்லாமல் ஒரு பேச்சுவார்த்தை அமைய முடியாது. அதுவும், நீடித்து வெற்றிகரமான பலன்களை அளிக்க வேண்டுமாயின், இப்பேச்சுவார்த்தை ஆரம்பத்திலிருந்தே வரையறுக்கப்பட்ட ஒரு கட்டுமானத்துக்குட்பட்டிருக்க வேண்டும்.

**ஏனெனில், புலிகளைப் பற்றி அரச தரப்பினருக்கும், அரசாங்கம் பற்றி புலிகளுக்கும் இருக்கும் அனுபவங்களை விட, இவ்விருதரப்பினரையும் பற்றி மக்களுக்கு இருக்கும் அனுபவம் அதிகமே! எனவே, பேச்சுவார்த்தைகள் நிபந்தனைகளின்றி நடைபெறவேண்டுமா நிபந்தனைகளோடு நடைபெறவேண்டுமா.... அப்படியாயின் போடப்பட வேண்டிய நிபந்தனைகள் எப்படியானவையாக இருக்கவேண்டும் என மக்களிடம் கேட்டால்கூட உருப்படியான பதில் ஏதும் கிடைக்கலாம்.**

## பேச்சுக்கு அடிப்படை : அரசியல் நேர்மை

இந்த அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அன்றாடப் பிரச்சினைகளை அலசுவதா அல்லது அடிப்படைப் பிரச்சினைகளை அலசுவதா என்ற தெளிவின்றி தடுமாறி தோல்வி அடைந்தமைக்கான முக்கிய காரணி பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பு உருவாக்கப்படாததும், அதனை உருவாக்குவதற்கு இருதரப்பினரும் முயற்சி எடுக்காததும்தான்!

எனவே, உண்மையில் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டுமென விரும்புபவர்கள் ஒரு பூர்வாங்க வரைமுறையை உருவாக்கியே தீர வேண்டும். அப்படிச் செய்ய முற்படும்போது சில நிபந்தனைகள் இரு தரப்பினராலும் விதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது. பேச்சுவார்த்தைக்கான ஒழுங்கேற்பாடுகளின் உள்ளடக்கம் இரு தரப்பினருக்கும் கருத்தொருமிப்புக் கண்ட நிபந்தனைகளைக் கொண்டதாகவே விளங்கும்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எந்தத் தரப்பும் தனக்கென ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்காது கலந்துரையாடும் அரங்கிற்கு வராது. அவ்வாறு நிகழ்ச்சி நிரல் ஒன்றை முன்கூட்டியே உருவாக்கும்போது அங்கே முன்நிபந்தனைக் கோட்பாடு தானாகவே புகுந்து கொள்கின்றது. அதே சமயம் இப்படியான நிகழ்ச்சி நிரல் இன்றி "சும்மா" பேச்சுவார்த்தைக்கு வருவது ஓர் அர்த்தமற்ற கேலிக்கூத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவிர, நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தை என்ற பதத்துக்கமைய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதில் மற்றொரு சிக்கல் உள்ளது. குறிப்பாக ஐ. தே. க. கூறுவது போல போரினை ஒருபுறத்தில் நடத்திக் கொண்டு மறுபுறத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதில் ஒரு வில்லங்கம் உண்டு. அது போரினால் சாதாரண மக்களுக்கு ஏற்படும் அனர்த்தமே!



இப்படியான சூழலில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகள் இருதரப்பினரையும் கட்டுப்படுத்தாது. இரு சாராரும் தத்தமது தரப்புக்கு சாதகமானது என்று நினைக்கும் எதையும் செய்யலாம். இது சாதாரண மக்களைப் பொறுத்தவரை மிகவும் ஆபத்தான விடயம். ராணுவத் தரப்பில் உள்ள பேச்சுவார்த்தையை விரும்பாத சக்திகள் போர் நடவடிக்கை என்ற பேரில் எதையும் செய்யலாம். உதாரணத்துக்கு ஒன்றாக, அப்பாவிப் பொதுமக்களைக் கடுமையாகப் பாதிக்கும் நடவடிக்கையில் இறங்கலாம். அப்படி நடந்தால் மறுமுனையில் பேச்சுவார்த்தைகள் உருப்படியாக நடக்க முடியாது.

இந்த நோக்குடன், ஒரு அதீத கற்பனைக்கு இடம் கொடுத்தால் பேச்சுவார்த்தை நடக்கும் இடத்தைக் கூட இராணுவம் சுற்றிவளைத்து கடும் நடவடிக்கை எடுக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதைக் கூட தட்டிக்கழித்துவிட முடியாது.

விடுதலைப் புலிகள் தரப்பை எடுத்துக்கொண்டால், அதன் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தால் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் அவ்வியக்கம் தன் எதிர்கால முன்னேற்றத்துக்கு அடிப்படையாக விளங்கும் என்று கருதிச் செய்த கருமங்கள் பலவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பாக புலிகள் பார்வையில் "எதிரிகள்" என்றும் "துரோகிகள்" என்றும் கருதப்படும் மாற்றுக் கருத்துக் கொண்டோர், சமாதான விரும்பிகள் போன்றவர்கள் நிலைமை மிகவும் ஆபத்தாக போய்விடும். பேச்சுவார்த்தை ஒருபுறம் நடக்க "களை" எடுக்கிறோம் எனக் கூறிக் கொண்டு ஆயிரமாயிரம் "அமிர்தலிங்கங்கள்" சுட்டுக் கொல்லப்படலாம். எண்ணற்ற "கந்தன் கருணை"கள் நடைபெறலாம்.

மேலும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் என்ற பதத்துக்கமைய புலிகள் அக்காலகட்டத்தில் என்ன செய்தாலும் குறை காணப்பட முடியாது. பேச்சுவார்த்தையைக் கவசமாகக் கொண்டு பல அனர்த்தங்களைச் செய்யலாம். பேச்சுவார்த்தைக்கு வரும் அமைச்சர்களைக் கூட பலிக்கடாவாக்கலாம். ஆகவே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்றெழும் கோரிக்கை அடிப்படையில் ஆபத்தானது, நடைமுறையில் சாத்தியமற்றது என்பது சகல தரப்பினராலும் உணரப்படவேண்டும்.

இலங்கையிலுள்ளது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல இனப்பிரச்சினைதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு வைக்கப்பட்ட தீர்வுத் திட்டமும்கூட அர்த்தமற்றுப் போகும் அளவுக்கு யுத்தம் உக்கிரமடைந்துள்ளது என்பதும், இந்த அரசாங்கமும் இதனைத் தீர்க்கமாட்டாது என்கின்ற எண்ணம் படிப்படியாக மக்கள் மனதில் உருவாகி வருவதையும் புறக்கணிக்க முடியாது.

அதேவேளை, புலிகளோடு பேசாமல் தீர்வெதுவும் ஏற்படப் போவதில்லை என்பதற்குச் சொல்லப்படும் நியாயங்களின் அளவுக்கு, புலிகளோடு பேசினாலும் தீர்வு வரப் போவதில்லை என்று சொல்லப்படும் கருத்துக்கான நியாயங்களும் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் எவரும் மறுப்பதற்கில்லை.

கடந்த காலத்தில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசாங்கங்கள் நடந்துகொண்ட நேர்மையற்ற அணுகுமுறை எல்லோருக்கும் தெரிந்ததே. எனவே, அரிசியையும் பருப்பையும் பற்றிப் பேசுவதை விட அரசியல் தீர்வைப் பற்றியே நாம் பேசுவோம் என ஒரு நிபந்தனையைப் போடவேண்டியது போராட்டத்தை நடத்துபவர்களின் தலையாய கடமையாகும். அதேவேளை பேச்சுவார்த்தையைக் குழப்புகின்ற வகையிலான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடமாட்டோம் என்று உறுதிப்படுத்துவதும் அவர்களின் கடமை.

***அந்த அடிப்படையில், குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கமைய பேச்சுவார்த்தை நடக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர எவ்வித நிபந்தனையுமற்ற பேச்சுவார்த்தை தேவை என்பதை அங்கீகரிக்க முடியாது.***

அந்த அடிப்படையில், குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கமைய பேச்சுவார்த்தை நடக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர எவ்வித நிபந்தனையுமற்ற பேச்சுவார்த்தை தேவை என்பதை அங்கீகரிக்க முடியாது.

ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருக்கக் கூடிய முன்நிபந்தனைகள் அகற்றப்பட வேண்டுமே தவிர நியாயமான நிபந்தனைகள் நீக்கப்பட முடியாது.

நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய ஒழுங்கேற்பாடுகளுக்கமையவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், அவை போலியான குற்றச்சாட்டுகளினால் குழப்பப்பட்டுவிடாமல் தொடர்ந்து நடைபெறவும் வேண்டும். கூடிய விரைவில் உருப்படியான தீர்வு காணப்படவும் வேண்டும். ●

*அரசியலை அரசியல்வாதிகளுக்கெனவும், பொருளாதாரத்தை பள்ளிப் பேராசிரியர்களுக்கெனவும் நாம் வெறுமெனே ஒதுக்கிவிட்டு இருந்துவிட முடியாது. மக்கள் தாங்களே சிந்திக்க வேண்டும். ஏனெனில் மக்கள் மட்டுமே செயலாற்ற வல்லவர்கள்.* - ஹென்றி ஜோர்ஜ்

*யுத்தத்தை ஆரம்பிப்பது மிகவும் சுலபம். ஆனால் அதை நிறுத்துவதோ மிக மிகக் கடினம். ஏனெனில் எப்போதும் யுத்தத்தின் ஆரம்பமென்பதும் முடிவு என்பதும் ஒரே மனிதர்களின் கைகளில் தங்கியிருப்பதில்லை.* - சலுஸ்ட்

*சமாதானம்கூட பெரிய விலை செலுத்தியே பெறப்படுகிறது.* - பென்சமின் ஃபிராங்ளின்

*கௌரவத்துடன் பேணப்படாத சமாதானம் சமாதானமேயல்ல* - ஜோன் ருஸ்ஸல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்னஞ் சின்ன

## உலகின் மிகச் சிறிய வண்ணப் பறவை

"சின்னஞ் சிறிய வண்ணப் பறவை என்னத்தைச் சொல்லுதம்மா...."

பிரபலமான இந்தப் பழைய பாடல் இன்றும் எமது காதுகளில் ரீங்காரமிடுகிறதல்லவா? சின்னஞ்சிறிய விலங்குகளில், அவை எவ்வளவு கொடியனவாக இருந்தாலும் கூட பட்டென எமக்கு ஒரு பரிவு ஏற்படுவது இயற்கையல்லவா? ஒரு புலிக் குட்டி அல்லது சிங்கக் குட்டி எதுவாயினும் சின்னஞ் சிறியதாக இருக்கையில் ஆசையாக விளையாட வேண்டும் போல் மனதில் குதூகலத்தைக் கிளப்பி விடுகிறதல்லவா?

அவற்றை நாம் காணும் போது எம்மையறியாமல் எமது மனமும் நம் சின்னப் பிராயங்களை நோக்கித் தாவிச் சென்றுவிடுகிறது. வளரும்போது சமூகம், ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம், கௌரவம்..... என்ற பல்வேறு கயிறுகளால் நாம் கட்டப்பட்டு விடுவதால் ஒரு குழந்தையைப் போல துள்ளிக் குதித்துச் சிரித்து மகிழவோ, ஓடி விளையாடவோ





பட்டவர்த்தனமாக எம் ஆசையை வெளிப்படுத்தவோ முடிவதில்லை. ஆனால் இவ்வாறு 'சின்னவற்றைக்' காணும் போது எம்மால் அந்த நிலைக்குச் சில நிமிடங்கள் சென்று திரும்ப வழி கிடைக்கிறது.

உலகிலேயே அதி சிறிய பறவை இதுவாம். ஒரு வண்டின் அளவே இருந்த இதை முதலில் பார்த்தவர் ஒரு வண்டென்றே நம்பிவிட்டார். இரண்டு அங்குலமே இதன் நீளம். உண்மையான பருமனில் இக் குருவியைப் படத்தில் பார்த்தால் அதன் வடிவம் புலப்படாதென்பதற்காக படப்பிடிப்பாளர் பென்சிலோடு சேர்த்துப் பெரிதுபடுத்தி இங்கே தந்துள்ளார். பென்சிலின் உண்மையான அளவில் குருவி எவ்வாறிருக்குமென நீங்கள் ஊகிக்கலாம். இந்த அதி சிறிய குருவியின் பெயர் மெல்லிசுகா ஹெலெனே (Mellisuga Helenae) கியூபா நாட்டில் காணப்படும் மெல்லிசுகாவின் எடை எவ்வளவு தெரியுமா? இரண்டே இரண்டு கிராம்கள்தான்.

கோப்பிக் கொட்டையளவு முட்டை இடும் இக்குருவி, அவற்றை, ஒன்றரை அங்குலமே அளவுள்ள சின்னஞ்சிறு கூடொன்றினுள் இட்டுப் பாதுகாக்கிறது. மரப்பட்டைகள் மற்றும் சிலந்தியிடமிருந்து களவெடுத்த வலைகள் போன்வற்றைக் கொண்டு கூட்டைக் கட்டுகிறது. இவை தனிமைப் பிரியர்கள். அதனால் இவற்றைக் கண்டுபிடித்து, படம் பிடித்துத் தருவதற்கு மிகுந்த சிரமப்பட்டார்களாம்.

அதே வேளை, அவர்களை ஏமாற்றிய மற்றொரு விடயம் இந்தப் பறவைகள் பறக்கும்போது இவற்றின் இறக்கைகளைக் கண்டுகொள்ளவே முடியாதிருந்ததுதானாம். ஒரு செக்கனுக்கு 80 தடவைகள் என்ற அதி வேகத்தில் சிறகடிப்பதால் சிறகுகளின்றிப் பறப்பது போல் தெரிகிறதாம். இதன் சிறகோசை மெல்லிய ரீங்காரத்தைக் கிளப்புவதால் இவற்றை ரீங்காரப்பறவை (Humming Bee) என்கிறார்கள். தான் இருக்கும் பிரதேசத்தில் தன் இனத்தின் மற்றொரு குருவி நுழைந்து விட்டால் 'அந்தோ, உடனே சண்டைதான்! கலவிக்கென இப் பறவைகள் ஒரு சில செக்கன்கள்தான் செலவிடுகின்றன. உணவுக்கு சின்னச் சின்ன சிலந்திகள், பூச்சிகள், சக்களை வேட்டையாடுகின்றன. •



இரண்டே அங்குலக் கூடு

• நன்றி :- நஷனல் ஜோ.்.க்ர.்.பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொப்புள் கொடியறுத்து
முதலில் என்னை
வெட்டிவிட்டவள் தாய்.

"உனக்கும் படிப்புக்கும்
எட்டாம் பொருத்தம்" -
அந்த அறுவைப் பாட நேரத்துக்கு
சிரிப்பு மூட்ட என்னைப்
பயன்படுத்திக் கொண்டவர் குரு.

இருவருக்கும் பொதுவான
ஒரு விடுதலை தாகத்தில்
தெருவில் சுட்டுப் போட்டுவிட
என்னைத் தேடியவன் நண்பன்.

நெடுநாள் பழக்கத்தின் பின்
நாம் தனியே அமர்ந்திருந்த
கடற்கரை இருள் பொழுதின்
அடுத்த நாள்-
கார் வைத்திருந்த நாதனைக்
கைப்பிடித்துப் போனாள்
என்னை விரும்பியவள்.

எல்லோரும் மிதித்துப் போகும்
புல்லுக்கும்
இருக்கிறது மழையின் தாகம்!

– இடக்கரடக்கள் –



# எப்படி நான் போவேன்?

எப்படித்தான் இந்த இடம் விட்டு நான் போவேன்
நித்தம் எனக்கிங்கே
நிழல் விரித்த மாமரங்கள்,
கிட்டி, கிரிக்கெற் என்றெனை வளர்த்த குச்சொழுங்கை,
அரிவரியைக் கற்ற அரையிடிந்த என் பள்ளி,
நெஞ்சைச் சில கணங்கள் நெகிழவைக்கும்
என்னூரின்
மந்திர மணியோசை,
மாலையிலே பொடியளுடன்
கும்மாளம் போடுகிற கோயிலடி,
நிதமிரவில் விளக்கு வைக்கும்
வீட்டுக்குப் பக்கத்தே வீற்றுள்ள
வைரவரின் சூலம்,
வளர்த்து வைத்த ரோசாக்கள்,
பாட்டாவுடன் முந்திப் பொடிநடையாச் சுற்ற: அவர்
காட்டி அறிவித்த கதைசொல்லும் கட்டடங்கள்,
சந்தத் தமிழ்க் காற்று,
சகோதரம்போல் உறவாடும் பெட்டிக் கடைகள்,
பிறப்பு முதல் கால்மறவா அந்தத் தெருக்கள்,
ஆச்சிக்குக் கொள்ளி வைத்த
அந்தச் சுடலை,
யானெனக்குள் தவமிருக்கும்
அடிவளவுக் கொட்டில்,
நானின்றும் அமர்ந்தயரும்
அப்பப்பா பாவித்த அரச கட்டில்,
எனையுந்தான்
கவிபாட வைத்த எங்கள் கடற்கரைகள்,
என் முதுசப் பொன் வயல்கள் யாவும்
புலம் பெயராது ஓய்ந்திருக்க
எப்படி நான் இவற்றை இழந்து வெறும் சடமாய்
தப்பி உயிர்காத்து தழைத்திடுவேன்?
சொல்லுங்கோ!

– த. ஜெயசீலன்,
நல்லூர்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கொலைகள் சரியென்றால் சுட்டவர்கள் சொல்லட்டும்... - வீ. ஆனந்தசங்கரி

அமுதுக்கு பிரத்தியேக பேட்டி

சந்திப்பு: பாஸ்கரன்

**கேள்வி:** யாழ் மேயர் பதவி வெற்றிடமாக உள்ளதே... புதிய மேயரை நியமிக்கப் போவதில்லையா?

**பதில்:** மேயர் பதவியைப் பொறுப்பேற்கக் கூடிய பலர் எம்மிடம் இருக்கிறார்கள். முன்னைய மேயர் சிவபாலன் கொல்லப்பட்ட சம்பவம் நடந்து ஒரு மாதத்துக்குள் அவசரமாக அதை நிரப்ப வேண்டியதில்லை என எண்ணுகிறோம்.

**கேள்வி:** மேயர் பதவி யாழ் பணிகளை மேற்கொள்ள முக்கியத்துவம் வாய்ந்ததல்லவா?

**பதில்:** ஆம். அதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்தேயுள்ளோம்.

**கேள்வி:** ஒருவரும் பொறுப்பேற்காவிட்டால் மேயர் பதவியை நீங்களே பொறுப்பேற்பதாகச் சொன்னீர்களே.... அதில் மாற்றமேதுமுண்டா?

**பதில்:** அவ்வாறு சொன்னேன். உண்மை. ஆனால் அது ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்தில். மேயர் சிவபாலன் கொல்லப்பட்ட அதிர்ச்சி நிறைந்த வேளையில் அவரது இறுதிக் கிரியை நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டிருக்கையில் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டு 'அடுத்த மேயர் யார்? யாரும் மேயராக முன்வருவார்களா? உங்களிடம் இதற்கு ஆட்கள் உள்ளார்களா?' என்று சரமாரியாக வினவினார்கள். எம்மிடம் ஆட்கள் உள்ளார்கள். பலர் தயாராக உள்ளார்கள். ஆனால் யாரை நியமிப்பது என்று சிந்திக்க அது வேளையல்ல. 'யாரும் முன்வராவிட்டால்.....' என்று கேட்டார்கள். 'அந்தப் பேச்சுக்கு இடமில்லை. அப்படி ஒருவரும் முன்வராவிட்டால் நானாவது மேயராவேன்' என்றேன்.

இது அந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்ட கூற்றேயன்றி வேறல்ல. இதனை வைத்து, பலர் பல மாதிரி வியாக்கியானப்படுத்துகிறார்கள். ஆனால் நான்தான் மேயராக வேண்டுமென்றில்லை. அதற்கு நான் தயங்கவுமில்லை. வேண்டுமென்றால் ஏற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குத் தகுதி வாய்ந்த பலர் எமக்கு உள்ளார்கள்.

**கேள்வி:** யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது சிவில் நிர்வாகத்தை சீரமைக்க முனைவதை சிலர் அரசிற்கு நற்பெயர் ஈட்டிக் கொடுக்க ஒத்துழைப்பதாகக் குறை காண்கிறார்களே?

**பதில்:** இதில் விசனத்துக்குரியது என்னவென்றால், சிவில் நிர்வாகத்தில் கூட்டணிதான் தலையிடக் கூடாது மற்றய எல்லோரும் தலையிடலாம்? எங்கே சிவில் நிர்வாகம் நடக்கவில்லை? எல்லா இடமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. கிழக்கில் நடக்கிறது. வவுனியாவில் நடக்கிறது. அது என்ன யாழ்ப்பாணத்தில் கூட்டணிக்கு மட்டும் ஒரு தனி விதிவிலக்கு? இதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கூட்டணியென்றால் ஏதோ தீட்டு மாதிரி. ஆனால் எந்தக் காரணம் கொண்டும் இந்த யாழ்ப்பாணத்து உள்ளூராட்சித் தேர்தலை வைக்கச் சொல்லி நாம் சொன்னதும் கிடையாது. மிகவும் தீவிரமாக எதிர்த்தோம் - அங்கு ஏற்ற சூழ்நிலை உருவாக வில்லையென.

**கேள்வி:** அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடு, நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் சாதாரண மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு அவசியமென்று நீங்கள் கருதவில்லையா? சூழ்நிலை சுமுகமாகவில்லையென்று வாளாவிருக்கலாமா?



ஓர் அரசியல் குடும்பத்தின் வழிவந்த ஆனந்தசங்கரி அவர்கள் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர். தந்தையார் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப உறுப்பினர். ஆனந்தசங்கரி லங்கா சமசமாஜக் கட்சியினூடாக அரசியலில் பிரவேசித்தவர். 1964 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் LSSP சார்பாக போட்டியிட்டு வென்றார். 65ல் LSSPஐ விட்டுப் பிரிந்து தமிழ்க் காங்கிரஸில் சேர்ந்த அவர், 70ல் அக்கட்சி சார்பில் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டினார். 1975ல் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்தார். 1977 தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் வெற்றியீட்டினார். ஆனந்தசங்கரி மட்டுமன்றி அவரது குடும்பத்தவர்களும் அரசியலில் தம்மை அர்ப்பணித்தவர்கள்.... தம் உயிர்களையும் கூட. இவரது அண்ணனான ராஜசங்கரியும் தம்பியான ஞானசங்கரியும் ஆயுத இயக்கங்களால் கொல்லப்பட்டனர். இவரது ஒன்றுவிட்ட தம்பியான யோகசங்கரி ஈ.பி.ஆர்.எல்.எப். இன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து 90ல் பத்மநாபாவுடன் சென்னையில் கொல்லப்பட்டார்.

**பதில்:** உள்ளூராட்சி மன்றங்களின் வேலை உள்ளூர் வேலைகள். அவை இயங்குவதால் சிவில் நிர்வாகம் சுமுக நிலைக்கு வந்துவிட்டது என்று அர்த்தமல்ல. இந்த வேலைகள் முன்னரும் நடந்து கொண்டுதான் இருந்தவை. அவை செயல்பட முடியாது போனபோதுதான் நாம் உள்ளூராட்சி மன்றங்களை செயல்பட வைக்க முன்வந்தோம். இச்செயற்பாட்டால் யாருக்கும் அரசியல் லாபமில்லை. சாதாரண மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளில்தான் இவை உதவுகின்றன. அங்கே மின்சாரமில்லை. அதை யார் கவனிப்பது? வாந்திபேதி பரவுகிறது. யார் பார்ப்பது? இதில் யாருக்கு எதிராகவும் நாம் செயற்படவில்லை. இவை ஒழுங்காக செயற்பட வேறு யாரும் வழி செய்தால் நாம் விட்டுட்டுப் போகத் தயார்.

**கேள்வி:** இனி ஏதும் தேர்தல்கள் நிகழ்ந்தால் பங்குபற்றுவீர்களா?

**பதில்:** சுமுக நிலை திரும்பாத வரை தேர்தல்கள் வைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. நியாயமான தேர்தல்களாக அவை அமையச் சாத்தியமில்லை. எனினும் அதை மீறி அரசாங்கம் தேர்தலை வைக்க முடிவு செய்தால் நாம் பங்குபற்றுவோம். ஏனெனில் ஆளத்தகுதியில்லாத ஏதேனும் ஒரு குழுவிடம் சந்தர்ப்பவசமாக ஆட்சி செல்வதைத் தவிர்ப்பதற்காக.

**கேள்வி:** அமிர்தலிங்கம் முதல் அண்மையில் சிவபாலன் வரை துரோகிகள் என்ற கருத்திலேயே கொல்லப்பட்டனர். அவ்வாறு உங்கள் மீது துரோகப் பட்டம் சூட்டுவதையிட்டு என்ன தெரிவிக்கிறீர்கள்?

**பதில்:** இதற்கு நல்ல உதாரணம் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கிருந்து துவக்குச்சூடு வாங்கி உயிர் தப்பியவர்கள் சிவசிதம்பரமவர்கள். ஆனால் அவர் அதற்குப் பின்னும் தனது தள்ளாத வயதிலும் அரசியலில் ஈடுபட்டு வருகிறார். இதை யாராவது துரோகச் செயலெனக் கணித்தால் துரோகம் என்பதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமே வேறு ஏதோவாகத்தான் இருக்கும். அதே போல கணவர் கொலையுண்டதைக் கண்ட சரோஜினி யோகேஸ்வரனோ அல்லது சிவபாலனோ தயங்காது அரசியல் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் ஆசையாலல்ல. எந்த வகையில் எம்மைத் துரோகிகள் என்று கூறுவார்கள்? அதைத் தீர்மானிக்க வேண்டியது மக்கள். மக்கள் தீர்மானிக்கக்கூடிய ஒரு சரியான தேர்தல் 1977ற்குப் பிறகு எமது பிரதேசத்தில் நடக்கவுமில்லை.

**கேள்வி:** துரையப்பாவை நீங்கள் துரோகியெனக் கூறினீர்களென்றும் அதன் விளைவாகவே அவர் கொல்லப்பட்டாரென்றும், நீங்கள் தொடக்கி வைத்த "துரோகிகள்" என்ற பதம் உங்களையே பதம் பார்க்கிறது என்ற கருத்துக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

**பதில்:** துரையப்பாவை நாங்கள் சுடச் சொல்லிச் சொல்லவில்லை. துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டமை ஒரு பெரும் சாதனையாகவும் நாம் கருதவில்லை. அந்த நேரத்தில் இந்த கொலைச் சந்தேக நபர்களது வழக்குகளை எமது தலைவர்கள் பேசியிருக்கலாம். அது சரியோ பிழையோ ஏதோ செய்து விட்டார்கள். அந்த இளைஞர்களை நாம் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டதேயொழிய துரையப்பா துரோகிதான் என்று உறுதிப்படுத்துவதற்காக நாம் வாதிடவில்லை. துரையப்பா துரோகியென்று, அவர் அரசாங்கத்தோடு நின்றபடியால், எம் இனத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்ற பொதுவான கருத்தில் மேடைகளில் யாரும் கூறியிருக்கலாம். ஆனால் நான் கூறவில்லை. இதற்கு, குறிப்பாக அவர் கொல்லப்பட வேண்டியவர் என்று பொருளாகாது. ஆனால் இப்போது எவரும் எதுவும் சொல்லலாம்தானே.... ஆட்களில்லைதானே? சில பத்திரிகைகள் சில கதைகள் எழுதும். தம்மைத் தட்டிக்கேட்க ஆளில்லை என்று நினைத்துக் கொண்டு தமக்கு சாதகமாக வரலாறும் எழுதும். அவர்கள் எழுதுவது அல்லவே உண்மை.





"செய்தவர்களேதான் உரிமை கோர வேண்டும். தாம் ஒரு சரியான இலட்சியத்தை அடையலாமென நம்புவார்களாயிருந்தால், அதற்கு உரிமை கோரி காரணத்தை வெளிப்படுத்தவன்றோ வேண்டும். அவர்கள் பொறுப்பேற்காத வரைக்கும் நாங்களும் நேரடியாக எவரையும் குற்றம்சாட்ட முடியாது. யாரோ கையெழுத்துப் போட்டு எந்த அத்தாட்சியுமில்லாமல் ஒரு கடிதத்தைப் போட, இன்னொருவர் ஒரு துப்பாக்கியைக் கொண்டுவந்து இரண்டு தோட்டாக்களைப் பாய்ச்சிவிட்டு ஒரு துரோகியைக் கொன்றுவிட்டோமென்று வேறொரு பெயரில் உரிமை கோரும்போது நாம் என்ன செய்வது?"

**கேள்வி:** உங்கள் தலைவர், முக்கியஸ்தர்கள் கொலை செய்யப்பட்ட போதெல்லாம் நீங்கள் அப்படுகொலைகளை கண்டித்தீர்களேயொழிய கொலையாளிகளை வெளிப்படுத்தவில்லை - உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்த சந்தர்ப்பங்களிலும் கூட... இது ஏன்?

**பதில்:** ஒரு குற்றவாளி மீது கடுகளவு சந்தேகம் இருந்தாற் கூட அச்சந்தேகத்தை குற்றவாளிக்காக விட்டுக் கொடுப்பதுதான் நீதி, வழமை. இந்த விடயத்தில், இந்த நாட்டில் யாரிடம் ஆயுதம் இல்லை? எமக்கு அதை ஒருவர்தான் செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் இருக்கலாம். ஆனால் அதை எப்படி உறுதியான தீர்ப்பாக வெளிப்படுத்த முடியும்? அதைச் செய்தவர்களேதான் உரிமை கோர வேண்டும். தாம் ஒரு சரியான இலட்சியத்தை அடையலாமென நம்புவார்களாயிருந்தால், அதற்கு உரிமை கோரி காரணத்தை வெளிப்படுத்தவன்றோ வேண்டும். அவர்கள் பொறுப்பேற்காத வரைக்கும் நாங்களும் நேரடியாக எவரையும் குற்றம்சாட்ட முடியாது. யாரோ கையெழுத்துப் போட்டு எந்த அத்தாட்சியுமில்லாமல் ஒரு கடிதத்தைப் போட, இன்னொருவர் ஒரு துப்பாக்கியைக் கொண்டு வந்து இரண்டு தோட்டாக்களைப் பாய்ச்சிவிட்டு ஒரு துரோகியைக் கொன்றுவிட்டோமென்று வேறொரு பெயரில் உரிமை கோரும்போது நாம் என்ன செய்வது? அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலையைக் கூட, தம்மால் விலக்கப்பட்டவர்கள் செய்ததெனக் கூறிவிட்டார்கள். தாம் செய்தது சரியெனக் கருதினால் உரிமை கோரத் தயங்குவதேன்? அதை அவர்கள் ஏதோ தீரச் செயல் என்று கருதித்தானே செய்கிறார்கள்?



**கேள்வி:** உங்கள் கட்சிக்குள் இரு தரப்பட்ட அரசியல் கருத்து வேறுபாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறதே?

**பதில்:** அப்படி எமக்கு மாறுபட்ட சில பத்திரிகைகள் எழுதுகின்றதே தவிர அதில் உண்மையில்லை. எமது கட்சிக் கூட்டங்களுக்கு வந்து பார்த்தால் தெரியும். இது ஒரு பொய். எமக்குள் கருத்து வேறுபாடுகள் இல்லை. எங்களுடைய கருத்துக்களை, பேட்டிகள் கொடுக்கின்றபோது தங்களது இஷ்டத்துக்கு மாற்றிக்கொள்கிறார்கள். நல்ல உதாரணம்: 'ஒருவரும் மேயராக முன்வராவிட்டால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டபோது நான், 'ஏன் நானில்லையா' என்று சொன்னதை திரிபுபடுத்தியது.... "இங்கே பாருங்கோ ஒருவர் போய்விட்டார், அடுத்தது நான்தான்" என்று நான் சொல்லவில்லையே. இதை ஒரு பத்திரிகை - அரசாங்கப் பத்திரிகை - 'நாம் ஆயுதங்களுக்கு அஞ்சப் போவதில்லை' என்று நான் சொன்னதாக ஏதோவொரு திரிபைச் செய்து போட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இன்னுமொருவர், 'அவர் வீரவான், பயமில்லையாம் அவருக்கு' என எழுதுவார். இன்னுமொரு பத்திரிகை எம்மை அழிக்க வேண்டுமென்றே இருக்கின்ற பத்திரிகை இதையெல்லாவற்றையும் சேர்த்து, எங்களுக்கு யாரால் ஆபத்துள்ளதோ அவர்களைத் தூண்டிவிடக்கூடிய வகையில் ஒரு விமர்சனம்! ஒவ்வொரு கிழமையும் ஒரு பத்திரிகை அதைச் செய்து கொண்டே இருக்கிறது.

**கேள்வி:** தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்கள்தான் எனப் புலிகள் தெரிவிக்கின்றமைக்கு உங்கள் பதிலென்ன?

**பதில்:** ஏகப் பிரதிநிதிகளாக எவரையும் சொல்ல முடியாது. அதை மக்கள் சொல்லவேண்டுமேயன்றி தாமாக யாரும் சொல்வதில் அர்த்தமில்லை. ஜனநாயக முறைப்படியான சரியாக நடத்தப்படும் தேர்தல் ஒன்றிலேயே அவ்வாறு மக்கள் கருத்து வெளிப்பட முடியும். அப்படியாக மக்கள் ஒருமித்துக் கூறியதாகப் பார்க்கப் போனால் 77 தேர்தலின் மூலம் எம்மைத்தான் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அதைக்கூட ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டார்களெனக் கூற முடியாது. அங்கு எமக்கு எதிராகவும் ஒரு பகுதி வாக்குகள் விழத்தான் செய்தன. ஏகப் பிரதிநிதிகளாகவன்றி, ஆனால் மக்கள் ஆதரவு யாருக்குள்ளதென்று, சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு தேர்தல் நிகழ்த்தப்படும் போதுதான் சொல்ல முடியும். வெறுமனே ஆயுதம் வைத்திருப்பதால் யாரும் பிரதிநிதிகளாகிவிட முடியாது.

**கேள்வி:** அரசாங்கத்தின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**பதில்:** முதன் முதல் வைக்கப்பட்ட ஆலோசனைகள் எமக்கு மிகவும் ஏற்புடையவையாக இருந்தன. அவற்றில் 90 வீதத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. பின்னர் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. எனினும் அவற்றிலும் கூட 80 சதவீதமானவற்றை நாம் ஏற்கக் கூடியதாகக் கருதுகிறோம். ஆனால் நாம் எதிர்க்கும் சில விடயங்களும் இதில் அடங்கியுள்ளன. உதாரணமாக வடக்கு கிழக்கு இணைப்பிற்காக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை நாம் எதிர்க்கிறோம். எனினும், மொத்தத்தில் இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வுகளில் இவ்வாலோசனைகள் கூடியளவு ஏற்புடையதாக அமைந்துள்ளதாகவே கருதுகிறோம்.



**கேள்வி:** முஸ்லிம்களுக்கான 'தென்மாகாண அலகு' என்ற கோரிக்கையை நீங்கள் அங்கீகரிக்கின்றீர்கள். அதைப்பற்றி...?

**பதில்:** இது தந்தை செல்வாவால் அன்றே அங்கீகரிக்கப்பட்ட ஒரு முடிவு. முஸ்லிம்களுக்கென்ற தனி அலகை நாம் ஏற்கிறோம். இதே வேளை அம்பாறை மாவட்டத்தை சிங்களப் பகுதிகளுக்கு விட்டுக்கொடுப்பதற்குக் காரணம் அந்தளவு தூரம் அங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு விட்டது. அவர்களைத் திருப்பி அனுப்புவதென்பது சாத்தியமில்லை. மற்றைய இடங்களையும் ஆக்கிரமிக்க வாய்ப்பு ஏற்படாதவாறு அதை அகற்றிக் கொள்வதே உகந்ததெனக் கருதுகிறோம். இதை நுணுக்கமாய் ஆராய்பவர்களுக்கு எமது முடிவு சரியென்பது புலப்படும்.



**கேள்வி:** விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென கோருகிறீர்கள். இப்பேச்சுவார்த்தைகள் நிபந்தனையுடனா, நிபந்தனையின்றியா நிகழ்த்தப்பட வேண்டும்?

**பதில்:** நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளைத் தான் வேண்டுகிறோம். நிபந்தனை வைத்தால் அவர்களைச் சம்மதிக்க வைப்பது கஷ்டம். இருபுறமும் நிபந்தனைகள் விதிக்கக்கூடாது என்பதே எமது கருத்து.

**கேள்வி:** ஆனால் இதற்கு மக்கள் தரப்பிலிருந்து சில நிபந்தனை கள் வேண்டப்படவில்லையா? அதாவது இருதரப்பும் நியாயமாகவும் விசுவாசமாகவும் மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டும் ஈடுபடும் விதத்தில்....?

**பதில்:** அது வேறு, அவை இருதரப்பும் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள். அவற்றை நான் நிபந்தனைகள் என்று பார்க்கவில்லை.



**கேள்வி:** இதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எதையும் வலியுறுத்துகிறீர்களா?

**பதில்:** இரண்டு பகுதியும் கேட்கக்கூடிய ஒரு நடுநிலை நாட்டின் மத்தியஸ்தம் ஒன்று அவசியமெனக் கருதுகிறோம்.

**கேள்வி:** இன்று தமிழ் மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கும் வகையில் ஏன் நீங்கள் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்த ஒரு ஐக்கிய முன்னணியைத் தோற்றுவிக்கக் கூடாது?

**பதில்:** ஜனநாயக வழிக்கு வந்த கட்சிகள் முழுமையாக ஜனநாயகப் பாதைக்குத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இன்றும் சிலவற்றில் நாம் எமக்கு ஏற்காத செயற்பாடுகளைக் காண்கிறோம். அவ்வாறு மாறி வந்த பின்னரே இம்முயற்சி சாத்தியம்.



**கேள்வி:** இன்றைய இக்கட்டான நிலையில் தமிழ் மக்களுக்கு நீங்கள் தெரிவிக்கும் செய்தி என்ன?

**பதில்:** இன்று எம்மத்தியில் அனுபவம் வாய்ந்த ஒரு சில மூத்த தலைவர்களே இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் வேளையில் அவர்களின் சரியான வழிகாட்டலை சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதே வேளை எமக்கு எதிரான சில விசமப் பிரசாரங்களையிட்டு நாம் கவனமாக இருத்தல் வேண்டும். சில பத்திரிகைகள் மக்களைக் கவரும் வகையில் அழகான படங்களைப் போட்டு, விரசமான விடயங்களை வெளியிட்டுக்கொண்டு எம்மைக் களங்கப்படுத்தும் தவறான விசமத்தனமான செய்திகளையும் இடையே நாசூக்காக வழங்குகிறார்கள்.

*Photo: Sarath Samaranayake* •



ஒருவர்: இரவுபூரா உங்கள் நாய் ஊளையிட்டது, யாரோ சாவதற்குத்தான் சகுனம் போல...

மற்றவர்: அப்படியா, யாராயிருக்கும்...?

ஒருவர்: இன்றும் ஊளையிட்டால் சாவது நிச்சயம் உங்கள் நாய்தான்!

போலந்து நாட்டுக்காரர்கள் பற்றிய கிண்டல் ஜோக்குகள் வெளிநாடுகளில் மிகப் பிரபல்யமானவை. இதோ உதாரணத்துக்கு ஒன்று:

ஒரு போலந்து நாட்டுக்காரனுக்கு மனைவி மேல் சந்தேகம் வந்தது. அவளைக் கண்காணித்துப் பார்த்ததில் நடத்தை சரியில்லாமல் இருந்ததைத் தெரிந்துகொண்டான்.

ஒருநாள் வேறொருவருடன் மனைவி தனிமையில் இருப்பதை நேரிடையாகக் கண்டவுடன் கோபம் கொண்டான். உடனே துப்பாக்கியை எடுத்து, தன் தலைக்குக் குறி வைத்தான். இதைக் கண்டு சிரித்த மனைவியைப் பார்த்து, கோபம் தலைக்கேறக் கத்தினான்: சிரிக்காதே, அடுத்து நீதான்.'



ஒருவர் : என்னய்யா இப்பிடியிருக்கு, என்னைக்குப் போட்ட தோசை இது?

வெயிட்டர்: நேத்தய தோசை!

ஒருவர்: யோவ்! இன்னைக்குப் போட்டதக் கொண்டாய்யா...

வெயிட்டர்: அதுக்கு நாளைக்குத்தான் நீங்க வரணும்!

*ஆயிரம் குத்துவாள்களைவிட நான்கு பகையாளிப் பத்திரிகைகள் ஆபத்தானவை.* -நெப்போலின்-1

*நாக்கு என்பது எந்த மனிதனாலும் கட்டுப்படுத்த முடியாத ஒன்று, அது அடக்க முடியாத பிசாசைப் போன்றது. தன்னகத்தே நிரம்ப நஞ்சைக் கொண்டது.* - ஜேம்ஸ் 3:8

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிள்ளைக்கறி உண்ட தேசாதிபதி

## பீரிமன் முட்பட்ஸ்

போர்த்துக்கீசத் தேசாதிபதிகளுள் இலங்கையில் மிகக் குரூரமாக நடந்து கொண்டவர் "ஜெரவிடோ அஸமிடோ" ஆவார். அவரின் குரூரச் செயலுக்கு முற்றிலும் குறையாத ஒரு தேசாதிபதி ஒல்லாந்தர் காலத்திலும் இருந்தார். 1658 முதல் 1796 வரை 138 ஆண்டுகள் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த ஒல்லாந்தர்களின் காலத்தில் 41 தேசாதிபதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பீரிமன் முட்பட்ஸ் என்பவர் 1726 முதல் 1729 வரை பதவியிலிருந்த ஒரு ஒல்லாந்தப் போர் வீரரின் மகன். 1697ல் பிறந்த முட்பட்ஸ் தனது 30ஆம் வயதில் 1726ல் தேசாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டார். காலித் துறை முகத்தில் வந்திறங்கிய அவரின் எண்ணம்..... காட்டுமிராண்டிகள் வாழும் ஒரு தீவுக்குச் செல்கின்றோம் என்பதுதான். இத்தகையதொரு நாட்டில் ஆட்சி செய்வதற்கு இரண்டு கண்கள் தேவையில்லை என்று சொல்லி எப்போதும் அவர் ஒரு கண்ணை கறுப்புப் பட்டியினால் மறைத்துக் கொண்டிருந்தார்.

கொழும்பு கோட்டையில் இப்போது முதலிகே மாவத்தையில் "குளோப் ஹோட்டல்" உள்ள இடத்தில் அப்போது ஒல்லாந்த இல்லம் ஒன்று இருந்தது. அவ்வில்லத்தைக் கைப்பற்றிக் கொண்ட தேசாதிபதி அதனைத் தனது வாசஸ்தலமாக்கிக் கொண்டார். இளம் பெண்களை வேலைக்கு அமர்த்தி அவர்களைத் தனது இச்சைக்கு அடிபணியச் செய்து கசையடி கொடுத்துத் துன்புறுத்துவது தேசாதிபதியின் பொழுதுபோக்காக இருந்தது. இவரது அடாவடித்தனத்துக்கு இளைஞர்களும் தப்பவில்லை.

தேசாதிபதியின் அடாவடித்தனத்தைச் சகிக்க முடியாத வீட்டு உரிமையாளர்கள் வீட்டைத் திருப்பித் தருமாறு கேட்டதற்கு...... வீட்டு உரிமையாளரைக் கொன்று தலையை ஒரு கம்பத்தின் உச்சியில் தூக்கி வைத்து ஒல்லாந்து அரசையே அதிர வைத்தான் அந்தத் தேசாதிபதி.... தன்னை எதிர்ப்பவர்களுக்கு இதுதான் தண்டனை என்றும் எழுதி வைத்தான்.... அதனால் ஒருவரும் வாய் திறக்கவில்லை.



தற்பொழுதும் குளோப் ஹோட்டலில் காணப்படும் வாசகம் தேசாதிபதியை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. பிற்காலத்தில் தேசாதிபதியிடமிருந்து வீடு உரிமையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இச்சம்பவம் குளோப் ஹோட்டலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

'அநியாயமாகப் பறிக்கப்பட்ட சொத்து நீதியின் மூலம் திருப்பிப் பெறப்பட்டது'. இது டச்சு மொழியில் எழுதப்பட்டிருக்கிறது..

கொச்சிக்கடையிலிருந்து மட்டக்குளி வரை செல்லும் அளுத்மாவத்தை இவரது காலத்தில் உருவாக்கப்பட்ட வீதியாகும். மட்டக்குளியில் தேசாதிபதிக்கு ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் குடி போதையில் கும்மாளமடிப்பது அவரின் பொழுதுபோக்கு. இவருக்கு இறைச்சி கொடுப்பதற்கென்றே ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தக் காலத்தில்தான் பயங்கர நிகழ்வுகள் நடந்தன.

ஒரு நாள் நேரத்துக்கு இறைச்சி கிடைக்காது போகவே தேசாதிபதியின் கொடுமைக்கு உள்ளான ஒரு சிறுவனைக்கொன்று அவனது இறைச்சியை சமைத்து வைத்துவிட்டான் வேலைக்காரன். அன்றிலிருந்து அதே வகையான இறைச்சியைக்கேட்ட தேசாதிபதிக்கு உணவாக பல சிறுவர்கள் பலியாக நேர்ந்தது....



அண்மைக் காலத்தில் இந்த இடத்தில் ஒரு கிணறு வெட்டும்பொழுது பல சிறுவர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் பீரிமன் முட்பட்ஸ் தேசாதிபதியைப் பற்றிய சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

ஒல்லாந்துப் போர்வீரர்கள் இவர் பற்றிய தகவலை இரகசியமாக எழுதி அனுப்ப..... இவர் கைது செய்யப்பட்டு தாய்நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டதால் உடல் வெட்டப்பட்டு தீயிட்டுக் கொழுத்தி சாம்பலை கருங்கடலில் வீசியது ஒல்லாந்து அரசு. ஒருவன் எவ்வகை வாழ்க்கையை வாழ்கிறானோ அதே முறையிலேயே அவனது மரணம் நிகழும் என்பதற்கு பீரிமன் முட்பட்ஸ் என்கிற இந்தத் தேசாதிபதியின் சாவும் ஒரு சான்றாகிறது.

உண்மைச் சம்பவம் - ஆதாரம் "முதுஹர"

ஹிஷாம்

# குவளைக்குள் உலகின் மிகச் சிறிய குழந்தை

உலகிலேயே மிகவும் எடை குறைந்த மிகச்சிறிய குழந்தை நியூஸிலாந்தில் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றது. மூன்று மாதக் குழந்தையான டின்ஸி தீமோத்தி மான்கோனீயின் எடை 2.8 அவுன்ஸ் ஆகும். இக்குழந்தை கண்ணாடிக் குவளைக்குள் வசதியாக அமர்ந்து காட்சியளிக்கின்றது. இந்த வியப்பிற்குரிய குழந்தை சாதாரண குழந்தையை விட 8 வாரங்கள் குறைமாதக் குழந்தையான நிலையிலேயே பிறந்தது.



தந்தையின் உள்ளங்கையில் தவழ்கிறது இச்சிறிய குழந்தை. இந்த வருடம் ஜனவரி வரை உலகின் மிகச் சிறிய குழந்தையின் எடை 9.9 அவுன்ஸ். 1989ஆம் ஆண்டு லொயலா சர்வகலாசாலையின் மருத்துவப் பிரிவில் மாட்லீன் என்னும் பெண் குழந்தை பிறந்ததாக கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஜனவரி மாதம் 16ஆம் திகதி திமோத்தீ 1.9 அவுன்ஸ் எடையில் பிறந்தபோது, சிறு எலியைப் போன்று தோற்றம் அளித்தார். அதே வேளையில் குள்ளர் இனத்தை இவர் சேரவில்லை எனவும், படிப்படியான வளர்ச்சி இக்குழந்தைக்கு உண்டு எனவும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

- அபிலாஷினி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஷானிகா
# உள்ளத்திலும் எண்ணத்திலும் உறுதி கொண்ட...

- கா. கீதாஞ்சலி -

"உங்களைப் பார்க்கும் போது எனக்கு கவலையாக இருக்கிறது. நீங்கள் மிகவும் சுகமான தேகமுள்ள, வளர்ந்து முதிர்ச்சி பெற்ற உடலைக் கொண்டிருந்தாலும் பலவிதமான கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கிறீர்கள். நீங்கள் பலருக்குக் கீழ் அடிமையாக வாழ்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையை உங்களாலேயே நெறிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதிகாரத்தில் இருப்போர், பணம் படைத்தோர் உங்களை ஆட்டுவிக்கிறார்கள். உங்கள் பிள்ளைகளும் அடிமைப்படுத்தப்படுகின்றனர். நீங்கள் அந்த அடக்குமுறையாளர்களுக்கெதிராகப் போராடுவதில்லை. உங்கள் உரிமையை வென்றெடுப்பதில்லை. நான் உங்களைப் பற்றி கவலைப்படுகிறேன், அனுதாபப்படுகிறேன்"

அதிகாலையில் கேட்கும் கோயில் மணியோசை போல் கணீரென்றொலிக்கிறது ஷானிகா கல்ஹாரியின் குரல். உடலிலே ஊனம் இருந்தாலும் அந்த உள்ளத்தின் உறுதியும், எண்ணத்தின் தெளிவும் ஒரு கணம் எமது ஆன்மாவையே உலுக்கி விடுகிறது.

ஊனமுற்றோர் மட்டுமன்றி நல்ல சுகதேகமுள்ளவர்களும் கூட மற்றவர் தங்களைப் பார்த்து அனுதாபப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் இந்த நொய்ந்து போன உலகில் ஷானிகாவின் சிந்தனை ஒரு சவாலான அறைகூவல்.

1978ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி இரத்தினபுரி மாவட்டத்தில் கிரிஎல்ல என்னும் கிராமத்தில் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்த மூத்த பிள்ளைதான் ஷானிகா கல்ஹாரி. ஷானிகாவிற்கு ஒரு தங்கையும் உண்டு. தந்தையார் சுனில் வட்டோவிற்ற. ஒரு இடதுசாரி. 1971ம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டு சிறை சென்றவர்.



பிறந்தபொழுது 8 இறாத்தல் எடையுள்ள சாதாரண குழந்தையாகவே ஷானிகா இருந்தாள். பிறந்த பின்னர் மூச்செடுப்பதற்கு சற்று கஷ்டப்பட்டார். நியூமோனியா காய்ச்சல் கண்டிருந்தது. அதைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. ஆனால் நாள் செல்லச் செல்லத்தான் அவரின் உடல் தேவையான பலத்துடன் வளர்ச்சி பெறவில்லை என்பது தெளிவாயிற்று. பால் குடிப்பதற்கு புட்டியைக் கூட பிடிக்க கரங்களில் பலம் இருக்கவில்லை.



இப்போது இருபது வயதை அடையும் தறுவாயில் இருக்கும் ஷானிகாவை அவளது தாயாரும், தந்தையாரும் ஏன் சகோதரியும் கூட ஒரு சிறு குழந்தையைப் போல தூக்கிச் செல்ல முடியும். தலையும், மூளையும் மட்டுமே பூரண வளர்ச்சி பெற்றிருக்கிறது அவருக்கு. ஆனால் அவரின் சாதனைகள் எங்களை பிரமிக்க வைக்கிறது.

சரியாக தலையை நிமிர்த்தி நேராக வைத்துக்கொள்ள முடியாது அவரால். கழுத்து அந்தளவிற்கு உறுதியானதல்ல. ஆனால் துவண்டு படுத்திருக்கும் அவரின் தலையை நாலு அங்குலம் உயர்த்தி ஒரு பிளாஸ்டிக் டம்ளரை கவிழ்த்து அதற்கு மேல் பஞ்சு போன்ற துணியை மடித்து வைத்து ஷானிகாவின் தலையை அதன் மேல் வைத்து விடுவார் அவர் தாயார்.

சில வெள்ளைக் காகிதங்களை முகத்திற்கு நேரே வைத்து அதன் மேல், மெலிந்த குச்சி போன்ற ஷானிகாவின் கையைத் தூக்கி வைத்து, விரல்களுக்கிடையே மிகவும் பாரம் குறைந்த பென்சிலோ, பேனாவையோ சொருகிவிட்டால் போதும். சில மணி நேரம் ஒரு இயந்திரம் போல் கவிதைகளையும், கட்டுரைகளையும், சிறிய நாடக பிரதிகளையும் உருவாக்கித் தள்ளிவிடுகிறார் ஷானிகா.

புதிய மோஸ்தர்களில் எப்படி உடைகளைத் தைப்பது என்பது பற்றி ஆலோசனை வழங்குவதிலும் அவர் திறமைசாலி. 12 வயதில் இருந்தே உடையலங்காரம் பற்றி வரைய ஆரம்பித்துவிட்டார்.

இத்தனையும் செய்யும் திறமை இவருக்கு எப்படி கிடைத்தது என்று நாங்கள் விழித்தபொழுது, சிரித்துக்கொண்டே பதில் தந்தாள் ஷானிகா. "எல்லாப் பிள்ளைகளைப் போல் எனது பெற்றோரும் என்னை ஐந்து வயதில் பாலர் வகுப்பில் சேர்த்தனர். ஆனால் துவண்டு போன எனது உடலை வைத்துக்கொண்டு என்னால் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை.

அப்புறம் என்ன? வீட்டிலேயே தங்கிவிட்டேன். அன்றிலிருந்து இன்று வரை வீடுதான் என் உலகம். ஆனால் எனது சிந்தனை எண்ணம் என்பது இந்த நான்கு சுவர்களுக்குள் நிற்க மறுத்துவிட்டன. என்னை வெளியுலகுக்குக் கூட்டிச் சென்ற நண்பனே புத்தகங்கள்தான்" என்கிறார் ஷானிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரின் இடதுசாரிப் புத்தகங்கள்தான் ஆரம்பம். ஆனால் இன்று நூற்றுக்கணக்கான புத்தகங்களை வாசித்து முடித்துவிட்டார். பிரபலமான ரஷ்ய நாவலான மக்சீம் கோர்க்கியின் 'தாய்' முதல் பிரபல விஞ்ஞானி ஆர்தர் சீ கிளார்க்கின் '2001' என்ற நூல்வரை வாசித்து முடித்துவிட்டார். "இரத்தினபுரி பொது வாசிக சாலையில்



உள்ள சகல புத்தகங்களையும் வாசித்து முடித்து விட்டாள்" எனத் தயார் கூறுகிறார். சிங்களம், ஆங்கிலம், ஹிந்தி ஏன்? தமிழ் மொழி கூட அவருக்குத் தெரியும். எல்லாமே தன் சொந்த முயற்சியால் கற்றதுதான்.

வானொலி, தொலைக்காட்சி, புத்தகங்கள், வீட்டிற்குப் போவோர் வருவோர் சொல்லும் செய்திகளில் வரும் விடயங்கள் ஷானிகாவின் ஆக்கங்களுக்கு கருப்பொருளாகிவிடுகின்றன.




புத்தகங்களை வாசிக்க வேண்டும் என அவருக்குத் தோன்றினால் உடனே தாயிடமோ தந்தையிடமோ சொல்ல வேண்டியதுதான். உடனே ஷானிகா கட்டிலுக்குத் தூக்கிச் செல்லப்படுவாள். "கட்டில் விளிம்பின் அருகில் படுக்க வைத்து அருகில் கட்டிலை விட சற்றுப் பதிவான ஸ்டூல் ஒன்றில் புத்தகம் வைக்கப்பட்டு அதன்மேல் கையைத் தூக்கி வைத்து விட்டால் போதும் ஒரே மூச்சில் புத்தகத்தை வாசித்து முடித்துவிடுவாள் என் மகள்" எனப் பெருமையுடன் கூறுகிறார் அவரின் தாய்.

இப்போதும் கூட தாயும் மகளும் பேசிக்கொள்வதென்றால் ஷானிகாவை குழந்தையைப் போல தூக்கி மடியிலே வைத்துக் கொண்டுதான் பேசுவார் அவரின் தாய்.

ஷானிகாவின் கவிதைகளைப் படிக்கும்போது சிலவேளை கண்கள் கலங்குகின்றன. சில எமது சிந்தனையைத் தூண்டுகின்றன. அநேகமானவை சமூக அநீதிகளைக் கண்டு கொதித்தெழுகின்றது. ஆவேசம் தெரிகின்றது. சாதாரணமாக கிராமத்தில் இருக்கின்ற பிரச்சினையில் ஆரம்பித்து சுதந்திர வர்த்தக வலயம், இளைஞர் எழுச்சி, வறுமை, பெண் விடுதலை, யுத்தம்.... என ஷானிகாவின் கவிதைகளின் கருப்பொருட்கள் பரந்து செல்கின்றது. கவிதைகளில் ஒரு யதார்த்தம் இழையோடுகிறது. இப்போது அவரின் அநேகமான கவிதைகள் யுத்தத்தையும் இனப்பிரச்சினையையும் மையமாக வைத்தே எழுதப்படுகின்றன.

"திடீரென யுத்தத்தைப் பற்றி ஏன் எழுத ஆரம்பித்தீர்கள்?" எனக் கேட்டதற்கு -

"இன்று அதனைப் பற்றி எழுதுவதைப் பலர் தவிர்க்க முற்படுகின்றனர்" எனப் பளிச்சென்று பதில் சொன்னார் ஷானிகா. "தமிழ் மக்களுக்கு சிங்கள அரசியல்வாதிகளால் இழைக்கப்பட்ட அநீதியே அவர்கள் இன்று போராடக் காரணம். அதே மாதிரியான அநீதியை அவ்வரசியல்வாதிகள் சிங்கள மக்களுக்கும் இழைத்தனர். இன்று நாங்கள் இருசாராரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தினதும் புலிகளினதும் செயற்பாடுகளை எதிர்க்காவிடில் விமோசனமே இல்லை" என தனது கருத்தைச் சொன்னார் ஷானிகா.

அவரது முதல் கவிதைத் தொகுதி 1995இல் வெளிவந்தது. "கலியுகயே வசந்தய" (கலியுகத்தில் வசந்தம்) என அதற்குப் பெயரிட்டுள்ளார். இப்போது இரண்டாவது கவிதைத் தொகுதியும் வெளியிட தயாராகிக் கொண்டிருக்கிறார் ஷானிகா.

இதற்கிடையே 1992ம் ஆண்டு அவர் எழுத ஆரம்பித்த நாவல் ஒன்றை இப்போது அவர் எழுதி முடித்துள்ளார். ஜே. வி. பீ. இயக்கத்தின் அரசியல் செயற்பாட்டிற்கு ஓர் இளம் பெண் சவால் விடுவதுதான் கருப்பொருள். "ஷானிகா கல்ஹாரியின் சமூக, அரசியல் சிந்தனை இந்நாவல் மூலம் வெளிப்படுத்தப்படும்" என உறுதியாகக் கூறுகிறார் அவரின் தந்தை வட்டோவிற்ற. "எனது மூச்சே பெரும் புயலாகி" என இந்நாவலுக்குப் பெயரிடப்பட்டிருக்கின்றது.

இவை அனைத்தையும் செய்வதுடன் ஷானிகா நின்றுவிடவில்லை. வீட்டில் இருந்தபடியே "Voice of Disabled people" என்ற அமைப்பை ஆரம்பித்துள்ளார். அதன் தலைவரும் அவரே. இவ் அமைப்பின் மூலம் உடல்ரீதியான ஊனமுற்றோர் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக உதவுவதே நோக்கம் என்கிறார் ஷானிகா. **அவரின் விலாசம்:** Shanika Kalhari Watowita, Kiriella, Sri Lanka. Tele: 045-65915

**வங்கி :** Hatton National Bank, Rathnapura.

**கணக்கிலக்கம் :** A/c No: 02-2517401-1

இவ்விபரங்களை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் கண்ட பின்னர் இவ்வருட ஆரம்பத்தில் 10.000 ரூபாய்க்கான காசோலை ஒன்று அவரின் பெயருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அனுப்பியிருந்தவர்கள் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலிருந்து எஸ். செல்வகுமாரன், ஏ. லோகேஸ்வரன் என்ற இரு தமிழர்கள். அவர்களுக்கு நன்றி கூற வென்று ஷானிகாவின் தந்தையார் அவர்களைத் தேடிச் சென்றார். ஆனால் அக்குறிப்பிட்ட விலாசத்தில் அப்படி யாருமே இல்லையெனக் கூறிவிட்டார்கள். "பணம் அனுப்பியவர்கள் அவர்களை இனங்காட்டாத மாமனிதர்களாக இருக்க வேண்டும்" என்றார்கள் ஷானிகாவும் அவரது தாயாரும்.

3 வருடங்களுக்கு முன்னர் ஷானிகாவின் விபரங்களைக் கேட்டறிந்த ஒருஅமெரிக்க பிரஜை அவரைத் தேடி வீட்டிற்குச் சென்றார். ஷானிகாவின் அசாத்தியமான திறமைகளைக் கண்டு பிரமித்துப்போன அவர் அமெரிக்காவில் உள்ள பிரபல அங்கவீனர் பாடசாலையொன்றில் கற்பதற்கு ஷானிகாவிற்கு ஒரு புலமைப்பரிசில் பெற்றுத்தருவதாகச் சொன்னார்.

சற்றுநேர அமைதிக்குப்பின் "எனது சேவை இன்று என் நாட்டு மக்களுக்கு அதிகம் தேவை. அந்த வாய்ப்பை வேறு யாருக்காவது எடுத்துக் கொடுங்கள்" என்று கூறினார் ஷானிகா.

இவ்வளவு விடயங்களையும் கேட்டுவிட்டு சோவென்று கொட்டும்



மழையில் ஷானிகாவின் வீட்டைவிட்டுப் படியிறங்கி வரும்போது "நம்மையும் படைத்தானே ஆண்டவன், இப்பூமிக்குப் பாரமாக" என்ற ஒரு குற்ற உணர்வு நெஞ்சின் ஒரு மூலையில் நறுக்கென்று குத்தியது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டம்

பொடிமெனிக்கே ரயில் வண்டியில்
களைப்புடன் நீ கால் பதித்தாய்
அலைமோதும் சந்தடியில்
ஓட்டமுடன் எதிர் சென்றாய்

யாரிந்தத் தமிழச்சி?
யாரறிவார்.... குண்டிருக்கும்!
சுற்றிவரக் குசுகுசுப்பு
சந்தேகப் பார்வை பல

திமிர்கொண்ட கருநிறத்து
சப்பாத்து ரண்டு - உடன்
கைத்தடியும் சேர்ந்து மின்னல்
கதியில் அங்கு வர

"ஓ.... நில்லு
எங்கே போறாய்?"

பெட்டியிலே துணிவகைகள்
பொதி நிறைய புத்தகங்கள்
பர்ஸ் திறக்க மணி ஒலியில்
புரண்டதெலாம் நாணயங்கள்

"எங்கேயுன் ஐடிண்டி?"
'மன்னியுங்கள் வந்தது நான்
ரயிலுக்கு....."

'ஊ'க் காட்டும் ஒலி கேட்க
தடைக் கருவி செயல்காட்ட
சேலை நுனி பிடித்திழுத்து
சென்றனவே சப்பாத்துகள்

பயணிகளே திரையகற்றி
பாருங்கள் அவலமிதை!
சினம் கொண்ட நங்கையே - உன்
சீற்றத்தை ரயிலினுள்ளே
வைத்துவிட்டு நீ இறங்கு!

ஷானிகாவின் இரு கவிதைகள்
**தமிழாக்கம்: எம். எச். எம். ஷம்ஸ்**

## பனை வேலிக்கு அருகே...

**கட்டாந்தரை மீது
வெற்று வானம் மீது
பதிந்த கண்களில் பீதி!
நாதியின்றி
மனச்சுமையோடு
இறைஞ்சுவது
அமைதியன்றி
வேறென்ன?**

**காலைப் பனித்துளியின்
தூய்மை!
இரவுச் சந்திரிகையாய்
வசீகரம்!
ஷெல் வெடியாய்
சிதைந்துபோன
எதிர்பார்ப்புகள்....
குண்டு வீச்சால்
வயல் வெளிகளில்
பயிர்க்குவியல்
சிதைந்தாலும
கல்லடிப் பாலத்துக்கு
அப்பால்
கம்பி வேலிக்கு
அருகில்
இறைஞ்சுவது
வாழ்க்கையே அன்றி
வேறென்ன?**



ஷானிகா டிஸைன்ஸ்



# நடேசய்யரை நினைவு கூர்வோம்!

மலையகத்தில் பத்திரிகை தொழிற்சங்கம் இலக்கியம் அரசியல் ஆகிய துறைகளில் முன்னோடியாக இருந்தவர் தேசபக்தன் கோ. நடேசய்யர்.

இலங்கையின் அரசியல், தொழிற்சங்க, பத்திரிகை, ஆக்க இலக்கியம் ஆகிய துறைகளில் சுவடுகளைப் பதித்த கோ. நடேசய்யர் புகழ்மிக்க தஞ்சாவூரில் 1891 ல் பிறந்தவர்.

7.11.1947ல் 'சுதந்திரன்' பத்திரிகையில் ஆசிரியப் பணியிலீடுபட்டிருந்த பொழுது அமரரானார். அவரது இறுதிச் சடங்குகளை தமிழரசுக் கழகத்தின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமே முன்நின்று நடத்தினார்.

1936 ல் நடந்த அரசாங்க சபை தேர்தலில் போட்டியிட்டு மகத்தான வெற்றியீட்டினார். இத்தேர்தலில்தான் இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என்.எம். பெரேரா, பிலிப் குணவர்தனா ஆகிய இருவரும் முதன் முறையாக அரசாங்க சபைக்குத் தெரிவானார்கள். அப்பொழுது அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா நடேசய்யரின் விவாதத் திறமைக்கும் அரசியல் விவேகத்திற்கும் தீர்க்கதரிசனமான கருத்துக்களுக்கும் மதிப்பளித்தார்.

ஆறு ஆண்டுகள் சட்ட நிறுவன சபையிலும், அதன் பின்னர் பதினொரு ஆண்டுகள் சட்ட சபையிலும், இந்திய வம்சாவளி தமிழர்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் பிரதிநிதித்துவம் செய்தார் நடேசய்யர். சட்டசபையில் அவர் நிகழ்த்திய பேச்சுகள் ஒவ்வொன்றும் வரலாற்றுச் சிறப்புக்குரியது.

இலங்கை வருவதற்கு முன்னரே தஞ்சாவூரில் பத்திரிகை நடத்திய அனுபவம் நடேசய்யருக்கு உண்டு.

தேசநேசன் (1921), தேசபக்தன் (1924), தொழிலாளி (1929), தோட்டத் தொழிலாளி (1947), மற்றும் உரிமைப்போர், சுதந்திரப்போர், வீரன், சுதந்திரன் என்று தமிழிலும் சிட்டிஷன் (1922), ஃபோர்வர்ட் (1926), இந்தியன் ஒபீனியன் (1936), இந்தியன் எஸ்டேட் லேபர் (1929) என்று ஆங்கிலத்திலும் வெளிவந்த பத்திரிகைகள் அனைத்திலும் நடேசய்யர் ஆசிரியராக இருந்து நடாத்தியுள்ளார்.

**- அந்தனி ஜீவா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் கொடுமையின் ஞாபகார்த்தமாக ஜூலை 23ம் திகதி போலவே, முஸ்லிம் மக்களுக்கு நிகழ்ந்த ஒரு கொடுமையை நினைவூட்டிக் கொண்டிருப்பது ஒக்டோபர் 25ம் திகதி.

1990 ஒக்டோபர் 25ல் திடீரென ஒருசில மணித்தியாலங்களுக்குள் வடபகுதி முஸ்லிம்கள் தம் பாரம்பரிய மண்ணிலிருந்து வேரடி மண்ணோடு பெயர்ந்து போகப் பணிக்கப்பட்டனர். அது நிகழ்ந்து 8 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. தாம் சந்ததி சந்ததியாகத் திரட்டிய அத்தனை செல்வத்தையும் அந்நிலத்தோடு பின்னிய வாழ்வையும் விடுத்து, கைச் செலவுக்கும் போதாத அற்ப பணத்துடன் மட்டும் முழு சமுதாயமாகவே விரட்டிக் கலைக்கப்பட்ட நிலையிலிருந்து அவர்கள் இன்னும் விடுபடவேயில்லை. ஏழை. பணக்காரர் யாவரும் ஒருநாட் பொழுதில் ஏதிலிகளாகி அகதி முகாம்களில் கதியற்று முடங்கினர்.

இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி தமிழ்ச் சிந்தனையாளர்களிடமிருந்து அதிகம் கண்டனங்கள் கிளம்பியதாகத் தெரியவில்லை. 'துரதிர்ஷ்ட நிகழ்வு' என்ற மலினப்பட்ட ஒரு வார்த்தையை, வெறும் இயற்கை அனர்த்தத்திற்கு வருந்துமாப்போல் சிலர் தெரிவித்ததோடு சரி. இன ஒடுக்குமுறை கண்டு சீறும் தமிழ்க் கலையிலக்கியவாதிகளின் படைப்புகளில்கூட இது கண்டுகொள்ளப்படாத விடயமாகிப் போனது.




இன்றும் அகதிநிலையில் தம் தாய் மண்ணின் ஏக்கத்தோடு புத்தளம் அகதி முகாமில் வாழும், இரத்த அழுத்தத்தால் உபாதைப் பட்டுக்கொண்டிருக்கும் மன்னாரைச் சேர்ந்த முதியவர் அஹமட் துயரோடு சொன்னார். தனக்கு 4 பெண் பிள்ளைகளும் 2 ஆண் பிள்ளைகளுமாம். ஒரு ஆண்பிள்ளை யாழ்ப்பாணத்தில் படித்துக்கொண்டிருந்தபோது இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டான். இத் துயரிலிருந்து நீங்கு முன் ஊரைவிட்டு வெளியேற்றப்பட்டு இங்கே பிள்ளைகளோடு அகதியாக தொழில் செய்யமுடியாத முதிர்ந்த நிலையில் வாடுகிறாராம்.

விதவைப் பெண்ணான மர்லியா கூறியது இப்படி: "நாம் பெரிய மடுவில் வாழ்ந்தோம். ஒரு நாள் இரவு என் கணவர் துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். இந் நிலையில் நானும் பிள்ளைகளோடு வெளியேற்றப்பட்டு இங்கே அகதியாகினேன். என் கெட்டிக்காரப் பிள்ளைகளைப் படிப்பிக்கக்கூட வக்கற்றவளாகி விட்டேன். இந்நிலையில் நிவாரணத்தையும் வெட்டி விடுவார்கள் என்று பயமுறுத்துகிறார்கள். அது தான் எனக்கு இப்போது பயமாகவுள்ளது..."

நஸீராவுக்கு 35 வயது. கணவனை இழந்தவர். "யாழ் நகரில் பிரபலமான ஜவுளிக் கடை வைத்திருந்து நல்ல வசதியுடன் வாழ்ந்தபோது ஒரு நாள் இரவு என் கணவர் ஷெல்லுக்குப் பலியானார். அதன்பின் எம்மை வெளியேறச் சொன்னதோடு நானும் யாவற்றையும் இழந்து இங்கு வந்து அகதியாக வாழ்கிறேன்" என்றார் நஸீரா.

60 வயது மதிக்கத்தக்க அடம்பனைச் சேர்ந்த அப்துல்லாஹ் என்ற முதியவரொருவர் தன் கதையைச் சொன்னார். "ஊரிலே கடை வைத்திருந்தோம். நெல் வியாபாரம் செய்தோம். என் மகன் டிராக்டர் ஓட்டிச் செல்வார். ஒரு நாள் அவரை துப்பாக்கி இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். அவனைப் பின்னர் பிணமாகத்தான் பார்த்தோம். அதோடு எமது வியாபாரம் அஸ்தமித்தது. இந் நிலையில் நாமும் வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் அகதி முகாமே அடைக்கலமானோம்..."

50 வயது பாத்திமா தன் ஏக்கத்தைச் சொல்கிறார். "யாழ்நகரில் வாழ்ந்த ஏழைகள் நாங்கள். கணவர் சைக்கிளில் நாட்டு வியாபாரம் செய்பவர். 5 பிள்ளைகள். மூத்த இருவரும் பெண்கள். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டு இங்கு வந்தபின் கணவர் நோய்வாய்ப்பட்டுவிட ஆஸ்பத்திரியும் அகதி முகாமுமாக காலம் தள்ளுகிறோம். தொழிலுக்காக நான் கடையப்பம் சுட்டு விற்று வருகிறேன். ஊரில் இருந்த காணியை விற்க முடிந்தால் என் பெண்களைக் கரை சேர்க்க முடியலாம். அதைப்பற்றிப் பேசி என்ன?...ம்"

20 வயது மாணவி ரம்ஸியா பேகம் கூறுகிறார். "படிப்பில் ஆர்வம் மிக்க நான் அகதி முகாமுக்கு வந்ததால் படிக்க முடியாத சூழ்நிலை. இருந்தும் குப்பி விளக்கில் படித்து சர்வகலாசாலைக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளேன். எனது படிப்புச் செலவுக்குப் பணம் தேவைப்பட்டது. விடத்தல் தீவிலிருந்து வெளியேற்றப்பட்ட எமது குடும்பத்துக்கு மொத்தம் 2000 ரூபா மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதித்தார்கள். எனினும் அம்மா அடையைச் சுட்டு அதற்குள் நகைகள் சிலவற்றை ஒளித்து வைத்து உணவுப் பண்டமெனச் சொல்லி, கொண்டு வந்து சேர்த்ததால் அந்த நகைகளே எனது படிப்புச் செலவுக்கு உதவியது."

அகதி முகாமிலிருக்கும் பென்சனியர் இப்ராஹிம்: "எனக்கு 3750 ரூபா பென்சன் கிடைக்கிறது. அதனால் நிவாரணம் கிடைப்பதில்லை. வயது வந்த 3 பெண் பிள்ளைகளுடன் ஒரு மகனும் உண்டு. பண வசதி இல்லாததால் ஓ.எல். படிப்புடன் அவர்களை நிறுத்தி விட்டேன். பெண்களைக் கரைசேர்க்க முடியுமா என்பதே என் கவலை."

புத்தள அகதி முகாமில் தமது நிலை பற்றித் தெரிவித்த அகதிகள், அங்குள்ள மக்கள் நல்லவர்களாயினும் தம்மை அகதிகளெனத் தரக் குறைவாகவே நோக்குகிறார்களென வருந்துகிறார்கள். எட்டு ஆண்டுகளாக வசதியற்ற முகாம் வாழ்க்கையிலிருந்து விடிவு கிட்டி தமது தாய் மண்ணில் மறு வாழ்வைத் தொடங்கும் நல்ல காலம் எப்போது வருமோ என அவர்கள் ஏங்குகிறார்கள்.

**(பெயர்கள் யாவும் மாற்றப்பட்டுள்ளன.)**

# ஏனொரு வாய்மொழி பேசவில்லை...?



- மதுரகவி

*வார்த்தைகள் அதிகம்*
*பேசியறியாள்*
*வானத்தைக் கூடப்*
*பார்த்து அறியாள்*
*நேற்று இன்றென*
*நாட்களுக்கிடையே*
*கூறுகள் தன்னும் உண்டென அறியாள்*

*ஓ அல்லாஹ்..... ஓ அல்லாஹ்!*
*நீயல்லால் கதி யாரல்லாஹ்!*

*மேகம் மூடிய நிலவைப் போல*
*சோகம் கௌவிய பெண்ணானேன்*
*நீரைப் பிரிந்த மீனைப் போல*
*நிலத்தைப் பிரிந்து நான் வந்தேன்*

*எங்கு மறைந்தது எங்கள் பிறை*
*என்ன இழைத்தது எங்கள் மறை*
*சொந்த நிலத்தினில் உரிமையிலை*
*வந்த இடந்தனில் அகதி நிலை*

*பர்தா புனைந்த தாய்மையும் இங்கே*
*அகதி முகாமே அடைக்கலமாச்சோ!*
*பசியின் பிடியில் வீறிடும் பிள்ளைக்கு*
*பலர் முன்னிலையில் பால்தர விதியோ!*

*ஓ அல்லாஹ்..... ஓ அல்லாஹ்!*
*நீயல்லால் கதி யாரல்லாஹ்!*

*நாரில் பின்னிய பூவைப் போல*
*ஒன்றாய் வாழ்ந்த சமுதாயம்*
*குரங்கின் கையில் மாலை போல*
*குலைந்தே போனது யாராலே?*

*நீதியின் கண்களில் மூடுதிரை*
*நமக்கென வாதிட யாருமில்லை*
*நாடு கடந்திடும் வேளைவரை*
*ஏனொரு வாய்மொழி பேசவில்லை*

*ஓ அல்லாஹ்..... ஓ அல்லாஹ்!*
*நீயல்லால் கதி யாரல்லாஹ்!*

*மண்ணையிழந்து மனையையிழந்து*
*பொன்னைப் பொருளைப் போக்கிடமிழந்து*
*அன்னை பூமியில் அலையுற நாங்கள்*
*பண்ணிய பாவம் ஏதுசொல் இறைவா!*

(வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது வாளாவிருந்த கலைஞர்களுக்குச் சமர்ப்பணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். எச். எம். ஷம்ஸ்



# காவியமாகிய காதல்

டெல்லி மாநகரில் மினா பஸார் விழாக் கோலம் பூண்டிருந்தது. அரண்மனைவாசிகளின் விழாவென்றால் சும்மாவா? அது ஒரு விற்பனை விழா. ராஜ குடும்பத்தின் இளைஞர்கள், யுவதிகள் மாத்திரமன்றி மந்திரி, பிரதானிகள், பிரபுக்கள் என்று பெரும் புள்ளிகள் கொடுக்கல் வாங்கல் செய்யும் ராஜசந்தை அன்று கூடுகிறது

அழகான அலங்கரப் பொருட்கள் பரப்பப்பட்ட கடைகள் கண்களை ஈர்த்தன. ஒருபுறத்திலிருந்து இசைக் கலைஞர்கள் கவாலி பாடிக் கொண்டிருக்க, ஜிம்னாஸ்டிக் வீரர்கள் மறுபுறம் தமது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

சூரியன் மேற்கே இந்து குஷ்பர்வதத்தின் புறமாக மறைந்து கொண்டிருந்தான். இயற்கை அமைதி கொள்ளும் வேளை. யமுனா நதியின் சலசலப்பு பரவி வந்தது. மினா பஜார் களைகட்டத் தொடங்கியது.

மொஹலாய மன்னர் ஜிஹாங்கீரின் பட்டத்து இளவரசர் குர்ரம் நண்பர்களோடு சிரித்துப் பேசியவாறு ராஜ கம்பீரத்துடன் வருகிறார். வரிசையாக இருந்த கடைகளில் ஒன்றில் அவரது கண்கள் குத்தி நின்றன. அது கண்ணாடிப் பொருள்கள் விற்கப்படும் இடம். தோகை மயில் போல புன்னகை மெழுகிய முகத்துடன் கடையிலே அர்ஜுமன் பானு பேகம்.

கண்ணாடிப் பொருட்களை விட அவளது கன்னங்களின் மினுக்கம், குர்ரமை வசீகரித்தது. கடையை நெருங்கிய இளவரசரை பானுவின் இதழோரம் கனிந்த மென்னகை வரவேற்றது. இளவரர் கண்ணாடிப் பொருட்களைத் தொட்டுப் பார்த்தார். அழகிய செந்நிறக் கிண்ணமொன்று அவரைக் கவர்ந்தது.

"இது என்ன விலை?"

"இதுவா? இதன் விலையைச் சொன்னால் உங்களுக்கு மயக்கம் வரும் இளவரசே"

"பரவாயில்லை சொல்லு"

"இது வெறும் கண்ணாடியல்ல. பாரசீக வைரத்தினால் ஆனது"

"வைரமென்று சொன்னால் நான் பயப்படுவேனா?"

"பத்தாயிரம் ரூபா" அவள் மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். இளவரசர் வெறும் கண்ணாடிக் கிண்ணத்தை வைரமென்று நினைத்து வாங்கி விட்டதால் அவளது புன்னகையில் கேலி கலந்திருந்தது.

குர்ரம் சாதாரண ஆளல்ல. அறிவும் புத்திசாதுர்யமும் நிறைந்தவர். அவரை யாரும் ஏமாற்ற முடியாது. பானுவின் மென் விரல் பட்டால் எந்தப் பொருளும் வைரமாக மாறும் என்று இளமனசு சொன்னது. பானு வீசிய கண் வீச்சினால் இளவரசர் பணத்தை மட்டுமல்ல உள்ளத்தையும் பறிகொடுத்து விட்டுத் திரும்பினார். ஆக்ராவில் யமுனை நதிக் கரையிலே பட்டொளி வீசி, உலகையே ஈர்த்துக்கொண்டிருக்கும் பூலோக சுவர்க்கம் தாஜ் மஹாலுக்கு அத்திவாரமிட்டதே அந்த மினா பஸார்தான். அர்ஜுமன் பானு பேகம் சாதாரண நங்கையல்ல. மகாராணி நூர்ஜஹானின் சகோதரர் அஸார்ப்கானின் குமாரி. இளவரசர் குர்ரமுக்கு உறவிலே மச்சினி.

மன்னர் ஜிஹாங்கீரின் காதுகளில் காதல் செய்தி விழுந்தது.

இந்த அரண்மனைக் காதல் கண்ணாடிக் கிண்ணத்தில் ஆரம்பித்தாலும் நொறுங்கிவிடவில்லை. கோலாகலமாக திருமணத்திலேயே முடிந்தது. காதல் ஜோடிகளாக இல்லற வானிலே சிறகடித்த தம்பதியினரின் பெயர்கள் மாறின.

மன்னர்களின் மனைவிமார்கள் அனைவரும் ஒரே தரத்தில் இருக்க மாட்டார்கள். பட்டத்து ராணி இருப்பாள். அந்தப்புரத் துணைவிகளும் மனைபாட்டிகளாக இருப்பார்கள். அர்ஜுமன் பானுவின் மேல் பிரவாகித்த அன்பினால் இளவரசர் **மும்தாஜ்** என்று அழைத்தார். **மாளிகையின் தலைவி** என்று இதற்கு அர்த்தம். குர்ரமின் பெயரும் **ஷாஜஹான்** என்று மாறிற்று. **உலகத்தின் அரசன்** என்று கருத்து இதற்கு.

மன்னர் ஷாஜஹான் வெளியூர் செல்லும் போதெல்லாம் மும்தாஜை அழைத்துச் செல்லும் அளவுக்கு அவரது உள்ளத்தில் இடம் பிடித்துவிட்டார் மும்தாஜ் பேகம். போர்க்களத்திலும் அதே கதைதான். பதினேழு வருட தாம்பத்தியத்தில் கிடைத்த புதல்வர்கள் பதினான்கு பேர்.

1631ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஏழாம் திகதி தக்கணப் பிரதேசத்திலுள்ள பர்ஹான்பூரில் **ஜெஹான் லோடி** என்ற கவர்னரை அடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய நிர்ப்பந்தம். ஷாஜஹானின் சேனை புறப்பட்டது. அரசியற் போர்க்களம் வாழ்வின் போர்க்களமாக மாறும் என்று மன்னர் எதிர் பார்த்திருக்கவில்லை.

மும்தாஜ் கர்ப்பிணியான நிலையில் போர்க்களப் பயணத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார். பர்ஹான்பூரில் முகாமடித்திருந்த போது பிரசவ வேதனை தொடங்கியது. 14ஆவது குழந்தையை ஈன்ற மும்தாஜ் கண்களை மூடிக் கொண்டாள். அவளது நிரந்தர தூக்கத்தைக் கண்ட ஷாஜஹான் பித்துப் பிடித்தவர் போலானார். ஊன் குடிப்பின்றி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தார். ஆறுதல், தேறுதல் மொழிகள் காட்டில் எறித்த நிலவாயிற்று. எட்டு நாட்களின் பின் அறையிலிருந்து வெளிவந்த மன்னர் எண்பது வயது வயோதிபர் போல நரை கண்டு கம்பீரமிழந்து காட்சியளித்தார். விழாக்களில் பங்கு பற்றாது, ஆடை, ஆபரணங்கள் பூணாது நடைப்பிணமாக இருந்த மன்னர் சாஜஹானின் மூளைக்குள் ஒரு யோசனை மின்வெட்டியது. பர்ஹான்பூரில் அடக்கம் செய்யப்பட்டிருந்த கட்டழகி மும்தாஜின் தேகத்தை ஆக்ராவில் மீளவும் அடக்கம்செய்ய ஆணையிட்டார். அவரது ஆசை, கடிதங்கள் வாயிலாக பல நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன:

"உலகிலே யாருமே நிறுவாத பூலோக சொர்க்கம் போன்ற நினைவாலயத்தைக் கட்டவுள்ளேன். சிறந்த வரைபடத்திற்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்."

எகிப்து, பாரசீகம், பர்மா ஏன் இலங்கைக்கும் தகவல் வந்தது. கண்கவரும் வரைபடங்கள் பல வந்து சேர்ந்தன. ஆனால் மன்னரின் மனங் கவரவில்லை. ஒரு முறை போர்த்துக்கேய பிரசாரக் குழுவொன்று டில்லிக்கு வருகை தந்தது. அப்போதுதான் வெனிஸ் மாநகரில் வாழும் உன்னதக் கலைஞர் ஒருவர் பற்றிய தகவல் கிடைத்தது. உடனே அந்தக் கலைஞர் வரவழைக்கப்பட்டார். ஜெரோனிமோ வெரோனியோ (Geronimo Veroneo) என்ற கட்டடக் கலைஞனின் வரைபடம் தான் உலக அற்புதமான தாஜ்மஹாலின் கலாவித்து.

வரைபடத்தைச் செயல்பூர்வமாக்க பல்துறை சார்ந்த கலைஞர்கள் தருவிக்கப்பட்டனர். தலைமைக் கட்டடக் கலைஞர் உஸ்தாத் ஈஸா. இவர் மத்தியாசியாவைச் சேர்ந்தவர். துருக்கியரான இஸ்மாயில் அபெந்தி, லாகூர்வாசியான குவாஸிம்கான் ஆகியோரும் இக்கலாசிருஷ்டியின் கர்த்தாக்களாணர்கள். சலவைக் கற்களில் மோஸ்தர்கள் செய்ய டில்லியிலிருந்து விரஞ்சிலால் என்ற நிபுணர் வரவழைக்கப்பட்டார். உலகிலேயே அரபு எழுத்தணிக் கலையில் தன்னிகரின்றி விளங்கிய அமானத்கான் பாரசீகத்திலிருந்து வந்திருந்தார். தனது படைப்பின்கீழ் கையொப்பமிட வேண்டும் என்ற அவரது நிபந்தனைக்கு மன்னர் உடன்பட வேண்டியதாயிற்று. இன்று அவரது கையொப்பம் மாத்திரமே தாஜ்மஹாலில் காட்சி தருகிறது.

1932ஆம் ஆண்டு யமுனா நதியோரத்தில் தாஜ்மஹால் நிர்மாண வேலைகள் வைபவபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இருபதினாயிரம் பேர் தொடர்ந்து வேலை செய்தார்கள். நினைவாலயக் கட்டுமானத்தின் பிரதான பொருள் சலவைக் கல்லாகும். பல வகையான பளிங்கு வகைகள், மரகதம், கோமேதகம், புஷ்பராகம் என ஒளி வீசும் இரத்தினக் கற்களால் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. இலங்கையிலிருந்து வெண்ணிற பளிங்குக் கற்கள் கொண்டு செல்லப்பட்டன. மன்னர் சாஜஹானின் கனவு மாளிகையான தாஜ்மஹால் நிறைவுபெற 22 ஆண்டுகள் பிடித்தன. உலகில் எந்தச் சக்கரவர்த்தியாலும் சாதிக்க முடியாத ஈடிணையற்ற நினைவாலயமொன்றை உருவாக்கிய சாஜஹான் யமுனா நதியையும் திசைதிருப்பி தாஜ்மஹாலினைத் தழுவிச் செல்லுமாறு ஏற்பாடு செய்தார். அழகு மங்கையொருத்தியின் இயல்புகளைப் பிரதிபலிக்குமாறு தாஜ்மஹால் அமைய வேண்டுமென்பது மன்னரின் ஆசை.

சூரியோதயம் நிகழும்போது இளரோஜா வர்ணம் காட்டும்: அஸ்தமனத்தின்போது தங்க நிறத்தில் காட்சி தரும். நிலவொளியில் வெள்ளி முலாம் பூசியதுபோல எங்கோ ஒரு மாயாலோகத்துக்கு இட்டுச் செல்லும். தாஜ்மஹாலைச் சூழ பசுமை குலுங்கும் அழகிய பாரசீகப் பூங்காவொன்று நீரருவிகளோடு அமைக்கப்பட்டது. தங்குமிடம், இசையரங்கு, கடை வீதி என துணை அம்சங்கள் பல. 1902 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட பாரிய இடப்பரப்பில் அமைந்துள்ள நினைவாலயம் மூன்று தளங்களைக் கொண்டது. மத்தியிலே பிரமாண்டமான பால் நிறக் கும்மட்டம். எண்மூலை அமைப்பில் உள்ள நடுக் கூடத்தின் மேல் சிறிய கும்மட்டங்கள், நாற்புறமும் 138 அடி உயரம் கொண்ட மினாராக்கள்.

வரைபடத்தில் சாஜஹானின் சமாதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இன்று தாஜ்மஹாலின் கீழ் தட்டின் மத்தியிலே இரண்டு சமாதிகள் உள்ளன. மும்தாஜின் சமாதிக்குப் பக்கத்தில் சற்றே உயரமாக அமைந்துள்ளது சாஜஹானின் சமாதி. இதே போல் இரண்டு சமாதிகள் இரண்டாம் தட்டிலும் உள்ளன. இவை நகல் சமாதிகள்.

யமுனையின் மறுகரையிலே தாஜ்மஹாலின் மறுபதிப்பாக கறுப்புச் சலவைக் கற்களைக் கொண்டு தனக்கொரு நினைவாலயம் கட்டப்பட வேண்டும் என்று சாஜஹான் விரும்பியிருந்தார். அவரது இந்த இறுதி ஆசையை புதல்வன் அவுரங்கஸிப் நிறைவேற்றவில்லை. பதவி இழுபறி காரணமாக தந்தை சாஜஹானின் அந்திம காலத்தில் மகனோடிருந்த உறவு பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணம். எட்டு வருடங்கள் ஷாஜஹான் ஆக்ரா கோட்டையில் சிறைவைக்கப்பட்டிருந்தார். மகள் **ஜஹானரா** அவருக்கு பணிவிடை செய்தார். இதய ராணி மும்தாஜின் நினைவாலயத்தைப் பார்த்து ரசிப்பதே அவருக்கு நிம்மதி தருவதாயிருந்தது. 1666ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் திகதி ஷாஜஹான் தனது துணைவியைத் தேடி மீளாப் பயணம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு வயது 74. மன்னரின் சடலம் மும்தாஜின் சமாதிக்கு அருகிலே அடக்கம் செய்யப்பட்டது. மொகலாய ஆட்சி மறைந்தது. மொகலாய மன்னர்கள் மறைந்து விட்டார்கள். ஆனால் இந்திய, பாரசீக, மத்தியாசிய இஸ்லாமியக் கட்டடக் கலை தழுவிய தாஜ்மஹால் இன்றும் காதலின் சின்னமாக மௌன கீதம் இசைத்துக் கொண்டிருக்கிறது. ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெறுமனே "எவ்வளவு"

# "எவ்வளவு காலத்திற்கு?"

## என்பதல்லக் கேள்வி

## எப்படி, எவ்வளவு சிறப்பாக,

## நாம் உதவ முடியுமென்பதுதான் கேள்வி

வீடமைப்புத் தொடர்பான வழக்கமான மனப்பான்மை "எவ்வளவு" "எவ்வளவு காலத்திற்கு?" என்பதாகும்.

ஹற்றன் நஷனல் வங்கியின் ஷாந்தி கடன் திட்டம் இதற்கப்பாலும் செயற்படுகிறது.

உங்கள் கருத்து, உங்கள் தேவைகள், உங்கள் முன்னுரிமைகள் மற்றும் எவ்வளவு சிறப்பாக நாம் உதவமுடியும் என்பவற்றின் அடிப்படையிலேயே நாம் இந்த விஷயத்தை அணுகுகின்றோம்.

**வசதிகள்**- நாடுபூராவுமுள்ள எமது ஏதேனும் ஒரு கிளையூடாக நீங்கள் விரும்பும் கிளையில் சகல கொடுக்கல் வாங்கல்களையும் செய்யலாம்.

**வாய்ப்புகள்**-வெறும் காணியை வாங்குதல், வீடமைத்தல், பூர்த்தியான வீடொன்றைக் கொள்வனவு செய்தல் அல்லது புதுப்பித்தல், விரிவாக்கல் ஆகியவற்றுக்குக் கடன் கிடைக்கிறது.

**விரைவான சேவை**-வழமையான சூழ் நிலைகளில் கொடுக்கல் வாங்கல்களை 6-8 வாரங்களில் அல்லது அவசியமானால் இதற்கு முன்னரும் செய்து கொள்ளலாம்.

**செய்திறன்மிக்க சேவை**-உங்கள் தேவைகளைப் புரிந்து அவற்றுக்கு அர்த்த பூர்வமாகச் செயற்படும் அனுபவமும் சிறப்புத் திறமையும் பெற்ற அலுவலர்களை ஒவ்வொரு கிளையும் கொண்டிருக்கிறது.

**இசைவானது**-நீங்கள் பெறும் கடன் தொகைக்கு உச்சவரம்பு இல்லை. ஆகக் கூடியது 20 வருட காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு ஹ.ந.வங்கியின் ஏதேனும் ஒரு கிளையுடன் அல்லது தலைமை அலுவலகத்தின் சந்தைப்படுத்தும் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன்**
**நஷனல் வங்கி**
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
10, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை,
கொழும்பு 03
தொ.பே: 421885-7 ஃபாக்ஸ்: 320745
ரெலெக்ஸ்: 22152 HATNBK CE,
http://www.hnb.net
Email: moreinfo@hnb.net

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD. 10758

**ஹற்றன் நஷனல் ஷாந்தி – ஆயுட் காலம் பூராவும் அமைதியும் சாந்தியும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லிமிட்டட்
வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**போவதுயார்? பூவையாரா பூந்தோட்டமா...?**

பூத்துக் குலுங்கும் மரங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இம் மேற்கத்தைய மங்கையரின் தம் தலைக்குத் தொப்பியாக ஒரு மலர்க் கூடையையல்லவா சுமந்து செல்கின்றனர்! வெய்யிலிலிருந்து தப்பிவிடலாம்தான். ஆனால் மொய்க்கும் வண்டுகளிலிருந்து...? -காளையரின் விழிவண்டுகளைச் சொல்கிறோம்.



''ஓசையிலேயே அதி இனிமையான ஓசை எது...?''

''பஸ்ஸுக்குள்ளே அடுத்தவன் சில்லறை கீளே விழுகிற ஓசை தான்''

யாழினிது குழலினிது என்பர், பஸ்ஸினுள் சில்லறை விழுமோசை கேளாதவர்.

''சின்ன வயசிலிருந்தே சிகரட் குடிச்சு க்குடிச்சு இப்பிடி உருமாறிட்டாருங்க,... பாவம்!''





இந்தப் படத்தை எடுத்த புகைப்படக்காரர் ரிச்சர்ட் ஏவி என்பவர். 1981-ல் **Vogue** என்னும் பிரபல பெண்கள் பத்திரிகையில் வெளியான இது உலகப் பிரசித்தி பெற்ற புகைப்படங்களில் ஒன்று. படுத்திருக்கும் நடிகையின் பெயர் நொஸ்டாஸியா கின்ஸ்கி. அந்தப் பாம்பின் பெயர் தெரியவில்லை.

# காக்கை தீவில் கழுகுக் கூடுகள்



களனி ஆற்றில்
இன்னும் கலக்கம்!
ஊமைக் காற்றில்
பெண்கள் ஓலம்!

பிணம் தின்னும்
கழுகுகளைத்
தேடி
பேயாட்டம்
போடும்
கடல்

கடலின் கால்களில்
பேரலை நகங்கள்,
காக்கை தீவைப்
பிராண்டும் வேகம்!

காக்கை தீவுக்கு
கழுகுக் கூடுகள்
எப்படி வந்தன?

கழுகுகளின் கால்களில்
அபலைகளின் கூந்தல்,
பிச்சுவாள் சொண்டில்
பிய்த்தெடுத்த அதரங்கள்

இரத்தத்
துளிகளால்
சிவந்துபோன அடிவானம்
சடசடக்கும்
சிறகொலிக்கு
சாத்தப்படும் கதவுகள்
குரலொடுங்கும் பேதைகள்.

தர்ம தேவதையே!
உன் கைகள்தான்
பிணந்தின்னிக் கழுகுகளின்
கூடுகளா?

உன் கண்களில் மயக்கம்
பச்சைத் தாளின்
ஹெரோயின் புகையால்
எழுந்த போதையா?

களனி ஆற்றில்
இன்னும் கலக்கம்
ஊளைக் காற்றில்
பெண்களின் ஓலம்!

**அபூபாஹிம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் விழுங்காத மர்மம்

## லயன் எயார் தாக்குதல் மாமியார் உடைத்த மண்குடம்!

வான் வழிப் பாதையே தமது ஒரே பயணப் பாதை என நம்பியிருந்த யாழ்ப்பாண மக்களுக்குப் பேரிடி ஒன்று தலையில் இறங்கியது. செப்டெம்பர் 29 ம் திகதி "ஐயோ, இன்று யார் முகத்தில் முழித்தோமோ...! இன்றைய நாள் பொழுது ஏன்தான் புலர்ந்தது?" என வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினார்கள் தாய்மார்கள், பெண்கள், ஏன் பிள்ளைகளும் கூடத் தான்.

செப். 29 ம் திகதி 19 பெண்களும், ஒரு குழந்தையும், 28 ஆண்களும் எனப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பலாலியிலிருந்து சரியாக பகல் 1.40 க்குப் பறப்பட்ட லயன் எயார் விமானம் 25 நிமிடங்களுக்குப் பின்பு தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்புகளை இழந்து புதிர்நிலையை அடைந்தது.

பலாலி விமானத் தள அதிகாரிகளின் கூற்றுப்படி விமானத்துக்குள் ஒரு வளிய முக்கப் பிரச்சினை இருப்பதாக விமானி கூறி, 15000 அடி உயரத்துக்கு விமானத்தை உயர்த்துவதற்கான அனுமதியை அவர் கோரிய அடுத்த வினாடி தொடர்புகள் அறுந்துள்ளது. லயன் எயார் விமானம் மாயமாய் மறைந்த நாடகத்தின் ஆரம்பக் காட்சி இது.

விமானத்திலே தமது இனசனத்தாரை ஏற்றி வழியனுப்பி வைத்தவர்களும், வந்திறங்குபவர்களை எதிர்பார்த்துக் கொழும்பில் காத்திருந்தவர்களும் இந்தச் செய்தி கேட்டுப் பதறிப் போனார்கள். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் தலையில் இடியிறங்கிய உணர்வில் நெஞ்சு பதைத்துக் கலங்கி இவர்கள் கண்ணீரும் கம்பலையுமாய்க் கூக்குரலெழுப்பிக் கொண்டிருந்த வேளையில், விமானத்தின் தலைவிதியைத் தீர்மானித்தவர்களோ, கொடுக்கப்பட்ட பணியைத் திருப்திகரமாக நிறவேற்றிய வெற்றிக் களிப்பை மறைக்க முடியாதவர்களாக இருந்தார்கள். இலக்கு அடிக்கப்படுவதையும், அதைச் சரியானபடி சாதித்துவிட்ட உற்சாகத்தில் அவர்களது ஆரவாரத்தையும் பார்த்த வலைப்பாடு, நாச்சிக்குடாப் பகுதி மீனவர்கள் பயத்தில் உறைந்து விக்கித்துப் போனார்கள்.

### ஊகங்களும் வியாக்கியானங்களும்

விமானம் மறைந்துவிட்டது. தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கு லயன் எயார் காரியாலயங்களை நோக்கி ஆலாய்ப் பறந்தனர் மக்கள். என்ன பரிதாபம்! யாழ்ப்பாண லயன் எயார் காரியாலயம் இழுத்து மூடப்பட்டுக் கிடந்தது. கொழும்பு காரியாலயத்தை மொய்த்த மக்களுக்கு உருப்படியான பதில எதுவுமே கொடுக்கப்படவில்லை. கேட்க முடிந்த வானொலிச் செய்திகள், தொலைக்காட்சிச் செய்திகள்-பீ.பீ.சி தமிழோசை உட்பட - எல்லாவற்றையும் மக்கள் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருந்தும், கொழும்பிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள் வவுனியாவுக்குப் பறந்தன - வவுனியாவில் 'புலிகளின் குரல்' வானொலி என்ன சொல்கிறது என்பதைக் கேட்பதற்காக. ஏனெனில், இதற்கு முதல் வாரங்களில் லயன் எயார் விமானப் பணியகத்தினருக்கும், பத்திரிகைகளுக்கும் விமான சேவையை நிறுத்திவிடும்படி எச்சரித்த கடிதங்களைப் புலிகள் அனுப்பியிருந்தார்கள் என்பதை பொதுமக்கள் சாடைமாடையாக அறிந்திருந்தார்கள். அத்தோடு, தமிழ் மக்களின்பால் அக்கறையும் ஆதரவும் கொண்டு செய்திகளை ஒலிபரப்பி வருவதாக நம்பப்பட்ட புலிகளின் செய்தி ஸ்தாபனம் இது பற்றி என்ன கருத்தை சொல்கிறது என்றறிய மக்கள் ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், இத்தகைய சம்பவம் ஒன்று நடந்ததற்கான அறிகுறியையே காட்டாது மௌனம் சாதித்தது புலிகளின் குரல்.




விமானம் மறைந்த நாளிலிருந்து இரண்டு வாரங்களாக பத்திரிகைகளும் ராணுவ ஆய்வாளர்களும் பல்வேறு ஊகங்களையும் வியாக்கியானங்களையும் முன்வைத்தனர். ஆனால் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் தமது ஊகங்களில் விமானத்தை விடுதலைப் புலிகள் தாக்கினார்கள் என்ற விடயத்தை எவ்வாறு சொல்லாமலிருக்கலாம் எனப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். பயணிகளுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய லயன் எயார் நிறுவனமோ 'ரஷ்யாவிலிருந்து சுழியோடிகள் வந்து விமானத்தின் கறுப்புப் பெட்டியைத் தேடியெடுக்கும் வரை எதுவுமே சொல்ல முடியாது' என கைவிரித்து விட்ட இந்த நிலையில் பயணிகளின் இனசனத்தவர்கள் அந்தரிக்க விடப்பட்டனர்.

### பத்திரிகைகள் மறைத்தும் மீனவர்கள் துலக்கிய மர்மம்

மன்னாரிலுள்ள வங்காலையைச் சேர்ந்த இரண்டு பல்கலைக்கழக மாணவிகளான வனஜா, செல்வராணி ஆகியோரின் பெற்றோர்கள் விமானத்தில் பயணம் செய்து காணாமல் போன தங்கள் பிள்ளைகளின் கதியை அறிய, அறிந்தவர் தெரிந்தவர்களின் கால்களிலெல்லாம் விழுந்தனர். இறுதியாக தேவசகாயம்பிள்ளை என்ற கத்தோலிக்க மதகுருவின் உதவியை நாடினர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான நாச்சிக் குடாப் பகுதிக்குச் சென்ற மதகுருவுக்கு பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களின் ஊகங்கள் வியாக்கியானங்கள் எல்லாம் கேலிக்கிடமானவையாகத் தெரிந்தன. அவரைச் சந்தித்த மீனவர்கள் மிகவும் தெளிவாக, விலாவாரியாக, ஆனால் இரகசியமாக தாங்கள் கண்ணால் கண்ட சம்பவத்தை விபரித்தார்கள்.

விமானத் தாக்குதல் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே இரணைதீவு புனித செபஸ் தியார் ஆலயத்துக்கு அருகே மரத்தாலான உறுதியான மேடையொன்றை புலிகள் தயாரித்து வந்த தாகவும், சம்பவ தினத்தன்று அந்த மேடையிலே பொருத்தப்பட்ட ஒரு ஏவுகணை ஆயுதத்தைக் கொண்டு ஒரு 17 வயதுச் சிறுவன் இவ் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகவும் அவர்கள் கூறினர். இத் தாக்குதலுக் கான பொறுப்பை நாச்சிக்குடாவிலுள்ள கடற்புலித் தளத்தின் பொறுப்பாளர் அருள் என்பவரே நிறை வேற்றியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



இரணைதீவின் பெருந்தீவுக் கரையருகே மீன்பிடித்துக்கொண் டிருந்த மீனவர்கள், விமானம் தீப்பிடித்தபடி சுமார் ஒருமைல் தூரத்தில் 12 முதல் 15 அடி ஆழமுள்ள கடற் பரப்பில் விழுவதையும் அதிலிருந்து கடதாசிபோன்ற அல்லது ஈயப் பொருட்கள் வெளிவந்ததையும் கண்டனர். இதையடுத்து இரு கடற்புலி அதிவேகப் படகுகள் சொற்ப நேரத்துக்குள் அவ்விடத்திற்கு விரைந்து சென்று வட்டமடித்ததைக் கண்டு வியந்தனர். இதனால் அச்சம் கொண்ட மீனவர்கள் பெருந் தீவுக் கரையை அடைந்து என்ன நடைபெறுகிறதெனப் பார்த்து நின்றனர். அப்போது அவ்விடத்துக்கு வந்த புலிகள் அவர்களை அவ்விடத்திலிருந்து போகும்படி பணித்துவிட்டு மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்ததாக அம் மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயங்களையெல்லாம் கண்டு கேட்டு வந்த மதகுருவான தேவசகாயம்பிள்ளையை பி.பி.சி. தமிழோசை ஒக்டோபர் 2ம் திகதி பேட்டி கண்டது. அவர் தனது பேட்டியின்போது மீனவர்கள் அவருக்குச் சொன்ன பல உண்மைகளைத் தவிர்த்து, விமானம் கடலில் விழுந்து நொருங்கியதையும் பயணிகள் எல்லோரும் இறந்ததற்கான சாத்தியக்கூறுகளையும் உறுதிப்படுத்தினார்.

அத்துடன் விமானத்தில் பயணம் செய்த ஒருவரான நீர்கொழும்பைச் சேர்ந்த குமாரசாமி ரகுநாதன் என்பவரது அடையாள அட்டையை நாச்சிக்குடா கடற்கரையில் கண்டெடுத்து வண. தேவசகாயம்பிள் ளையிடம் மீனவர்கள் கையளித்ததாகவும், ஆறு சிதைந்த உடல்களை இரணைதீவுக்கு வடகிழக்கே யுள்ள வலைப்பாடு கடலோரத்தில் தாம் கண்டெடுத்துப் புதைத்ததாகவும் அவர்கள் மதகுருவிடம் கூறியதாக அவர் பி.பி.சி.க்கு தெரிவித்தார். இதன்பின் நாளாந்தம் வந்து கரையொதுங்கிய சுமார் நாற்பது உடல்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளன.



சிலர் உண்மையை மூடிமறைக்கும் வகையில் 'என்ன நடந்த தென்று தெரியாது...!' என்ற மலைப்பை மட்டுமே மக்களுக்குள் கிளப்பிவிட எடுத்த முயற்சிகளெல்லாம் அடிபட்டுப் போக,...அந்த உடல்களைப் போலவே, சகிக்க முடியாத இந்த உண்மையும் மேலே மிதந்து வந்து கரையொதுங்கி, மக்களது மனங்களை யும் முகங்களையும் சுளிக்க வைத்தன.

> **உடைத்த மண்குடத்தை நியாயப்படுத்தும் ஊகங்கள்**
>
> ✈ **இயந்திரக் கோளாறினால் விமானம் கடலிலே விழுந்திருக்கலாம்.**
>
> ✈ **புலிகள் விமானத்தைக் கடத்தி முல்லைத்தீவுக் காட்டிலே பத்திரமாக இறக்கி வைத்திருக்கலாம்.**
>
> ✈ **அன்றைய தினம் இராணுவத்தை ஏற்றிக் கொண்டும் ஒரு விமானம் வரவிருந்தது. எனவே தவறுதலாக அவ்விமானமாக நினைத்து புலிகள் இதைத் தாக்கியிருக்கலாம்.**

இந்தச் சம்பவத்தின் பாரதூரத்தையும், மக்க ளின் கவலையையும் அசட்டை செய்யமுடியாத நிலையில், பொதுவாக ஆயுதப் போராட்டத்தின் பக்கம் மென்மனம் கொண்ட சில பத்திரிகைகள் கூட சற்றுக் காரமாகக் கண்டனம் தீட்டியுள்ளன. யாழிலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை யின் ஆசிரியர் தலையங்கம் (04.10.98) இவ் வாறு பேசுகிறது:

*'.....பயணிகள் சேவை தடைப்படக்கூடும் என்று ஏற்கனவே குடாநாட்டு மக்களிடையே வதந்திகள் நிலவிய போதிலும் இத்தகைய கொடுமை ஒன்று நடைபெறும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இரணை தீவுச் சம்பவத்துக்கு காரணம் எதுவாக இருந்தாலும், அதற்குப் பொறுப்பானவர்கள் யாராக இருப்பினும், மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்தவர்கள் ஆவார்கள். அவர்கள் கண்டனத்துக்கு உரியவர்களும் ஆவர்.'*

இக் கோரச் சம்பவம் தொடர்பாக பல தகவல்களைச் சேகரித்து மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்களின் அமைப்பு (UTHR) ஒரு விசேட அறிக்கையை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் விடுதலைப்புலிகள்தான் விமானத்தைச் சுட்டுவீழ்த்தினார்களென ஆதாரபூர்வமாக நிரூபிக் கும் அவர்கள், இம் மனிதாபிமானமற்ற செயலை மிக வன்மையாகக் கண்டித்துள்ளனர். அத்துடன் லயன்

**ஓகஸ்ட் 9**

லயன் எயார், மொனரா ஆகிய இரு யாழ். விமான சேவைகளுக்கும், சேவைகளைக் குறித்த தினத்துடன் இடைநிறுத்தும்படி எல்.ரீ.ரீ.ஈ. இனரெனக் கருதக்கூடியவர்களால் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள் ளன. ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**செப்டெம்பர் 13**

**'தாக்குதலுக்கான முன்னறிவிப்பு'** என்ற தலைப்பிடப்பட்ட கடிதமொன்று எல்.ரீ.ரீ.ஈ. இன் யாழ்ப்பாணத்திற்கான தலைவரான தூயவன் என்பவரால் கையொப்பமிடப்பட்டு 'தமிழீழ நிர்வாக சேவை' என்ற கடிதத் தலைப்பிலான தாளில் எழுதப்பட்டு யாழ்ப் பாணத்திலிருக்கும் யாழ். லயன் எயார் முகா மையாளரின் மேசைக்கு விநியோகிக்கப் பட்டது.

**செப்டெம்பர் 17**

மேற்படி எச்சரிக்கைக் கடிதத்தின் விளை வாக மொனரா விமானம் தனது சேவையை இடைநிறுத்திக்கொண்டது.
விமான சேவையை இடைநிறுத்தும்படியான இவ் எச்சரிக்கைக் கடிதத்தையிட்டு ஈ.பி.ஆர். எல்.எஃப். உதயன் (18.09.98) பத்திரிகை யில் கண்டித்திருந்தது.

**செப்டெம்பர் 23**

யாழ்ப்பாணத்திற்கான லயன் எயார் முகாமையா ளரை வெளியேறும்படி எச்சரித்த, எல்.ரீ.ரீ.ஈ. இடமிருந்து வந்ததாக நம்பப்படும் கடிதமொன்று கிடைக்கப்பெற்றது. அவ்வாறே அவர் வெளியே றியுள்ளார்.

**செப்டெம்பர் 24**

**'பொது மக்களுக்கு ஒரு எச்சரிக்கை'** என்ற தலைப்பிலான கையால் எழுதப்பட்ட நோட் டீஸ் ஒன்று யாழ். இந்துக் கல்லூரி வாசல், சங்கத்தானை, சாவகச்சேரி, ஆகிய இடங் களில் ஒட்டப்பட்டிருந்தது. எச்சரிக்கும் கடி தங்கள் வர்த்தக சங்கத்தினருக்கும் யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்திற்கும் அனுப்பப் பட்டதாகத் தெரிய வருகிறது.

**செப்டெம்பர் 24**

எல்.ரீ.ரீ.ஈ. அரசியல் பிரிவைச் சார்ந்த பி. மணிமாறன் என்பவரின் கையொப்பமிடப்பட்டு **'மக்களுக்கு ஒரு விண்ணப்பம்'** என்ற தலைப்பிலான, விமான சேவை பற்றிய எச்சரிக்கையுடன், விமானப் பயணத்தைத் தவிர்க்கக் கோரும் கடிதமொன்று உதயன் பத்திரிகைக்குப் பிரசுரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆயினும் அது பிரசுரிக்கப் படவில்லை.

**செப்டெம்பர் 29**

யாழ். ஜோன் பொஸ்கோ பாலர் பாடசாலை யிருந்து 20 பிள்ளைகள் நிகழ்ச்சி ஒன்றிற் காக திருமலை செல்வதற்காக செப்டெம்பர் 30ம் திகதி லயன் எயாரில் ஆசனம் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப் பாடசா லைக்குக் கடிதம் அல்லது வாய் மூலம் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் எச்ச ரிக்கையை அடுத்து அப் பயணத்தை செப் டெம்பர் 29ம் திகதி பி.ப. 12.30 மணிக்கு ரத்துச் செய்துள்ளனர். அதே தினம் பி.ப. 1.40 ற்குப் புறப்பட்ட விமானமே வீழ்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சசி கிருஷ்ணமூர்த்தி

எயார் விமான சேவையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் மூடி மறைக்கும் செயற்பாடுகளை மிக வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

**U T H R அறிக்கையிலிருந்து....**

லயன் எயார் நிறுவனம் இச் சம்பவத்தை முற்று முழுதாக மூடி மறைக்க முயற்சியெடுத்தது. தமது விமானத்தில் பயணித்து இறந்தவர்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலிருந்து நழுவிச் சென்றது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, சாதாரண சிவில் மக்களின் போக்குவரத்துக்கென ஆரம்பிக்கப்பட்ட லயன் எயார் சேவையின் விமானங்களை இராணுவத்துக்கு தேவையான வேளைகளில் வாடகைக்கு விடுத்து வந்துள்ளனர். அடுத்து மக்களோடு மக்களாக சிவிலுடை தரித்த இராணுவ அதிகாரிகளையும் இடைக்கிடை இவ் விமானங்களில் பயணிக்க இவர்கள் அனுமதித்து வந்துள்ளனர்.



திரேசிந்தா (யூமா) இமாக்கியூ லேற்றா (செல்வராணி)



அதுமட்டுமன்றி புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் ஏற்படக் கூடுமென்பதற்காக பாதுகாப்பு அமைச்சினால் கொடுக்கப்பட்ட வான் பாதையைப் பாவிக்காது, யாழ். குடா நாட்டுக்கு மேலாகப் பறந்து, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அண்மித்துப் பறந்துள்ளனர். மொனரா விமான சேவையை விட 10 நிமிட நேரம் பறப்பு நேரத்தைக் குறைத்துக்கொள்ளும் போட்டி காரணமாகவும், எரிபொருளை மீதம்பிடித்து லாபம் தேடுவதற்காகவும் இம் மோசமான தவறை லயன் எயார் நிறுவனம் புரிந்திருக்கிறது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் தமது நிறுவனத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பினரால் விடுக்கப்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்களையும் மக்களுக்கு வெளிப்படுத்தாமல் மூடி மறைத்தது.



ஸ்ரீகாந்த் நிளாயினி

விமானத்தில் சென்ற பயணிகளுக்கு காப்புறுதி சரிவர செய்யப்படாததுடன் பலியானவர்களின் உடல்களைத் தமது விமானத்தில் பயணித்தவர்கள்தான் என உறுதிப்படுத்தி அவ் உடல்களைப் பொறுப்பேற்கவோ அல்லது உறவினர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவோ அல்லது மரணத்தை ஊர்ஜிதம் செய்யக்கூட முன்வரவில்லை.

இதற்கு லயன் எயார் சேவையினர் காரணமொன்றைக் கூறுகின்றனர்.

ஐ.சி.ஆர்.சி. யினரூடாக புலிகள் இயக்கத்தினரை அணுகியதாகவும், நாச்சிக்குடாப் பகுதியில் தேடுதல் நடத்துவதற்கும் பயணிகளின் சடலங்களைப் பொறுப்பேற்று உறுதிப்படுத்துவதற்கும் அனுமதியைக் கோரிய போது முதலில் அவர்கள் ஒப்புக்கொண்டதாகவும், பின்னர் என்ன காரணத்தாலோ எல்.ரி.ரி.ஈ. யினர் அந்த உடல்களை நாம் பொறுப்பேற்பதற்கு விட மறுத்துவிட்டனர் என்றும் லயன் எயார் விமான சேவையினர் கூறுகின்றனர்.


தமிழீழ நிர்வாக சேவை
TAMILEELAM ADMINISTRATIVE SERVICE

யாழ்குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கும் எமது மக்களிற்கான வேண்டுகோள்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சகத்தைப் பொறுத்தவரை, தம்மால் கொடுக்கப்பட்ட வான் பாதையை மீறி லயன் எயார் சேவையினர் தங்களிஷ்டப்படி ஆபத்தான பாதையில் பயணிக்கிறார்களென பல்வேறு தமிழ்க் கட்சிப் பிரமுகர்களால் சுட்டிக்காட்டப்பட்ட போதும், அதுகுறித்து அசட்டையாக இருந்துள்ளது.

இந்தக் கோரச் சம்பவத்தில் ஒட்டுமொத்தமாகப் பலியாகிப்போன அப்பாவி மக்களின் உறவினர்கள் தம் கையறு நிலையை நினைந்து விட்ட கண்ணீரும் உலர்ந்துபோய் விட்டது. இப்போது மடுமாதா கோவிலிலும் நாச்சிக்குடாவிலும், இறந்தவர்களுக்காக ஆராதனை செய்யப்படுகிறது. ஆனால் இத்தகைய துயரங்களுக்கான முற்றுப்புள்ளிமட்டும் எமது கண்களுக்கு இன்னும் தென்படுவதாக இல்லை.

**மேலேயுள்ளவை, அனர்த்தத்தில் உயிரிழந்தோரில் நமக்குக் கிடைத்த சிலரின் புகைப்படங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நாய்

மக்குவயரி என்ற இடையன் விபத்தில் மாட்டிக் கொண்டான். சொல்லப் போனால் உண்மை அதுவன்று. தெருச் சந்தியில் இருந்த தவறணையில் குடித்துக் கும்மாளமடித்ததில் விலா எலும்புகள் மூன்று முறிந்து விட்டன. மண்டையில் பலத்த அடி. உடம்பெல்லாம் சிறு காயங்கள்.

அவனுடைய டலி என்ற நாய், குடி போதையில் இல்லாதிருந்தும், குடிகாரர்களின் சண்டையில் மூர்க்கத்தனமாகப் பங்கு கொண்டதால் கால் ஒன்று முறிந்ததுடன் தப்பிக் கொண்டது.

இதன் பின்னர் மக்குவயரி தன் மூட்டை முடிச்சுகளுடன் தள்ளாடித் தள்ளாடி நடந்து, பத்து மைல் தூரத்துக்கப்பால் இருந்த அரசாங்க வைத்திய சாலையைச் சென்றடைந்தான். அவன் எப்படிப் போய்ச் சேர்ந்தான் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

டலி மூன்று காலில் நொண்டி நொண்டி அவன் பின்னால் சென்றது.

இவ்வளவு வருத்தத்தையும் தாங்கிக் கொண்டு எப்படித்தான் இவ்வளவு தூரம் நடந்து வந்தானோ என்று அவனுடைய காயங்களைப் பரிசோதித்த வைத்தியர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆமாம், சில சமயங்களில் வைத்தியர்களும் வியப்படைவதுண்டு.

ஆனால் அதை அவர்கள் எப்போதுமே வெளிக்காட்டமாட்டார்கள். அவனுக்கு சிகிச்சை செய்ய வேண்டும். ஆனால், அந்த நாயை உள்ளே அனுமதிக்க அவர்கள் இணங்கவில்லை.

"நாய்களை வைத்தியசாலை வளவுக்குள் அனுமதிக்க முடியாது. இந்த நாயை வெளியே துரத்தி விடு" என்று கட்டில் விளிம்பில் உட்கார்ந்திருந்த மக்குவயரிக்கு மருத்துவர்கள் சொன்னார்கள்.

மக்குவயரி ஒன்றும் சொல்லவில்லை.

அவனுக்குக் காது மந்தம் போலும் என்று நினைத்த டாக்டர், "இந்தாப்பா....! நாய்களை இங்கு கொண்டுவரக் கூடாது" என்றார்.

"அப்படி என்றால் அதை முற்றத்தில் கட்டி விடுங்கள்"

"அது முடியாது. அதைத் துரத்திவிடு. இந்த வளவுக்குள் நாய்கள் வரக்கூடாது."

மக்குவயரி கட்டிலைவிட்டு மெல்ல இறங்கினான். உடம்பின் வலியை பல்லை நறும்பித் தணிக்க முயன்றபடியே, மயிர் அடர்ந்த மார்பின்மேல் சேட்டை இழுத்துப் பொத்தானை மாட்டிக் கொண்டான்.

மேலங்கியைத் தூக்கிக்கொண்டே தன் பொட்டணியை வைத்திருந்த மூலையை நோக்கித் தள்ளாடி நடக்க முற்பட்டான்.

"என்ன செய்யப் போகிறாய்?"

"என்னுடைய நாயை இங்கே தங்கவிட மாட்டீர்களா?"

"அது சட்டத்துக்கு மாறான செயல். வைத்தியசாலை வளவுக்குள் நாய்களை வரவிடக் கூடாது."



அவன் குனிந்து தன் பொட்டணியைத் தூக்கிக் கொண்டான். ஆனாலும் வலி தாங்க முடியாமல் சுவரில் சாய்ந்தான்.

"சரி சரி இங்கே வா அப்பா" என்றார் டாக்டர் பொறுமை இழந்தவராக.

"நீ சரியான பைத்தியக்காரனாக இருக்கிறாயே. இந்த நிலைமையில் நீ எப்படி வெளியே போவாய்? வாட்டில் உள்ளவர்கள் உன் உடுப்பைக் களைய விடு."

"ஏலாது! ஏலாது! என்னுடைய நாயை அனுமதிக்க ஏலாதென்றால் நான் இருக்க மாட்டேன். அதுக்கு ஒரு கால் முறிந்து போயிருக்கு. எனக்குப் போல அதுக்கும் வைத்தியம் செய்ய வேணும். எனக்கு நீங்கள் வைத்தியம் செய்யலாமென்றால் அதுக்கும் செய்ய வேணும்."

சற்றுப் பொறுத்து மிகுந்த சிரமத்துடன் மூச்சு விட்டவாறே தொடர்ந்து சொன்னான்.

"என்னுடைய இந்தக் கிழட்டு நாய் இந்தப் பன்னிரண்டு வருஷமாய் எனக்குப் பின்னாலேயே விசுவாசத்துடன் திரிந்திருக்கிறது. என்னோடு சேர்ந்து பட்டினி கிடந்திருக்கிறது. அது ஒன்றுதான் நான் உயிரோடிருக்கிறேனா இல்லையா என்றெல்லாம் கவலைப்பட்ட ஒரே பிறவி."

அவன் சற்று ஓய்வெடுத்துக்கொண்டான். பின்னர் தொடர்ந்து சொன்னான்.

"அந்த நாயை தெருவோரத்தில் குட்டியாக எடுத்தேன். மாதக் கணக்காக ஒரு பானைக்குள் போட்டு அதைத் தூக்கித் திரிந்தேன். கொஞ்சம் கொழுத்ததும் என் பொட்டணியில் வளர்த்தேன். அதன் தாய் - அந்த வேசி - நல்ல சந்தோஷமாக என் பின்னே வந்து கொண்டிருந்தது.

"குட்டி சுகமாக இருக்கிறதா என்று அறிய இடைக்கிடை பானையை மணந்து பார்க்கும். எத்தனை வருஷமாக அதுவும் எனக்குப் பின்னால் வந்ததோ கடவுளுக்குத்தான் தெரியும்! கண் குருடாகி ஒரு வருஷம் கழிந்த பிறகும் அது பின்னாலே வந்து கொண்டிருந்தது.

"நழுவி நழுவி வர முடியாத நிலை வருமட்டும் அது பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. கடைசியாக அந்த நாயைக் கொன்றேன். உயிரோடுவிட எனக்கு மனம் வரவில்லை." மறுபடியும் அவன் இளைப்பாறினான்.

டலியின் நிமிர்ந்த நாசியைத் தன் சுருக்கம் விழுந்த விரல்களால் தொட்டுக்கொண்டே அவன் சொன்னான், "இந்தக் கிழட்டு நாய் எனக்குப் பின்னால் பத்து வருஷம் திரிந்திருக்கிறது. வெள்ளமோ, வரட்சியோ, பஞ்சமோ, செழிப்போ - எப்பவும் பஞ்சம்தான்! - தனி வழியே காசு பணமோ தோழனோ ஒன்றுமில்லாமல் பைத்தியம் பிடித்த சமயங்களில் எல்லாம் என் கூடத் துணையாக இருந்திருக்கிறது.

"கிழமைக்கணக்கில் குடி போதையில் மயங்கிக் கிடந்தபோதெல்லாம், நாசமாய்ப் போன சாராயத் தவறணைகளில் கண்மண் தெரியாமல் நஞ்சை விழுங்கி விழுங்கிக் கிடந்தபோதெல்லாம் காவல் காத்திருக்கிறது. ஒரு முறைக்குப் பலமுறை என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது.

"அதுக்கெல்லாம் என்ன பலன் கிடைத்திருக்கிறது தெரியுமா? என் உதையும் திட்டும்தான். அதையெல்லாம் மனசில் வைத்திருக்காமல் எனக்காகச் சண்டை போட்டிருக்கு. அந்தத் தவறணையில் தறுதலைப் பயல்களெல்லாம் சேர்ந்து என்னைத் தாக்க வந்தபோது இந்த நாய் ஒன்றுதான் எனக்காகப் போராடியது.

"சில தறுதலைகளைக் கௌவிக் குதறி தன் அடையாளத்தைப் பதித்தும் இருக்கு. நானும் அவர்களைச் சும்மா விடவில்லை."

மறுபடியும் ஓய்ந்தான்.

"இந்த நாய் மனிசனான என்னைப் பார்க்கிலும் நல்லது. உங்களை விடவும் நல்லது. நல்ல கிறிஸ்தவனும் கூட. நான் ஒருகாலமும் எவனுக்கும் நல்ல கூட்டாளியாக இருந்ததில்லை. எந்த மனுசனும் எனக்கு நல்ல கூட்டாளியாக இருந்ததில்லை. இந்த நாய்தான் எல்லாவற்றிலும் நல்ல நாய் எனக்கு.

"இது எனக்கு காவல் இருந்திருக்கிறது. எத்தனையோ முறை என் பொருள் பண்டங்களைத் திருட்டுப் போகாமல் காப்பாற்றியிருக்கு. எனக் காகச் சண்டை பிடித்திருக்கு. எல்லாத்துக்கும் கைமாறாக இந்தக் குடிகாரனுடைய உதையையும் திட்டையும் வாங்கியிருக்கு. அதையெல்லாம் மன்னித்தும் இருக்கு.

"உண்மையான நேர்மையான வஞ்சகமில்லாத விசுவாசமான நாயென்றால் அது இதுதான். அப்படிப்பட்ட ஒரு சீவனை இந்தச் சமயத்தில் நான் கைவிட மாட்டேன். அதை முறிஞ்ச காலோட தெருவிலே தள்ளுவேனா?" தடுமாறினான்.

"கடவுளே! என் முதுகு நோகுதே!" என்று முனகிய வண்ணம் முகம் குப்புற விழப்போன அவனை அவர்கள் தாங்கிப் பிடித்து பொட்டணியைத் தோளில் இருந்து அப்புறப்படுத்திவிட்டு கட்டிலில் கிடத்தினார்கள்.

அரை மணி நேரம் கழிந்த பின் அந்த இடையன் நல்ல முறையில் சிகிச்சை பெற்றிருந்தான்.

"எங்கே என் நாய்?" என்றான் சுயநினைவு வந்தவுடன்.

"நாய் நல்லாத்தான் இருக்கு" என்றாள் தாதி பொறுமை இழந்தவளாக.

"கவலைப்படாதே! டாக்டர் முற்றத்தில் அதன் காலுக்கு வைத்தியம் செய்கிறார்.

**ஹென்றி லோசன்**
**அவுஸ்திரேலியா**

**தமிழில்: நவீனன் இராசதுரை**

**எடில்பேட் நவீனன் இராசதுரை**

மொஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் பட்டம் பெற்றவர். அத்துடன் ஜெர்மனி, ஒல்லாந்து போன்ற நாடுகளிலும் தன் படிப்பைத் தொடர்ந்தவர். தமிழில் சிறுகதைகள் எழுதியிருக்கிறார். அவுஸ்திரேலியாவில் தமிழ், ஜெர்மன் மொழிகளில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். காவலூர் ராசதுரையின் மகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஜீ

"ஐயோ வேட்டி"

"ஓடண்ண, அவன் துவக்கையே எறிஞ்சுபோட்டு ஓடுறான். நீங்கள் வேட்டியெண்டுகொண்டு...! ஓடுங்கோண்ண!

ஓடுற ஓட்டத்தில் புழுதி கிளர்ந்தெழ ஓட்டம் பிடித்தார்கள். விடுப்புப் பார்த்தவர்களும் பங்கேற்றவர்களும் சும்மா இருந்தவர்களும் ஓட்டம், மரண ஓட்டம்.

"ஐயோ வாத்தியார்.........!

'அண்ண நிக்காதையுங்கோ ஓடுங்கோ, நிண்டமோ.....

தேவையில்லாமல்தான் விடுப்புப் பாக்க வெளிக்கிட்டு இப்ப வேட்டிய உருவவிட்டு ஓட வேண்டியதாய்ப் போச்சு. நின்று நிதானிக்கும் அவகாசமெல்லாம் துப்பாக்கி வேட்டொலியில் சிதற, ஓட்டம்.... ஆனாலும் மனம் பின்னோக்கிப் பின்னோக்கி மெல்ல மெல்ல ஓட்டமும் நடையுமாக....

வயலும் காடும் சார்ந்த நிலத்தில், வயலின் ஒரு முனையில் காடு ஆரம்பம். மறுமுனையில் குடிமனைகளின் ஆரம்பம்.

மாலைப் பொழுது.

மன்மதக் குஞ்சுகளெல்லாம் தெருத்தெருவாக அலைந்து கொண்டிருந்தார்கள். என்ன.... வயதுக் கோளாறு. வயதுபோன காலத்தில் நினைத்து நினைத்து வெட்கப்பட....



பெரிய வேம்பின் வேரொன்றில், மாஸ்டர் ஆற அமர பிடரியில் கைவைத்து தியானித்திருந்தார். குளிர்ந்த இளங் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. அவரால் இரசிக்கும்படி எதுவும் நடந்ததாக இல்லை. நடந்து கொண்டிருப்பதாகவும் இல்லை.

அவர் மனம் மிகவும் குழம்பிக் கிடந்தது. அவரால் இருப்பவர்களுடன் ஒட்டவும் முடியவில்லை, வெட்டவும்முடியவில்லை. அவரோடு ஒட்டிக்கொண்ட ஓரிரண்டு பேரைத் தவிர அவர் உறவாட எதுவும் இருக்கவில்லை.

வயலும் வயல் சார்ந்த இடமும் காடும் காடு சார்ந்த இடமும் என்றோ, பெண்டிரெல்லாம் மென் பஞ்சொத்த நீள்கரங்கள் கொண்டு களை பிடுங்குவதையோ, பயிர் நாட்டுவதையோ ஏகாந்தத்தில் நின்று அவரால் உறவாட முடிவதில்லை.

மூலைகள் சுருண்டுவிட்ட இரண்டு கொப்பியும், ஆட்டுப் புளுக் கையளவு பென்சிலையும் ஒரு கையால் மார்போடு அணைத்தபடி, மறு கையால் காற்சட்டையின் அந்தலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வரும் அந்தச் சிறுவன் அவர் மனசுக்குள் சுற்றிச் சுற்றி சுழன்று வந்தான்.

நேற்று இருந்தாப்போல் மயங்கிக் கீழே விழுந்து விட்டான். பதறிப் போய் முகத்திலே தண்ணீர் தெளித்து, வெறும் நிலத்தில் கிடத்தினார் வாத்தியார். பையன்களை விட்டு பணிஸும் தேனீரும் வாங்கிக் கொடுத்தார், தவிச்ச வாய்க்குத் தண்ணீர் போல. சாப்பிட்டு முடிந்தவுடன்தான் அவனுக்கு வெட்கம் வந்தது.

நேற்று வெறும் வயிற்றுடன் வந்து பாடசாலையில் மயங்கி விழுந்தவன், இன்று பள்ளிக்கும் வரவில்லை. அவர் மனம் இருப்புக் கொள்ளவில்லை.

"என்ன வாத்தியார் ஒரே யோசன?"

புன்னகையை வரவழைத்து இதழோரம் பரவவிட்டு நிமிர்ந்தார் வாத்தியார்.

கந்தையாண்ண அவருடன் ஒட்டிக்கொள்ளும் ஒருவர். ஊர்ப் புதினங்களின் பொக்கிஷம். வாத்தியாரை எச்சரிக்கையில் இருத்தப் பண்ணினவரும் கந்தையாண்ணதான்.

"வாத்தியார் பள்ளிக்குப் போனால் படிப்பியுங்கோவன். ஏன் தேவையில்லாத வேலையில எல்லாம் தலை போடுறியள். வாங்கில இருந்து படிக்கிற பிள்ளையள் படிக்கட்டும். நீங்களேன் முன்னுக்கு வாற பிள்ளையள் வாங்கில பின்னுக்கு வாறபிள்ளையள் நிலத்திலயெண்டு... பிரச்சனேக்க மாட்டுப்படுறியள் 'நான் அசைந்தால்தான் அசைய வேணும்' என்று சிலதுகள் திரியுதுகள். நீங்கள் வேற சும்மா கரைச்சல் படாதையுங்கோ.

சிரிச்சபடி வாத்தியாரருகில் வந்திருந்தார், கந்தையாண்ண.

ஒரு கூட்டம் காட்டுத் திசையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. முன்னால் போனவன் துப்பாக்கி (சொட்கன்) ஒன்றைத் தூக்கிக் கொண்டு, மலையைத் தூக்கின வீறாப்பில் போக, பின்னால் ஒரு பட்டாளம் திரண்டு போனது.

"வாங்கோ வாத்தியார் என்னெண்டு பாத்துக் கொண்டு வருவம்..."

"நான் வரேல்ல. நீர் போய்ப் பார்த்துக்கொண்டு வாரும்"

"வாங்கோ வாத்தியார்"

கையில் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தார் கந்தையாண்ண.

வயல் நெற்காடாக விரிந்து கிடந்தது. வயற் காற்றில் நெற்கதிர்கள் அசைந்தன, 'வா வா' வென அழைப்பது போல. எதையும் அர்த்தப்படுத்தும் நிலையில் வாத்தியார் இல்லை.

"வாத்தியார் என்ன பிரச்சினையெண்டு தெரியுமே, கொஞ்ச நாளா ஒரு யானை வயல நாசம் பண்ணுது அதுதான் சுடப்போறாங்கள்."

முன்னால துவக்கோடு போனவன் திடீரெனப் பதுங்கினான். இமைப்பதற்குள் துவக்கை மறுகைக்கு மாற்றினான். மற்றக் கையால் சைகை காட்டினான், பின்தொடர்ந்தவர்களையும் பதுங்கச் சொல்லி.

"ஏதோ...!"

மனதுக்குள் சிரித்துக் கொண்டு வாத்தியார், கந்தையாண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்த பக்கம் சென்றார்.

யானை தன் வேலை... நிலத்தில் ஏதோ தொலைத்துவிட்டுத் தேடுவது போல தும்பிக்கை தேடிக்கொண்டிருக்க, காதுகளை அசைத்துக் கொண்டிருந்தது.

அவனோ 'பொஸிஸன்' எடுத்துக் கொண்டிருந்தான். அவன் திருப்தியடைந்தவனாக இல்லை. மாறி மாறி குறிபார்த்தான். இறுதியில் எழுந்து நின்று ஆட்காட்டி விரலை அமத்த வெடி தீர்ந்தது.

வீறிச் சென்ற குண்டை எட்டிப் பிறங்காலால் உதைத்துவிட்டு யானை துரத்தத் தொடங்கியது.

துப்பாக்கியை எறிந்துவிட்டு முதலில் ஓடத் தொடங்கினான் அவன்.

புழுதியைக் கிளறிக்கொண்டு யானை விட்டுத் துரத்தியது.

ஓட்டம் பிடித்தார்கள், விடுப்புப் பார்த்தவர்களும், பங்கேற்றவர்களும், சும்மா இருந்தவர்களும் ஓட்டம், மரண ஓட்டம்....

என்ன கஷ்டகாலமோ.....? பதுங்கியிருந்த பற்றையின் முள்ளில் வேட்டி மாட்டிக் கொண்டது. ஓரடி எடுத்து வைத்ததுமே வேட்டியை உருவிக்கொண்டது.

"ஐயோ வேட்டி"

'ஓடண்ண, அவன் துவக்கையே எறிஞ்சு போட்டு ஓடுறான், நீங்கள் வேட்டியெண்டு கொண்டு..... ஓடுங்கோண்ண!

விடுப்புப் பார்த்த இளந்தரவளியள் எல்லாம் கண்ணுக்கெட்டிய தொலைவில் ஓடிக்கொண்டிருந்தார்கள். திரும்பிப் பார்த்தால் இன்னும் இரண்டெட்டில் யானை மிதிச்சுப்போடும். கடைசியாக ஓடிக் கொண்டிருந்தார்கள் பழசுகள்.

போதாத காலம் இண்டைக்கெண்டு கந்தையாண்ண கோவணத்தை மறந்துபோனார்.

நெல்லைக் காக்கப் போய் கடைசியா வயலுமில்ல. வீடு வாசலுமில்ல. உயிருமில்லை.

குடிமனைக்குள்ளால் ஓட்டம். மரண ஓட்டம்.

"ஐயோ வாத்தியார் சனம் பாக்க...."

"நீர் வேற, ஓடும். சனமெல்லாம் ஓடியிட்டுதுகள். சனத்துக்கு முதல் அதுகள் ஓடியிட்டுதுகள்"

"எங்க வாத்தியார் ஒளிக்கிறது... மானம் மரியாதை"

"சும்மா கிடவும். துவக்கை எறிஞ்சுபோட்டு ஓடுறவனே அதுபற்றி யோசிக்கேல்ல நீர் வேற... பின்னால திரும்பிப் பாரும் ஆர் ஓடியாறதெண்டு."

"ஆ... ஐயா என்னய்யா குடல்தெறிக்க ஓடுறியள்? குருவியச் சுட்டு வீழ்த்தினவுடனே வானம் நம் வசம் என்று கத்தினியள். இப்ப ஓடுறியள்"

பார்வையில் கூட சுட்டெரிக்க அவகாசமில்லாமல் அவர் ஓட்டம் பிடித்தார்.

முன்னால் ஓடிக்கொண்டிருந்த அந்த சுட்டவனை எட்டிப் பிடித்தார் கந்தையாண்ண.

தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. கந்தையாண்ண, வாத்தியாரைத் தேடிப் பிடித்துக் கொண்டார். அவருக்கு ஒரே ஆறுதலாக இருப்பது வாத்தியார்தான்...... •



நன்றாக உற்றுப் பாருங்கள், எல்லோருமே இரட்டையர்கள். வீட்டிலே சும்மா பொழுது போகாமல் இருக்கும்போது எண்ணிப் பார்க்கலாமே.....

## செவ்வாய்கிரக பாறைகளில் பயங்கர வைரஸ் கிருமிகள்

செவ்வாய்க் கிரகத்திலுள்ள பாறைகளின் படிவங்களில் உயிர்க்கொல்லியான வைரஸ் கிருமிகள் அதிகம் இருப்பதாகவும், அவை பூமிக்கு கொண்டுவரப்படும்போது, மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என்பனவற்றைப் பயங்கரமாகத் தாக்கவல்லன எனவும் விஞ்ஞானிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

செவ்வாய்க்கிரகத்தின் பாறைகளைக் குடைந்து சிறுபடிவங்களைப் பூமிக்கு கொண்டு வந்து ஆய்வுகள் மேற்கொள்வதற்கு நாஸா நிறுவனம் முயற்சித்து வருகின்றது. ஆனால் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டு மையத்தின் நிபுணர் ஜோனத்தன் றிச்மொண்ட், விண்ணிலிருந்து மண்ணுக்குக் கொண்டு வரும் இப்பொருட்கள் அபாயமற்றவை என நிரூபிக்கப்படும் வரை அவதானமாக நடந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தி வருகின்றார்.

எனவே, விண்வெளி ஆய்வு நிலையம் விசேட பரிசோதனைக் கூடத்தை செவ்வாய்க்கிரகத்தின் படிவங்களுக்கான "தொற்று நோய்" ஆய்வுப் பிரிவாக நிருமாணித்து வருகின்றது. இப்பரிசோதனை நிலையம், பயங்கரமான "ஈபோலா வைரஸ்" தடுப்பு கட்டுப்பாட்டு நிலையத்தைப் போல் பலத்த பாதுகாப்புக்குட்பட்டதாக அமையும்.

## தண்ணீரினால் கண் பார்வை

கண் பார்வைக் குறைவினால் பாதிக்கப்பட்டு வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஓர் நற்செய்தி. சாதாரண குடி நீர் மூலம் தெளிவான கண்பார்வையை வழங்கும் வகையில் ஒரு நவீன மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்து மருத்துவ உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர் விஞ்ஞானிகள்.

இரு கண்ணாடி வில்லைகள் இணைந்த மூக்குக் கண்ணாடியின் இடைவெளியில் சாதாரண தண்ணீரை ஊசி மருந்து ஏற்றுவது போல் செலுத்தி பார்வையை கட்டுப்படுத்தலாம். 80 சதவீதமான மக்களின் கண் பார்வைக்கு இந்த எளிய முயற்சி பலனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறைந்தசெலவில், சுய முயற்சியினால் பார்வையைப் பெற்றுக் கொள்ள இங்கிலாந்தில் ஒக்ஸ்'.போர்ட் ஆய்வு நிலையத்தில் டாக்டர் ஜோசூவா சில்வர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். இதனால் மூக்குக் கண்ணாடி விற்பனையில் பெரு வீழ்ச்சி ஏற்படலாம் என்கின்றனர்



அபிலாஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங் ஃபூ ஒரு வாழ்க்கை முறை 1



# சண்டை இடாமல் செய்யும் சண்டை

'.பூ பயில்வத
ாக சீனாவின்
பல பயிற்சிக்
ன்றிற்கு வந்த
டு மாணவன்
ரிடம் சி.'.பு (குங்
தரு) கேட்டார், 'நீ
தில் என்ன எதிர்பார்க்
றாய்?"

ான் உங்
ர் மாண
ந்து இப்



பூமியில் ஒரு முதல்தர குங் .'.பூ வீரனாக விரும்புகிறேன். இதற்காக நான் எவ்வளவு காலம் பயில வேண்டும் குருவே?", மாணவன் கேட்டான்.

"பத்து வருடங்கள்....... குறைந்தபட்சம்!" குரு பதிலளித்தார் புன்னகைத்தபடி...

"ப...த்....து வருடங்கள்! ஓ! இது மிக அதிகம். திருப்தியடையாத மாணவன் அவரோடு விரைந்து கேட்டான், "நான் மற்றவர்களைவிட இரு மடங்கு கடினமாகப் பயிற்சியெடுத்தால்.....?"

புன்னகை மாறாமல் குரு அமைதியாகச் சொன்னார் "இருபது வருடங்கள்!"

"இ... இருபது? நான் என் முழுப் பிரயாசையுடனும் இரவு பகலாக கடும் பயிற்சி செய்தால்....?"

"முப்பது வருடங்கள்." அதே முகத்துடன் புன்னகைத்தார் குரு.

"என்ன....?" இப்போது விசனம் தொனித்த குரலில் மாணவன் கேட்டான். "எப்படி..., நான் ஒவ்வொரு தடவையும் கடினமாக உழைப்பதாகக் கூறும்போது நீங்கள் காலத்தை அதிகரித்துச் சொல்கிறீர்களே....?"

"பதில் மிகவும் இலகுவானது இளைஞனே!" குரு நிதானமாகக் கூறினார். "எப்போ உனது ஒரு கண் ஒரு இலட்சியத்தின் மீது பிடிவாதமாகப் பதிந்து விடுகிறதோ, உனது பாதையைத் தேடுவதற்கு எஞ்சியிருக்கப்போவது மீதி ஒரு கண் மட்டும் தான்."



குருவின் பதிலில் அர்த்தம் இருக்கிறது. குங் .'.பூ கலை நாள் நிர்ணயித்து பயின்று முடித்துவிடக் கூடிய ஒன்றல்ல. முடிவென்பது இதற்கில்லை. நீங்கள் சீனக் குங் .'.பூ கலையை நீண்டகாலம் பயின்றிருக்கக் கூடும். ஆனால் நீங்கள் வெறுமனே கையையும் காலையும் அசைத்து ஒரு பொம்மலாட்டப் பொம்மை போலத் துள்ளிக் குதிக்க மட்டுமே செய்வீர்களானால் குங் .'.பூ பயில்வது என்பது நடனமாடப் பயில்வதிலிருந்து அதிகம் வேறுபட்டதாக உங்களுக்குப் பயனளிக்கப் போவதில்லை. இக்கலையின் உண்மையான இதயத்தை உங்களால் தொட முடியவில்லையென்றால் நீங்கள் குங் .'.பூவின் சாரத்தை உள்வாங்கிக் கொள்வதில் தோல்வியுற்றவராவீர்கள்.

**குங் .'.பூ என்றால் என்ன?**

குங் .'.பூ என்றால் நிறைவான திறமை என்று அர்த்தம். குங் .'.பூ என்பது சிந்தையையும் (Mind) அதனால் செயல்படுத்தப்படும் எம் செயலையும், புலப்படாது இணைக்கின்ற ஒரு நுட்பமான கலை.

குங் .'.பூ தத்துவத்தை விஞ்ஞானம் கற்பதுபோல தரவுகள், பரிசோதனைகள், முடிவுகள் எனப் பிறரின் அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு கற்றறிந்துவிட முடியாது. அதில் செந்த அனுபவம் மூலமே கைதேற முடியும்.

பற்றற்ற, உணர்ச்சிகளிலிருந்து விடுபட்ட, சிந்தையொன்றில் குங் .'.பூ, ஒரு பூ மலர்வதைப்போல தன்னெழுச்சியாக வியாபிக்கிறது. குங் .'.பூ வின் மூலதத்துவம் தாவோ. தாவோ என்பதற்கு சரியான வார்த்தை தமிழில் இல்லை. பாதை, வழி முறை, உண்மை, வழி,... இன்னும் சரியாகச் சொல்ல முயற்சித்தால் ஆத்ம வெளிச்சத்துக்கான வழி எனப் பலவிதத்திலும் பொருள்படும் தாவோ, பண்டைய சீனத் தத்துவஞானமாகும்.

தாவோ இன்றிக் குங் .'.பூ இல்லை. குங் .'.பூ கலையின் பின்னணியிலுள்ள இத்தத்துவத்தைப் புரிந்து கொள்ளாத எவரும் குங் .'.பூவில் பூரணமாக தேர்ச்சிகொள்ள முடியாது.

ஆரம்பத்திலேயே ஒரு எச்சரிக்கையைத் தர விரும்புகிறேன். உலகின் பல மூலைகளிலும் குங் .'.பூ பயிற்றுவிப்பதாகக் கூறிக்கொள்ளும் பல போலி ஆசிரியர்கள் நடமாடுகிறார்கள். குறைந்தது 10 முதல் 15 வருடப் பயிற்சியினை, அங்கீகரிக்கப்பட்ட குங் .'.பூ பள்ளியொன்றில், அறிந்த குருவின் கீழ், முறையாகப் பயிலாத எவரும் ஏனையோருக்கு பயிற்றுவிக்கத் தகுதி வாய்ந்தவரல்ல.

ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கள். எந்த ஒரு தேர்ந்த பயிற்சியாளரும் உங்களுக்கு குங் .'.பூ கலையை விரைவில் கற்றுத்தந்து விடுவதாக உறுதி கூற முடியாது. ஏனெனில் உண்மையில், சண்டையிடாமலே சண்டையிடும் நுட்பம் தான் குங் .'.பூ. எதிரியை வீழ்த்துவது உங்களது பலத்தால் அல்ல. மாறாக எதிரியின் பலத்தைக் கொண்டே எதிரியை வீழ்த்தும் ஆற்றல் தான் குங் .'.பூவின் நுட்பம். எனவே உங்களது பலத்தை மட்டும் இது சார்ந்ததல்ல. எதிரியை நிலைத்த ஒரு பொருளாகக் கருதி எமது அசைவுகளை முன்கூட்டியே

**சண்டையிடாமலே சண்டையிடும் நுட்பம்தான் குங் ஃபூ. எதிரியை வீழ்த்துவது உனது பலத்தால் அல்ல. மாறாக எதிரியின் பலத்தைக் கொண்டே எதிரியை வீழ்த்தும் ஆற்றல்தான் குங்ஃபூவின் நுட்பம்.**



Photo Kingsley Perera

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயித்துக்கொள்ளுதல் இயலாது. எதிரியோ அசைகின்ற மனிதன். எமது அசைவுகள் ஒவ்வொன்றுக்கும் மறுதாக்கம் செலுத்துகின்றவன். அவனை எதிர்கொள்ளுகின்றபோது, கணத்துக்குக்கணம் மாறுகின்ற அவனது எதிர்வினைகளுக்கேற்ப எம்மையும் தன்னியல்பாகவே செயற்படச் செய்கின்ற, மனதுக்கும் உடலசைவுக்குமான ஒருங்குசேர் தேர்ச்சியையே குங் ஃபூ கலை எமக்குள்ளே தோற்றுவிக்கிறது.

இங்கு எந்தவகை நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறையையோ, பாணியையோ நிலைபேறானதாக நாம் பின்பற்றி வெற்றி காண முடியாது. குங் ஃபூவில் இந்த நெறிமுறைகளையும் பாணிகளையும்விட அவற்றைக் கையாளும் மனிதனே பிரதானமானவன். அவனுக்காக இவையேயன்றி இவற்றுக்காக அவனல்ல. அதனால் அவன் இவற்றைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வர வேண்டுமேயன்றி, இந்த நெறிமுறைகளதும் பாணிகளதும் ஆளுகைக்குள் தான் சிக்கி விடக்கூடாது. மனிதன் என்பவன் ஒரு வாழும் படைப்பு எனும் அதேவேளை அவனே படைக்கவும் செய்கிறான். நீங்கள் ஒரு குறித்த பாணியோடு யந்திரமாக உங்களைப் பொருத்திக் கொண்டால் அதுவே உங்கள் கற்கைச் செயற்பாட்டிற்கு முடிவாகிப் போய்விடும்.



எனவேதான் குங் ஃபூ ஒரு இராணுவ உடற்பயிற்சி போன்று யாவருக்கும் ஒரே சீரானதல்ல. எல்லோரும் ஒரே மாதிரியானவர்களல்ல. மெல் லியவர்கள், பருமனானவர்கள், பலஹீனமானவர்கள், பலமுள்ள வர்கள், வயது கூடியவர்கள், வயது குறைந்தோர், உயரமானவர்கள், நிறை குறைவானவர்கள்..... என வெவ்வேறு விதமான ஒவ்வொருவருக்கும், அவர்களின் உடலமைப்பிற்கும் மன வளர்ச்சிக்கும் ஏற்ப பயிற்சிமுறை வேறுபட்டிருக்கும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கேயுரிய பலத்தையும் பலஹீனத்தையும் கொண்டிருக்கிறான். குங் ஃபூ ஒவ்வொருவனுக்கும் அவனது சொந்தப் பலஹீனங்களை உணர வைத்து, அவனுக்குள் இருக்கும் ஆற்றலை அவனுக்கே இனங்காட்டி அதை முறைப்படி பலப்படுத்தி வளர்க்க உதவுகிறது. அதனால் இன்னொருவரைப் பார்த்து ஒருவர் காப்பியடித்து அதே போல் பழகுவது பயனற்றது. எல்லோரும் புரூஸ்லி போல் தாம் ஆகிவிட எத்தனிப்பதோ, அப்படி ஆக்கிவிடலாமென யாரும் நம்பவைப்பதோ ஏமாற்று. நீங்கள் புரூஸ்லியாகவல்ல, நீங்கள் நீங்களாகவே உயர்ச்சி பெற வேண்டும். அதுதான் சாத்தியம். ஏனெனில் எவரும் இன்னொருவரது வேகத்தையோ, பாணியையோ, காலக் கணிப்பையோ, செயல் ஒழுங்கையோ, வளைவுறும் தன்மையையோ, உடற்கட்டையோ அப்படியே பெற்றிருக்கப் போவதில்லை.

இறுதியாக ஒன்றை மனதிலிருத்திக் கொள்ளுங்கள். குங் ஃபூவில் குரு தனது திறமைகள் எதையும் உங்களுக்குப் புதிதாகத் தந்துவிடப் போவதில்லை. உங்கள் திறமையை உங்களுக்கு உணர்த்துவது மட்டுமே குருவின் பணி. அதை வெளிக் கொணர்ந்து உங்கள் வசப்படுத்திக் கொள்வதில் தான் உங்கள் வெற்றி அடங்கியுள்ளது.

**குங் ஃபூ ஒவ்வொருவனுக்கும் அவனது சொந்தப் பலஹீனங்களை உணர வைத்து, அவனுக்குள் இருக்கும் ஆற்றலை அவனுக்கே இனங்காட்டி அதை முறைப்படி பலப்படுத்தி வளர்க்க உதவுகிறது.**

குங் ஃபூவைப் பொறுத்தவரை இவ்வித்தையில் உங்களுக்குள்ள அறிவென்பது சக்தியல்ல. மாறாக அவ்வறிவைப் பயன்படுத்தும் ஆற்றலே உங்கள் சக்தி. ***Knoledge is not power, but the ability to apply knoledge is power!***

அடுத்த இதழில் குங் ஃபூ வகைகளைப் பற்றி நாம் பார்க்கலாம். மறு இதழில் சந்திக்கும்வரை ரசிகர்களிடமிருந்து அன்புடன் விடை பெறும்...

**- பில்லி வொங்**

萬事如意
最愛你的朋友

## குங் ஃபூ பள்ளி அனுபவங்கள்



ஹொங்கொங்கில் எனது குங் ஃபூ பள்ளியான ஹொங்கொங் சைனீஸ் மார்ஷல் ஆட்ஸ் அசோஸியேஸனில் நான் பயின்று கொண்டிருந்த வேளை. எனக்கு ஒருதடவை சரியான காய்ச்சல். உடல் சோர்ந்துபோய் மூலையில் மற்றவர்கள் பயிற்சி செய்வதைப் பார்த்தபடி அமர்ந்துவிட்டேன்.

எனது குரு பேராசிரியர் யூ ஜென் யுவன் வந்தார். என்னை விநோதமாகப் பார்த் தார். "இங்கே வா வொங்..., ஏன் பயிற்சி செய்யவில்லை?" நான் மன்னிப்புக் கோரும் தொனியில் "எனக்கு காய்ச்சல் சேர்" என்றேன். "சரி நில்.." என்றவர், இரு மாணவர்களிடம் ஒரு சிறிய மேசையைக் கொண்டு வரும்படி சொன்னார். மேசை வந்ததும் கட்டளையிட்டார். "வொங் இந்த மேசைக்கு மேல் ஏறி 15 கரணம் போடு." எனக்குத் திக்கென்றது. இத்தனை காய்ச்சலுடனா...? குரு சொன்னால் எமது பள்ளியில் அதற்கு மறு வார்த்தையே இல்லை. கரணமடிக்க ஆரம்பித்தேன். சுமார் 6 கரணங்களைத் தாண்டியிருக்க மாட்டேன், சோர்ந்து மேசை மீது அடிபட்டு கீழே விழுந்தேன். குரு ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கீழே கிடந்த எனக்கு வேர்வை பெருக்கெடுத்தது. வேர்வை பொங்கி வழிய... என்ன ஆச்சரியம், காய்ச்சல் பறந்துவிட்டது!

ஆம். ஒரு குங் ஃபூ வீரனுக்கு மன உறுதியே ஆரோக்கியம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டிச் சீமைக்கு கொண்டு வந்த...

கு. கனகரத்தினம்

மண்ணைக் கிண்டினால் மாசி கிடைக்கும். தேவையான அளவு தேங்காயும் கிடைக்கும். கப்பல் ஏறிக் கண்டிச் சீமைக்குப் போனால் கைநிறைய காசும் சம்பாதிக்கலாம் என வந்தவர்கள் நாங்கள். ஆசை வார்த்தைகள் அல்ல அவை, மோச வார்த்தைகளென நாங்கள் பின்னரே புரிந்து கொண்டோம். 1815ல் தோணி தோணியாக எங்களை ஏற்றி கடல் கடந்து இழுத்து வந்து கண்டிச் சீமையிலே வெள்ளைக்காரனுக்கு விற்றார்கள் எங்கள் பெரிய கங்காணிமார். என்றைக்கு இந்த சிலோன் சீமையிலே கால்பதித்தோமோ அன்றே எங்களுக்கிருந்த மனிதனென்ற பெயரும் மதிப்பும் மறைந்துபோய் தோட்டத்து லயத்துக்குள்ளே அடைக்கப்பட்டுவிட்ட பிராணிகளாக மாறிவிட்டோம்.



பிறந்த தேசத்தைவிட்டு பரதேசம் வந்த நாங்கள் பார்வைக்கு கட்டின துணியோடு வந்த பிச்சைக்காரர்தான். ஆனால் நாங்கள் எங்கள் நொருங்கிய உள்ளங்களின் ஆன்மாவோடு எடுத்துவந்த செழுமையான கலையும், பலமான தெய்வ பக்தியும்தான் எங்களை நாங்களென அடையாளம் காட்ட எங்களுக்கிருந்த ஒரே சொத்து.

எங்கள் உடம்பில் ஓடும் ரத்தத்தோடும் நரம்புகளோடும் பின்னிப்பிணைந்த விலை மதிக்க முடியாத கோலாட்டம், ஒயிலாட்டம், கூத்து, சிலம்பம், வாள்வீச்சு காமன் கூத்து, பொன்னர் சங்கர், சலாம் பலாம் சடு குடு, கிளிக்கூடு பாய்தல், பிள்ளையார் பந்து அடித்தல், கிட்டி அடித்தல், பெரிய தம்புறா குட்டித் தம்புறா அடித்தல், இலகு மேளம், தப்பு, காவடியாடுதல், பொய்க்கால் குதிரை, கரகாட்டம், பம்பரமாடுதல், பட்டம் விடுதல், புலிவேஷம் போடுதல், கும்மியடித்தல், குலவையிடுதல், கோலம் போடுதல்.... என எத்தனை எத்தனையோ! ஆனால் இத்தனை இருந்தும் எமக்கு ஆடிப்பாடி மகிழ நேரம்தான் கிடையாது.



கங்காணிமார் எங்களை காசுக்கு விற்கவென கட்டிய துணியோடு கொண்டுவந்தாலும் நாங்கள் கையை வீசிக்கொண்டு வரவில்லை. கூடவே எங்கள் காவலர்களையும் அழைத்து வந்தோம். காலம்காலமாய் எங்களைக் காத்துவந்த கடவுளர் அவர்கள். மாரியம்மா, காளியாத்தா, சித்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்திரன், மாடசாமி, மருதவீரன், இடும்பன் கடம்பன்.... இன்னும் எத்தனையோ!

பெரிய பெரிய மனிதர்களும் உயர்ந்த ஜாதிக்காரர்களும் தங்களுக்கெனச் சொந்த மாக்கிக் கொண்டுவிட்ட உயர்ந்த ஜாதிக் கடவுள்களைவிட இந்தக் காவலர்களில் எமக்கு நம்பிக்கை அதிகம். எங்கள் காவலர் களும் அனேகமாக எங்களைப் போலத் தான். சொந்த வீடுகள் கிடையாது. பெரிய கோவில்களுக்குள் அனுமதி கிடையாது. தெருவோர மரங்களின் கீழ் ஒண்டியபடியே எப்போதாவது நாங்கள் வந்து ஓரிரு பூக்க ளைத் தூவிச் செய்யும் பூசைக்குக் காத்துக் கிடப்பவர்கள்... அவர்களுக்கு அழகில்லை, மிடுக்கில்லை, மினுமினுப்பான வர்ணங்களும் இல்லை. மழையிலும் வெய்யிலிலும் நனைந் தபடி நாள்தோறும் நமக்காகக் காவல் செய்கின்றனர்.

எங்களைக் காக்க மட்டும் கடவுள்கள் போதுமா? எம்மைக் கொணர்ந்த கங்காணி மாரையும் காக்கக் கடவுளர்கள் வேண் டாமா? அவர்கள் கொண்டுவந்து வைத்த கடவுள்தான் முனியாண்டி! முனியாண்டி பின்னர் இரட்டைப் பிறவியெடுத்து கருமுனி, செம்முனியானார். கங்காணிமாருக்கு யாரிட மிருந்து பாதுகாப்பு வேண்டும்? கங்காணி மாரை நாங்கள் எதிர்த்தால் அவர்களுக்கு எம்மிடமிருந்து பாதுகாப்பு வழங்கவே இந்த முனியாண்டி. யாராவது ரத்தம் கக்கி இறந்து கிடந்தால் கங்காணி எமக்குச் சொல்வார் முனி அடித்து விட்டதென்று. அடித்தவனு க்கும் இறந்தவனுக்கும் மட்டுமே உண்மை தெரியும். கொஞ்சம் அழகிய உடல்வாகு கொண்ட இளம் பெண்களை இரவோடு இர வாக காவுகொள்ள வரும் பெரிய கங்காணி மாருக்கும் காவலாக முனியாண்டி வருவ துண்டு.

என்னவோ எங்கள் வாழ்க்கையும் மலை யுச்சியிலிருந்து உருண்டோடும் வெள்ளம் போல் ஒன்றரை நூற்றாண்டுகளாக உருண் டோடிவிட்டது. மண்ணைக் கிண்டி மாசியெடு க்க வந்த எங்களின் அடையாளத்தைக் காண விரும்புவோர் மலையைக் கிண்டி எம் வேரைத் தேடுங்கள். அதன் ஆழம் புரியும். அர்த்தம் புரியும். நாமும் வெறும் மனிதர்க ளல்ல. ●

# பிள்ளைக்கு முப்பது

விளக்கு இன்னும் எரிந்து கொண்டுதான் இருந்தது. பாயில் ஒருக்களித்து படுத்திருந்த ஞானமலரின் எண்ணம் நாளை மறுநாள் நடக்கப் போகும் அவளது மகனின் முப்பது கும்பிடுவதைப் பற்றியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அவளுக்கு மகன் பிறந்து நாளைய தினம் கழிந்தால் முப்பதாம் நாள். அன்றுதான் பெயர் வைப்பு அது இது என பல விஷயங்கள் நடந்தேறும்.

"எம்புட்டு தலப்புள்ள! - அதுவும் ஆம்பளப் புள்ள. அவனுக்கு ஒரு நல்ல இந்தக் காலத்து பேரா வைக்கனும். அவருகூட போன கெழமயே சொல்லீட்டு போனாரு. கொழும்புல கடைக்கு வார நல்லா படிச்சவங்ககிட்ட சொல்லி கொஞ்சம் பேருகள எழுதி வாங்கீட்டு வாரேன்னுது! மத்தவங்க எழுதுற பேர ஏன் எம் புள்ளக்கி வைக்கணும்... நானுந்தான் ஐஞ்சாங் கிளாஸ் வச்சும் படிச்சிட்டுத் தானே இருக்கேன்!"

பிரகாஷ், -ராஜீவ், - அர்ஜுன், - விஜெய், - சரத், - சஞ்ஜீவன் என்னு பல நடிகர்களின் பெயர்களை இந்த முப்பது நாளாக யோசித்து எழுதி வைத்திருந்தாள்.

"நான் எழுதி வச்சிருக்கிற பேரு துண்ட அவருகிட்ட குடுத்து அவருக்கு விருப்பமான பேரத்தான் மவனுக்கு வைக்கணும்!" - இது அவளின் எண்ணம்.

ஞானமலரின் அம்மா - செவனம்மா. இப்போது வெத்தலக்கெழவி என்றாலும், அப்பன்- பாம்பு கங்காணி என்ற வீரையா என்றாலும் ஏதோ இவளின் காலத்தில் மணிக்கணக்கப்பிள்ளையின் மனைவி உபயத்தால் ஞானமலர் என்ற பெயர் பெற்றதில் ஞானமலருக்கு ஏக பெருமை.

"நல்ல வேளை - மூக்காயி - காத்தாயி - ரெங்கம்மான்னு பழய பெயருகளா வக்கல!" என்று அடிக்கடி நினைத்துக்கொள்வாள்.

ராஜசேகரன் என்ற ஞானமலரின் புருஷன் கொழும்பில் ஒரு சிங்கள ஹோட்டலில் வெயிட்டராக சேர்ந்து இப்போது கெஷியராக இருக்கிறான். அவனும் முதல் நாளே வந்தும் விட்டிருந்தான்.

"மலரு.... எனக்குன்னா பேரு ஒண்ணும் எடுத்துட்டு வரக் கெடைக்கல. நீ எழுதியிருக்கிற பேருல- சஞ்சீவனுங்குற பேரு நல்லாருக்கு புள்ள. அதயே வைப்பமா...?"

"ஞானமலருக்கு பெருமை பிடிபடவில்லை. அவள் தேர்ந்தெடுத்த பெயரில் ஒன்றல்லவா அது?

"நா எவ்வளவு புஸ்தகங்கள் பாத்து தேடி எடுத்தேன் தெரியுமா? எனக்கும் அந்தப் பேருதா நல்லதாப் படுது! ஒங்க வாயாலயே புள்ளய கூப்புட்டு வைச்சுடுங்க!

ராஜசேகரன் மகனை வாரியணைத்து முத்த மிட்டு "சஞ்சீவன் பயலே!" என்றான்.

ஞானமலர் மா நிறம். ராஜசேகரனும் மா நிறம். ஆனால் அவனது அப்பா நல்ல கறுப்பு. சஞ்சீவனோ சிகப்பாக இருந்தான். இந்த சிகப்பு தோட்டத்து மக்களிடையே மிகவும் அரிது. அது வேறு ஞானமலருக்கு ஆனந்தம். ஞானமலரின் தாய் செவனம்மாவுக்கும் தலை கால் கொள்ளாத மகிழ்ச்சி. ஒரே மகளின் முதல் பேரனல்லவா? "அட ஏ ராசா! ஏங் கண்ணே பட்டுரும் போலருக்கே...! ஏ செகப்பு ராசா, நம்ம கொல தெய்வம் ஒன்ன நல்லா பாத்துகிட்டு பெரிய ஆளாக்குவானய்யா... ஏஞ் செகப்பா!...தங்கம்!" என்று கொஞ்சியவாறு வாரியணைத்துக் கொண்டாள்.

ஞானமலருக்கு கோபம் வந்துவிட்டது.

"ஏம்மா! ஒனக்கு, நம்ம தாத்தா பாட்டிவுங்களுதான் செவனம்மா, வீரையா, மாயாண்டி, மாரியம்மான்னு பழய பேருகள் வைச்சாங்க. என்னமோ நாங்க பொறக்கயிலசரி, எனக்கு புத்தியா ஞானம்மான்னு பேரு வைச்சீங்க! - அதுவுங் கணக்கப்புள்ள ஐயாவோட சம்சாரத்துனால. இல்லே ன்னா எனக்கும் கருப்பாயி, காத்தாயின்னுதான் பேரு வச்சிருப்பீங்க! நா எவ்வளவு கஷ்டப்பட்டு தேடி அழகா, இந்தக்காலத்து ஸ்டைல்ல சஞ்சீவன்னு பேரு வைச்சிருக்கேன். தொடங்கீட்டியே பழய மாதிரி செகப்பா, கருப்பான்னுட்டு! இத தோட்டத்துல கேட்டா நாளைக்கு அவனயும் செகப்பான்னுதான் கூப்பிடுவாங்க!", என்று பொரிந்து தள்ளி விட்டாள்.

"அடப் போடி - என்னவோ அந்தக்காலம் இந்தக் கால ன்னுக்கிட்டு....! இன்டைக்கின்னு பேரு வைக்கு நாளா - அவன செகப்பான்னு கூப்புட ஏ வாயில வந்திச்சி ன்னா...., அது கொல தெய்வத்தோட கட்டள! பெரிசா வந்திட்டா...!"

சாதாரணமாகக் கூறிக்கொண்டே செவனம்மா பேரனைத் தூக்கிக் கொண்டு அப்பால் சென்றாள். ராஜசேகரன் புன்முறுவலோடு ஞானமலரை சமா தானப்படுத்தினான்.

ஏழு வருடங்களுக்குப் பின்....

ஞானமலர் தேயிலைக் கூடையோடு பிரட் டுக்குக் கிளம்பிக்கொண்டே....

"யம்மோவ்...! செகப்பன. சீக் கிரமா எழுப்பீடு! ஸ்கூலுக்கு நேர மாகீட்டா டீச்சர் என்னத்தான் திட் டும்!" என்றவாறே வெளியே வேகமாக ஓடுகிறாள். செவனம்மா- செகப்பன் என்ற சஞ்சீவனை... (இல்லை சஞ்சீவன் என்ற செகப் பனை) எழுப்ப உள்ளே போகிறாள். ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போகும்......

# புலம் பெயர்ந்த பதிவுகள்

டி. பி. எஸ். ஜெயராஜ்



"பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவை எந்தப் பெயர் கொண்டழைத்தாலும் அதன் சுகந்தம் ஒரேவிதமான இனிமையைத்தானே கொண்டிருக்கும்" என்றார் ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர். ஆனால் அமெரிக்க எழுத்தாளர் டேல் காணஜியோ "எந்த மொழியானாலும் ஒரு மனிதனுக்கு மிக இனிமையாகத் தொனிப்பது அவன் பெயர்தான்" என்றார்.

இவ்வாறு ஒரு மனிதனது பெயரின் முக்கியத்துவம் பற்றி எதிரும் புதிருமாக இரு வேறு கருத்துக்கள் இருப்பதை இவ்விரு கூற்றுக்களும் எடுத்துக்காட்டுகின்றன.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து வந்துள்ள எம்மவர்க்கு இந்தப் "பெயர்" என்பது பல விதங்களிலும் சிக்கல் நிறைந்த விடயமாகிவிட்டது. மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து உத்தியோகபூர்வமான ஆவணங்களைப் பெறத் தொடங்கியவுடனேயே இவர்களில் பெரும்பாலானோர் தமது பெயர்களை இழந்து விடுகின்றனர்.

தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்களே. தமிழ் இந்துக்கள் தமக்கு இடப்பட்ட பெயரையே வழக்கத்திற் கொள்வர். தம் தந்தை பெயரை முதற் பெயராக அல்லது "இனிஷியல்" ஆக வைத்திருப்பர். நான் அறிந்த வரையில் இலங்கையில் இதற்கு விதிவிலக்காக உள்ள தமிழ் இந்துக்கள் திருவாளர்கள் குமார் பொன்னம்பலமும், நீலன் திருச்செல்வமும் மாத்திரமே. இவ்விருவரும் பிரசித்தி பெற்ற தம் தந்தையர் நாமங்களையே தமதாக்கியுள்ளனர். ஆனால் அநேகமான தமிழ் இந்துக்கள் தகப்பன் பெயரைத் தமதாகப் பாவிப்பதில்லை.

ஆனால் மேற்குலகத்தில் நிரந்தரமாகத் தங்க வரும் நம்மவர்கள் இங்குள்ள மரபால் ஆட்கொள்ளப்பட்டு விடுகின்றனர். இலங்கையில் இருந்த போது தாம் பாவித்த சொந்தப் பெயர் பாவனையில் இருந்து மறைந்து, தந்தையின் பெயரே "சேர் நேம்" (sur name) எனப்படும் பிரதான பெயராக, உத்தியோகபூர்வ பெயராக மாறிவிடுகிறது.

உதாரணமாக, இலங்கையில் சுப்பிரமணியத்தின் மகன் மணிவண்ணன் என்பவர் **சு. மணிவண்ணன்** அல்லது **எஸ். மணிவண்ணன்** அல்லது **சுப்பிரமணியம் மணிவண்ணன்** ஆகவே விளங்குவார். புலம்பெயர்ந்த நாட்டிலே அதே நபர் **மணிவண்ணன் சுப்பிரமணியம்** அல்லது **எம். சுப்பிரமணியம்** ஆக மாறிவிடுவார். அதன் பின்னர் அவரது பிள்ளைகளினதும் குடும்பப் பெயர் **சுப்பிரமணியம்** என்பதாகவே இருக்கும்.

இந்த மேலைத்தேய மரபினை எதிர்த்து உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமக்கிடப்பட்ட பெயரையே இந்நாடுகளில் பாவிப்பவர்கள் மிகச் சொற்பமானவர்களே.

இப்படி உத்தியோகபூர்வ ஆவணங்களில் தம் சொந்தப் பெயரைப் பறிகொடுத்து தந்தை பெயரைச் சுவீகரிக்கும் எம்மவர்க்கு அப்பெயர்களை முழுமையாகப் பாவிப்பதில் கூட சிரமம் உண்டு. எமது பெயர்கள் பொதுவாக நீளமானவை. பிறமொழியாளர்களால் உச்சரிக்க முடியாதவை. எல்லாமே கணனி மயப்படுத்தப்பட்ட சமூக அமைப்பில் ஆவணங்களில் பெயர் குறிப்பிட சில இடங்களே உண்டு. எனவே பெயர்களின் எல்லா எழுத்துக்களையும் சேர்க்க முடியாமல் போய்விடும். எனவே பெயரில் இருந்து சில எழுத்துக்கள் குரூரமாகக் கொலை செய்யப்படும். **விஜயகுலேந்திரன் சபாபதி** என்ற பெயரில் கடைசி எழுத்துக்கள் நீங்கி **"சப்"** என்று போய்விடுவார். **ஆறுமுகராஜா சிவகுமார் "ஆறும்"** என்று அறுபடுவார்.

வேறு சிலர் தமது நீளமான பெயர்களைத் தாமாகவே சுருக்கிக் கொள்வார்கள். **கதிர்காமசேகரம்** வெறும் **சேகர**மாகி விடுவார். **பாலசுப்பிரமணியம்** தனியே **மணிய**மாய் ஒலிப்பார்.

தனக்குப் பெற்றோரால் இடப்பட்ட சொந்தப் பெயர்களையே பாவித்து வருபவர்களுக்கு இருக்கக்கூடிய தொல்லை, முதல் பெயராகும். ஓரளவு நட்புடன் பழகும் மேல்நாட்டவர்கள் ஒருவரையொருவர் பிரதான பெயர் கொண்டழைப்பதில்லை. ஜிம், டிக், ரொம் என முதற் பெயர்களையே பாவிப்பார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நம்மவர்கள் என்ன செய்யலாம்? அதற்கு ஒரு வழியைச் சிலர் கண்டுபிடித்திருக்கிறார்கள். தம் பெயர்களின் முற்பகுதியையே முதற் பெயராக மாற்றியுள்ளனர். அதாவது **அருளையா** என்பவர் **அருள் அருளையா**வாகி விடுவார். **சிவலிங்கம் சிவா சிவலிங்க**மாவார்.

வேறு சிலர் பெயரையே இரு கூறாக உடைத்துப் பாவிப்பார்கள். **பாலசிங்கம் பாலா - சிங்கம்** என்றும் **கனகரத்தினம் கனக - ரத்னம்** என்று மாறிவிடுவார்.

இன்னும் சிலர் பெயரை உடைத்து மாற்றிக் கொள்வர். **சிறீஸ்கந்தகுமார்** தன் பெயரை **குமார் சிறீஸ்கந்தா** என்று வழக்கத்திற் கொள்வார்.

தமது பெயர்கள் நீளமானவை, வெள்ளையர்கள் உச்சரிக்கச் சிரமமானவை என்பதையிட்டு ஒரு தாழ்வு மனப்பான்மையே எம்மவர் சிலருக்கு உண்டு. என்ன உங்கள் பெயர் நீளமாக உள்ளதே என வெள்ளை அதிகாரி ஒருவர் கூற, தமிழர்கள் கூனிக் குறுகி "மன்னியுங்கள்" "மன்னியுங்கள்" என்று பஞ்சமாபாதகம் செய்தவர்கள் போல் மன்னிப்புக் கேட்கும் காட்சிகள் இங்கு ஏராளம். இத்தனைக்கும் வெள்ளையர்கள் பெயர்கள் சில குறிப்பாக ஐரோப்பிய வாசனை கொண்டவை. இதே விதமாக ஆசிய, ஆபிரிக்க நாட்டவர்க்கும் "பல் கொழுவும்" பெயர்கள்தாம் என்பதைச் சுட்டிக் காட்டுபவர்கள் சொற்பமானவர்களே.

இதனால் எம்மவர்கள் பலர் தம் பெயர்களுக்கு முன்னால் வசதிக்காக ஆங்கிலப் பெயர் ஒன்றையும் சேர்த்துக் கொள்வார்கள். துரைசாமி **"சாம்" துரைசாமி**யாவார். யோகநாதன் **"ஜோ" யோகநாதன்** ஆக மாறுவார். வில்லவராஜன் **விலியம் ராஜன்** என்றாகி விடுவார். கந்தையா **"கென்" கந்தையா** ஆவார்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் பெயர்கள் சுருங்குகையில் மிக அதிகமாகப் பாவிக்கப்படும் பெயர்கள் குமார், சிவா, ராஜா, நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவையே. இதில் **ராஜா** ஒன்றுதான் எமது உச்சரிப்பைப் போல பாவிக்கப்படும். குமார் என்பது **கூமார்** என்றும் சிவா **சீவா**வாயும் நாதன் **நேத்தன்** ஆயும் வேற்றினத்தாரால் உச்சரிக்கப்படும்.

சிலர் தமது பெயர்களை மேல்நாட்டவர்களுக்கேதுவாக முற்றிலும் மாற்றி அமைப்பதுவும் உண்டு. விக்கினேஸ்வரமுதலி - **விக்கி மூட்லி** யாகவும் சாம்பசிவம் ஏரம்பு - **சாம் ஏராம்** ஆகவும் மாறிய விந்தைகள் இங்கு நடந்ததுண்டு.

பெண்களைப் பொறுத்தவரையில் கூட அவர்களும் கணவன், தந்தை பெயர்களாலேயே அழைக்கப்படுவதால் ஆண்கள் அனுபவிக்கும் அத்தனை சிரமங்களையும் அவர்கள் இந்தப் பெயர் விடயத்தில் அனுபவிக்கின்றனர்.

அத்துடன் தமது சொந்தப் பெயர்கள் திரிபுபடுத்தப்பட்டு உச்சரிக்கப்படுவதைக் கேட்கும் அவஸ்தை அவர்களுக்கும் உண்டு. பெயர்கள் சுருங்குவதும் உண்டு. புவனேஸ்வரி **வரி** என்றும் விஜயலக்ஷ்மி **விஜி** என்றும் மாறுவதுண்டு. அத்துடன் மேலைத்தேய பெயர்களைப் பாவிக்கும் பழக்கமும் உண்டு.

இந்தப் பிரச்சனைகளையெல்லாம் மனதில் கொண்டு இங்கு பிறக்கும் பிள்ளைகளுக்குப் பெற்றார் பலர் தமிழ்ப் பெயர்களை வைப்பதில்லை. வட இந்திய அல்லது அர்த்தம் எதுவும் இல்லாத ஓசை நயம் மிகுந்த பெயர்களை வைக்கின்றனர். வேறு சிலர் தமிழ்ப் பெயர்களுடன் ஒரு ஆங்கிலப் பெயரையும் சேர்த்துக் கொள்கின்றனர். வீட்டிலே தமிழ்ப் பெயர், வெளியிலே ஆங்கிலப் பெயர் என்று இந்தப் பிள்ளைகள் வளர்கின்றனர்.

இன்னும் சிலர் எம்மவராலும் வேற்றினத்தவராலும் சுலபமாக உச்சரிக்கக்கூடிய ரவி, ஹரி, மதி, ராணி போன்ற சின்னப் பெயர்களையே சூடுகின்றனர். இலங்கையில் இரண்டாவது பெருஞ் சமூகமாக, ஒரு தேசிய இனமாக விளங்கிய சமூகம் புலம்பெயர்ந்த நாடுகளில் சிறுபான்மைக்குள் சிறுபான்மையாக ஓரங்கட்டப்பட்ட இருப்பை மேற்கொள்கின்றது. தனது தனித்தன்மையை நிலைநாட்டும் திராணியோ, சுய அடையாளத்தை வெளிப்படுத்தும் ஆளுமையோ இன்றி, தமது பெயர் விடயத்தில் கூட ஒரு சுயத்தைப் பேண முடியாமல் திண்டாடுகிறது.

முன்னர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கட் விளையாடிய கன்ஹாய், காளீச்சரன், சிவ்நாராயண் போன்றோர் இந்திய வம்சாவளியினரே. கன்னையா, காளீஸ்வரன், சிவநாராயணன் தாம் அவர்கள் மூதாதையர் பெயர்கள். அவர்களுக்கு அன்று நடந்தது எம்மவர்க்கு இன்று! "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்" என்றான் சுப்பிரமணியபாரதி. ஆனால் புலம்பெயர்ந்த யதார்த்தம் நம்மவரை நாமத்தில் கூடத் தமிழ் இல்லாமல் வாழும் நிலைக்குத்தான் கொண்டு செல்கின்றது. ●




**Scarred minds (வடுவிழுந்த மனங்கள்)** என்ற ஆங்கில நூலை எழுதியிருக்கும் உளவியல் வைத்திய நிபுணர் தயா சோமசுந்தரம் வடபகுதியில் கொடூர யுத்த காலங்களில் பணியாற்றியவர். யுத்தத்தால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உளவியல் பாதிப்புகளைப் பற்றி எழுதியிருக்கிறார். விலை: 699 ரூபா

வெளியீடு: Vijitha Yapa Book shop
Unity Plaza, 2, Galle Road, Colombo 04

........................

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்களது 11வது விசேட அறிக்கை வெளிவந்துள்ளது.

***நினைவுகூரப்படாத வீராங்கனையும்***
***இருட்டடிப்பையே செய்யும் சமூகவியலும்***

A TAMIL HEROINE UNMOURNED & THE SOCIOLOGY OF OBFUSCATION



யாழ்ப்பாணத்தில் இரு மேயர்கள் கொல்லப்பட்டதைப் பற்றியும், தமிழ்ச் சமூகத்தில் வளர்த்துவிடப்பட்டிருக்கும் உண்மைகளை இருட்டடிப்புச் செய்கின்ற சமூக சிந்தனைகளைப் பற்றியும் நூலில் எழுதப்பட்டுள்ளது.

அச்சிட்டோர்: WASALA PUBLICATIONS,
153, Saranankara Road, Dehiwela.




அக்ரன்

எனக்கு ஒரு மொழி வேண்டும்! ஸப்தமே இல்லாமல்
எனக்கு ஒரு மதம் வேண்டும்! தெய்வங்கள் இல்லாமல்
எனக்கு ஒரு உடல் வேண்டும்! வர்ணமே இல்லாமல்
எனக்கு ஒரு இனம் வேண்டும்! இவை மூன்றும் இல்லாமல்
எனக்கு ஒரு அடையாளம்...... இவை நான்கும் இல்லாமல்... ?

கடந்த இரண்டாயிரம் வருடங்களில் வாழ்ந்த நிபுணர்களுள் தலைசிறந்த தீர்க்கதரிசியாகவும், வைத்திய நிபுணராவும் விளங்கியவர் மைக்கல் டீ நோஸ்ட்ரடாமஸ் (Nostradamus). பிரான்ஸில் செய்ன்ட் ரேமீ என்னுமிடத்தில் இவர் 1503ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி பிறந்தார்.

1547ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் விடயங்களை தீர்க்கதரிசனங்களாக முன்னறிவித்து வந்தார். எனவே அக்காலத்தில் பிரான்ஸை ஆட்சி புரிந்த சார்ள்ஸ் மன்னர் அவரை அரண்மனையின் ஆஸ்தான மதியாலோசகராக நியமித்தார். 1555ஆம் ஆண்டு "நூற்றாண்டுகள்" (Centuries) என்ற நூலை வெளியிட்டார்.

இந்நூலில் ஹிட்லரின் வெற்றி தோல்விகள், உலக கம்யூனிசவாதம், விண்வெளிக்கலம் மூலம் மனிதன் சந்திரமண்டலத்தில் காலடி எடுத்து வைத்தல், செவ்வாய்க்கிரகம் போன்ற சகல விடயங்களும் முன்னறிவிக்கப்பட்டிருந்தன. இன்றைய நூற்றாண்டில் அவரது ஆருடங்கள் யாவும் நிஜமாவதைக் காண ஆச்சரியமாகவுள்ளது. இவரது ஆருடங்களை வைத்து ஒரு திரைப்படமே தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர் 1994ல் மூன்றாம் உலக மகா யுத்தம் மூளும் எனக் கூறியது பலிக்கவில்லை. பாலைவன நாடொன்றிலிருந்து உருவெடுக்கும் இவ் யுத்தம் உலகையே அழித்துவிடும், இன்றைய வல்லரசான அமெரிக்கா சிதைந்துவிடுமென கூறியிருந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புக்குரிய H. Q.

எனது இந்தக் கடிதத்தை உங்களுக்கென்று மட்டும் நான் எழுதவில்லை. இதை உங்களுடைய பெயரில் ஏதாவது ஒரு பத்திரிகைக்கு அனுப்பிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். எனது பெயரில் அனுப்பினால் எந்த ஒரு பத்திரிகையும் இதைப் பிரசுரிக்காது. ஒரு ஆண் என்ற வகையில் உங்களுக்குச் சரியெனப்படுகின்ற விதத்தில் இதில் ஏதாவது மாற்றங்கள் செய்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

கடந்த வருடம் முழுவதும் வேலைக்குச் சன்று வருவதற்காக தினமும் இரண்டு தடவகள் பஸ்ஸிலே போய்வர வேண்டியிருந்ப. மாலையில் திரும்பும்போது என் சிநேகிதிநடன் வந்தாலும் காலையில் செல்லும்ாது தனியாகவே சென்றேன்.

உங்களுக்குத் தெரிந்தபடி, நான் சற்று மாநிறமான இருபது வயது இளம் பெண். ச[illegible] உயரமானவள். அகன்ற வாயுடன் சற்று பெரிய உதடுகளும் கூட. என் கண்கள் சிறியவை அல்ல என்றே நினைக்கிறேன்.

ஆண்களாகிய நீங்கள் பஸ்ஸில் ஏறுமுன்னரே பஸ்ஸிற்குள் இருப்பவர்கள் யார் என்பதை இனங் காண்பதற்காக ஓர் அவசரப் பார்வையை வீசுவதற்குப் பழகியிருக்கிறீர்கள். அப்போது உங்கள் கண்களால் சகல முகங்களையும் படம் பிடித்துக் கொள்கிறீர்கள். (உண்மையில் பெண்கள் முகங்களை உன்னித்துப் பார்க்க நீங்கள் முயற்சிக்கின்றீர்கள், அப்படித்தானே?) இச்சிறு நிகழ்வுக்குப் பின் நீங்கள் பஸ்ஸிற்குள் ஏறுவீர்கள். உங்களது அந்த முதல் பார்வையிலேயே நீங்கள் எப்படியான ஆண்மகன் என்பது எனக்குப் புரிந்துவிடும். இதில் நான் தவறு விட்டதே இல்லை. பஸ்ஸிற்குள் எங்கு இடம் இருக்கிறதோ அங்கே நின்று பயணம் செய்ய விரும்புபவரா அல்லது பெண்கள் அமர்ந்திருக்கும் இடம் தேடி, பக்கத்தே நின்று பயணிக்க விரும்புபவரா என்பதை நான் உடனேயே அடையாளம் கண்டுகொள்வேன்.



எனது இருக்கைக்கு அருகே இடமிருந்தால், அங்கே வந்து நிற்க விரும்புபவர் யார் என்பதை அவர் பஸ்ஸிற்கு வெளியே நின்று நோட்டம் விடும்போதே நான் புரிந்துகொண்டு விடுவேன். சிலர் எந்த விசேட கவனமுமின்றி பஸ்ஸில் ஏறி எங்காவது ஓரிடத்தில் நின்று கொள்வர். சிலர் சற்று ஆர்வத்தோடு மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்ப்பர். சிலர் நாலைந்து இடங்களைத் தாண்டி என்னருகே வருவர். அந்த பஸ்ஸினுள்ளே எனக்கருகே மட்டும்தான் இடமிருந்ததாக யாரும் சொன்னால் அது நகைப்புக்குரியது.

தனக்குத் தேவையான இடத்திற்கு வந்து சேர்ந்த அந்த நபர், அவரையுமறியாமல் வெறுமையினால் வறண்டு போன தோற்றத்தில் காட்சியளிப்பார். உயிரற்றதுபோல் உடலசைவின்றி விறைத்துப்போனதுபோல் நிற்பார். ஆனால், அது வெளிப்பார்வைக்கு மட்டும்தான். இந்த விநோதமான சமாதி நிலையைச் சந்தேகமுடன் பார்ப்பவர்களுக்கு மட்டும் அவரது உடல், கண்களுக்குப் புலப்படாத ஒரு மெல்லிய கதியில் இயங்கிக் கொண்டிருப்பது புரியும். எனது உடலோடு உரசுவதற்காக அவரது உடல், நம்மிடையேயுள்ள இடைவெளியைக் கடக்க முயற்சித்துக் கொண்டிருப்பது தெரியும். ஆனாலும் வெளிப்பார்வைக்கு மிகவும் கௌரவமான, மேன்மைதங்கிய தோற்றம் ஒன்று அவரில் அவ்வேளை உருக்கொண்டிருக்கும். பெண்களை ஏறெடுத்தும் பார்க்காதவராக, அழகிய இளம் பெண்களையெல்லாம் ஒரு பொருட்டாய்க் கருதாதவர் போன்ற பாவனையில் நிற்பார். இதுதான் ஆண்கள்!

அவர் வான்வெளியையும் அங்குள்ள நிலவையும் பற்றிய கற்பனையில் மூழ்கியிருக்கிறார் என்று அவரைப் பார்க்கும் யாராவது சொல்லக்கூடும். அத்தகையதொரு சலனமற்ற உறைநிலையில் நிற்பார் அவர். ஆனாலும் அதே நேரத்தில் அவருடைய வலது பாதம் (அல்லது இடது பாதம்) வெளிக் கண்களால் அனுமானிக்க முடியாத அசைவோடு மிக மெதுவாக எனது காலை நோக்கி வந்துகொண்டிருக்கும்.

இவையெல்லாம் நடந்துகொண்டிருக்கும்போது நான் உஷாரடைந்திருப்பேன். அருகில் நிற்பவர் எப்படியானவர் என்பதை என் உள்ளுணர்வுகள் எனக்கு அறிவித்துவிடும். இந்த நபர் ஒரு நாகரீக இளைஞனா, காடையனா, முரட்டுத் தனமான குற்றவாளியா, சாதாரண பிக்பொக்கற் பேர்வழியா, அல்லது காமுகனா? காதலனா...?

அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு, மெதுவாக பாதத்தை நழுவவிட்டபடி நெருங்கும்போது, முதலில் இவன் ஒரு திருடனோ என்று தோன்றும். இப்படி ஒரு



அனுபவத்திற்கு ஆளாகாத பெண்கள் யாரும் உலகில் இருப்பார்களா? பாதத்தால் நெருங்குகிறவர் இளைஞனாக அல்லது கிழிந்த உடைகளை உடுத்தியிருந்தால் ஒரு பிக்பொக்கற் பேர்வழியாக இருக்கலாம்.

ஆண்கள் பல வகையான உபாயங்களைப் பாவிக்க மாட்டார்கள். எப்போதும் ஒரே மாதிரியான மிக மலினமான உத்திகளையே அவர்கள் கைக்கொள்கிறார்கள். முதலில் ஒரு அவசரமான உதாசீனமான அமைதி நிலை. அதன் பின் வானத்து நிலாவைப் பற்றிய சிந்தனை. பிறகு தற்செயல் போல ஒரு மிதக்கும் பார்வையை நம் முகத்தின் மீது பதியவிடுதல். ஆனால் அவரது முழுக் கவனமும், நம்மிருவருக்கும் இடையேயுள்ள அந்த வெளியைத் தாண்டுவதுதான். அவருக்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்து நிலைகொண்டபின் நகர்தல் ஆரம்பிக்கும்.

மெதுவாக விரல்களை அசைத்து, பாத விளிம்பினை வழுக்கிச் செல்லவிட்டு, வேலிக்கடியில் நழுவும் வேர்களைப் போல ஆண்களால் செய்யப்படும் இதுபோன்றமட்டமான செயற்பாடுகள் வேறேதும்இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்றே சொல்லவேண்டும். இருந்தால் அவை மிகச் சொற்பமே. ஆண்களாகிய உங்களுக்கு, இவ்வாறான நடவடிக்கைகளால் நீங்கள் வெளிப்படுத்திக் கொள்ளும் முட்டாள்தனம் புரிவதாகத் தெரியவில்லை.

கீழே பஸ் தரையில் உங்கள் சப்பாத்துக் கால்களையும், பஸ்ஸின் கூரையை உரசியபடி உங்கள் கோழைத்தனமாக முகத்தையும் வைத்துக்கொண்டு இடையில் நீங்கள் நடத்தும் இந்தப் பூனை - எலி விளையாட்டைப் போல வேறேதேனும் வெட்கக்கேட்டை நீங்கள் செய்வதுண்டா?

இந்த விளையாட்டின் ஆரம்பத்திலேயே நான் உஷாரடைந்து விடுவேன் என முன்பே கூறினேன். தனது பாதம் அசைய வேண்டிய தூரத்தை அளந்துகொண்ட பின், அவரது பார்வையை தொலைவில் எங்கோ சஞ்சரிக்க விடுவார். தனது கணிப்பும் அளவீடும் சரியாக இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு. தேவையில்லாமல் ஒரு பார்வையை நம்மீது எறிந்து நம்மை எச்சரிக்கையடையச் செய்வானேன்?

தவிரவும், அந்தக் கட்டத்தில், என்னைப் பார்க்க வேண்டிய அவசியமும் அவருக்கில்லை என்பது தெளிவு.

இங்கேதான் எனது குதூகலம் ஆரம்பமாகின்றது. விருப்பத்திற்குரிய அந்த அன்பர், தனது விளையாட்டில் பாதி தூரம் நகரும்போது, அதே அளவு இரகசியத்துடன் வீட்டிலிருக்கும் ஒரு பாவைப் பிள்ளையைக் கற்பனை செய்த வண்ணம் நான் எனது பாதத்தை என்னை நோக்கி இழுத்துக் கொள்வேன். சிலருக்கு நாங்கள் ஓரிரு அங்குலங்கள் நகர்த்திக் கொண்டாலே போதுமானது.

இப்போது என் அருகில் நின்றவர் ஆச்சரியப்படுவார். தான் மிகச் சரியாக அளவீடு செய்து, நகர்த்திய இடத்திற்குப் பாதம் வந்த பின்னும் எதுவும் தட்டுப்படவில்லை அவருக்கு....!

அவரது பெரிய சப்பாத்து, பாவம் தனியாக விடுபட்டிருக்கும். அதிர்ந்துபோய் அவர் உடனடியாக கீழே பார்ப்பார். பின்னர் திரும்பி என் முகத்தைப்பார்ப்பார். ஆனால், எனது எண்ணங்களோ, ஆயிரம் மைல்களுக்கு அப்பால் பறந்து சென்று எனது அன்பான பாவைப் பிள்ளையுடன் விளையாடிக் கொண்டிருக்கும்.... அவருக்கு எல்லாமே புரிந்து விடும்.

இவ்வாறு பதினேழு தடவைகளில் பதினைந்து தடவைகள் (எண்ணிக்கையை நான் மிகச் சரியாகச் சொல்வது, எனக்கிருக்கும் நீண்ட அனுபவத்தினால்தான்) சங்கடத்திற்குள்ளான அந்த நபர்கள், தங்களது முயற்சியைக் கைவிட்டுவிட்டார்கள். இரண்டு முறை மாத்திரமே எச்சரிக்கும் பார்வையை நான் உபயோகிக்க வேண்டி ஏற்பட்டது.

எனக்குண்டான எரிச்சலையும் அடக்க முடியாத ஆத்திரத்தையும் என் பார்வையில் சேர்த்துக்கொள்ளும் அவசியம் கூட தேவைப்படவில்லை. கொஞ்சம் தலையைத் திருப்பி அவரைப் பார்ப்பதாகப் பாசாங்கு செய்வதே போதுமாயிருந்தது.

நேரடியாக அவரின் முகத்தைப் பார்த்தால் ஆகாது. இவ்வாறான நேரங்களில் அந்த ஆண்களின் முகத்தை நேரே பார்ப்பது புத்திசாலித்தனமானதல்ல. ஏனென்றால் நிலைமை முதலுக்கே மோசமாகி விட வாய்ப்புண்டு. சில வேளைகளில் அப்படிப் பார்த்தால் நம்மைப் பற்றி அவர்களிடம் ஆழமான ஒரு ஈடுபாடும் கவர்ச்சியும் ஏற்படுவதற்கும் வாய்ப்புண்டு.

எந்தவொரு சாதாரண பிக்பொக்கெற் பேர்வழிக்குள்ளிருந்தும் பயங்கரமான ஒரு திருடன் எந்நேரமும் வெளிப்படக்கூடுமென்பதை பெருமளவு பணத்தைக் கையில் வைத்திருக்கும் ஒரு முகாமையாளன் அறிவான். அதிக ஒல்லியில்லாத, கறுப்பும் அல்லாத, உதடுகளோ கண்களோ அதிகம் சிறியதாகவும் இல்லாத ஓர் அழகிய பெண்ணும் இதை நன்கறிவாள்.

இப்படிக்கு,
எம். ஆர்.

**(வெனிசூலா நாட்டுச் சஞ்சிகை ஒன்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. அட! உலகெங்கிலும் ஆண்கள் ஒரே மாதிரித்தான் இருக்கிறார்கள்!)**

# பெண் என்கிற பேதம்!

மனித வாழ்க்கையின் சரித்திரப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்போது பெண்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற கொடுமையின் பதிவுகளையும் ஆணாதிக்கத்தின் கொடூரங்களினால் ஏற்பட்டுள்ள விளைவுகளையுமே பார்க்க முடிகிறது என்கிறது நியூயோர்க் பிரகடனமொன்று.

இது காலம் கடந்த பிரகடனமொன்று. அதன் பின்னர் இன்று முன்னேற்றம் இருக்கிறது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லைதான். எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரசுரமான "உலக பெண்கள் 95"ன் படி இன்னும் செய்யப்பட வேண்டியது எத்தனையோ இருக்கிறது. பெண்களும் ஆண்களும் இரு வெவ்வேறு உலகங்களில் வாழ்வது போலவே நடத்தப்படுகிறார்கள். கல்வி, வேலை வாய்ப்பு, உடல் பராமரிப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, பொழுதுபோக்குக்கான நேரம் ஆகியவற்றில் இரு சாராருக்கும் சமத்துவம் இல்லை" என்று அது அறிவிக்கின்றது.



பெண் உரிமையைப் பாது
றியுள்ளன. ஆனால் சட்டங்க
முடியாது. அதுதானே அநீதி
ணங்களின் பிறப்பிடமாய்
உதாரணத்திற்கு விபசாரம்
களின் கதியை நினைத்துப்

உலகெங்கும் காணப்படு
வெட்கக்கேடான விடயத்தை
"நியூஸ் வீக்" சஞ்சிகை இ
கூறுகிறது: "பெண் பிள்ளை
காம இச்சைக்காகத் தவறா
படுத்துவதைத் தடுக்க ஏற்ப
பட்டிருக்கும் சட்டங்கள் என்
நல்ல நோக்கமுள்ளவை
ஆனால் அவை பெரும்பாலு
யோசனமற்றவையாகவே இ
கின்றன." அதேவிதமாய் சட்
கள் வன்முறையைத் தடுப்ப
லை. இன்று பெண்களுக்
ராக இழைக்கப்படும் வன்மு
எங்கும் பரவியுள்ள உல
விய பிரச்சினை என்கிறது 'ம
மேம்பாட்டு அறிக்கை 95.
ம்பாலான சட்டங்களுக்கு வ
றையைத் தடுத்து நிறுத்
ஆற்றல் இல்லை. தற்போ
கலாசார மற்றும் சமூக மதிப்
கள் மாறினால்தான் அது மு
யும் என்கிறது அது.

கலாசார மற்றும் சமூக
மதிப்பீடுகள் பொதுவாக ஆழ
மாக வேரூன்றியிருக்கும்
பாரம்பரியத்தின் மீதே ஸ்த
பிக்கப்பட்டிருக்கின்றன. அ
முடியாத வேரல்லவோ அது
பரியத்தின் காரணமாக ஆண்கள் பெண்களை நேசிப்பதற்கு மாறாக அவர்களை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், அக்கறையாய் கவனித்துக் கொள்வதற்கு மாறாக தன்னல நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் நினைக்கின்றனர் என ஒரு அரபு நாட்டுப் பெண் கூறுகிறாள்.

சீனா பீஜிங்கில் நடைபெற்ற பெண்களுக்கான உலக கருத்தரங்கில் முன்மொழியப்பட்ட செயற்திட்ட அறிக்கை (PLATFORM FOR ACTION) அறிவித்ததாவது: அனைவரும் உடனடியாகவும் ஒன்றுசேர்ந்தும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பெண்களை மதிக்கும் சமாதானமான, நீதியான மனிதாபிமானம் நிறைந்த உலகம் தோன்ற முடியும்" என்பதே.

பெண்களை மதிக்கும் முயற்சி முதலில் வீட்டில் இருந்து துவங்க வேண்டும். பெண்களது வாழ்க்கையை சமாதானமான, நீதியான, மனிதாபிமானம் நிறைந்த ஒன்றாய் மாற்றுவதற்கான அடித்தளம் அதுவே. தந்தைகளும் கணவர்களும் முதலில் செயலில் இறங்குதல் அவசியம். மனைவிகளையும் மகள்மாரையும் மருமகள்களையும் மரியாதையோடும் பரிவோடும் நடத்துவதும் இதில் அடங்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரகபலன்: கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** பார்ப்பதையும் படிப்பதையும் முழுதாகக் கடைப்பிடிக்க முடிந்தால்... அதுவே பிரச்சினை அண்டாத வேலியாக மாறிவிடும். குடும்ப சூழல் சுமுகமாக இருக்கும். உடம்பைப் பாதுகாக்க மறந்து இம்மாதத்தில் அதற்கான பலாபலன்களை அனுபவிப்பீர்கள். தொழில் செய்பவர் பணம் பார்ப்பது கஷ்டம். வியாபாரிகள் சென்ற மாதக் கடைசியில் கொஞ்சம் சுமார். இம்மாதம் குடும்ப மற்றும் தொழில் பார்க்கும் பெண்கள் இருதரப்பினருக்கும் சிறப்பாக அமையவில்லை. குழந்தைகளின் நிலையில் குறிப்பிடும்படியான மாற்றங்கள் இருக்காது. பொறுத்து கையாளுங்கள். மாணவர்கள், பெரியோர்களின் அறிவுரைகளை கொஞ்சம் செவிமடுத்து அடங்கிப் போவது வரவேற்கத்தக்கது. Use the time for yourself and do not let the time to do it.



**ரிஷபம்:** வாயைப் பாவித்து காதை மூடிக் கொள்வதா, இல்லை காதைத் திறந்துவிட்டு வாயை அடக்கிக் கொள்வதா என்பதில் நாம் சரியான தேர்ந்தெடுத்தலைக் கடைப்பிடிக்க வேண்டும். உடல் நலம் கோளாறுகள் இல்லாமல் இருக்கும். குடும்ப சூழலும் பாதிப்புகள் இல்லாமல் சுமுகமாக நடைபெறும். சென்ற மாதத்தின் பண நெருக்கடி இம்மாதம் கொஞ்சம் தணிந்து தயவு காட்டும். பெண்களைப் பொறுத்தவரை குடும்பம், தொழில் இரண்டிலும் அவர்கள் உழைப்புக்கு பலன் தெரிகிறது. பிள்ளைகளுக்கும் நலமான மாதம். மாணவர்கள் மீண்டும் முயற்சிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறீர்கள். அது ஒன்றுதான் ஒரே வழி. When everything is good - The good becomes everything.



**மிதுனம்:** நாம் எப்படி வேண்டுமானாலும் முகபாவத்தை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் மனம் நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும். உடல் நிலையைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டே கெடுத்துக் கொள்வீர்கள். குடும்பச் சூழலில் அமைதி மீண்டும் வர வாய்ப்புண்டு. பொருளாதார விடயத்தில் தடங்கல் ஏற்படாது. தொழில், வியாபார இருதரப்பினருக்கும் சுமுகமான மாதம். உயர்தொழில்களில் உள்ளோருக்கு நன்மைகள் கிட்டும். பெண்களில் தொழில் புரிவோரின் சென்ற மாத கெடுபிடிகள் சிறிதே தளர்ந்திருக்கும். இம்மாதமும் கொஞ்சம் கையை இறுக்கிச் செலவு செய்யுங்கள். சிறார்களுக்கு தொடர்ந்த பிரத்தியேக வழிகாட்டல் அவசியம். மாணவர்களின் நிலை, அவர்களின் கடந்த மாத முயற்சியின் பலன்தான் கைகொடுக்குமே தவிர வேறெந்த அறிகுறிகளும் இல்லை. அவர்கள் படிப்பையே கைவிட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. Getting defeated is better than withdrawing.



**கடகம்:** எதையும் ஒரு தடவைக்கு இரு தடவை சரிபார்ப்பதில் தப்பொன்றும் இல்லை. எல்லாவற்றையும் சரிபார்ப்பது சங்கடத்தைத் தந்துவிடும். உடல் நலம் நன்றாயிருக்கிறதென்று உணவு மட்டுமல்ல மாத்திரைகளையும் ஒரு பிடி பிடித்திருந்தால் கஷ்டகாலம். குடும்ப சூழல் மீண்டும் வழமைக்குத் திரும்பும். பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்த மட்டில் தொழில், வியாபாரம் இரு சாராருக்கும் இம்மாதம் பாதிக்கு மேல்தான் நல்ல சகுனங்கள் தெரிகிறது. பெண்கள் தொடர்ந்தும் பொறுமை, நிதானம் கடைப்பிடிக்க வேண்டிய மாதம். தொழில் புரிவோர், இல்லத்தரசிகள் இருதரப்பாரும், பொருளாதார ரீதியில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. சிறார்களுக்கு அதி சிறப்பான மாதம். பெற்றோர் தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். மாணவர்களுக்கும் தொடர்ந்து சிறப்புப் பலன்கள் தென்படுகிறது. ஞாபக சக்தியை மேம்படுத்தும் மார்க்கங்களை தேடிக் கடைப்பிடியுங்கள். Patience can break many barriers.



**சிம்மம்:** மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடியென்றாலும், தாளம் இனிமையாகத்தானே இருக்கிறது! பிரச்சினைகள் எல்லாப் பக்கங்களிலும் வந்தாலும் - வெளிப்பாடுகளை இனிமையாக்கிக்கொள்ள வேண்டும். உடல் நலக் குறைவு இருக்கும். குடும்பச் சூழ்நிலை பொதுவாக சமநிலை காணும். தொழில் செய்பவரோ, வியாபாரிகளோ - சென்ற மாதத்தைவிட செலவுகள் அதிகரிக்கும். உயர்தொழில் புரிவோர் நஷ்டப்படும் சூழ்நிலை. பெண்கள்பாடு கொஞ்சம் திண்டாட்டம்தான். எதிர்பாராத நிகழ்வுகளால் பெண்கள் நிலைதடுமாறுவீர்கள். நிதானம், விடாமுயற்சி மிகவும் அவசியம். பொருளாதார நிலையும் தடுமாற்றமடையும். பிள்ளைகளுக்கு மிகவும் உற்சாகமான மாதம். பல புதிய விடயங்களில் ஈடுபட உதவுங்கள். உயர்மட்ட, மற்றும் ஏனைய மாணவர்களுக்கு பாராட்டக் கூடிய வகையில் நடப்புகள் இருக்காது. பாராட்டுப் பெறும் வழிகளைக் கையாளுங்கள். Ball always bumps if dropped.



**கன்னி:** கயிறு நம் கையில் இருக்குமட்டும், உயரவிட்ட பட்டத்தை மீண்டும் திருப்பிக் கொள்ளலாமல்லவா? நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டும். காயங்கள், தீவிரமான நோய்கள் ஏற்கனவே உள்ளவர்கள் அதீத கவனமெடுப்பது அவசியம். புதிதாக நோய்களின் வருகை இம்மாதம் குறைவு. குடும்ப சூழல் வழமைபோல இருக்கும். தொழில் புரிவோருக்கு தலையைப் பிய்த்துக் கொள்ளுமளவுக்கு பண நெருக்கடி. வியாபாரிகளுக்கு கொஞ்சம் சுமார். உயர்மட்ட தொழில் புரிவோர்க்கு அமோகமான காலத்தின் ஆரம்ப மாதமிது. பெண்களுக்கு பொருளாதாரம் கஷ்டம் தராது. மன ரீதியாக, அசமந்த நிலை தென்படும். பிள்ளைகளின் கடந்த கால தடைகள் யாவும் நீங்கி, புத்துணர்வு பெறும் காலம். உற்சாகப்படுத்துங்கள். மாணவர்களுக்கு வரவேற்பு மிகுந்த மாதம். நிறைய பாராட்டுக்கள் குவியும். For thirst, the camel always keeps water in stock.



**துலாம்:** நமக்குத் தேவையான விஷயத்தை கேட்க, வானொலியை நாம்தான் காதைத் திருகி (மீட்டரை) சரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அது தரும் நிகழ்ச்சிதான் நமக்கு. உடல் நலம் அதீத பாதிப்பு இல்லாமல் தப்பிவிடும். இழந்திருந்த சுமுக நிலை குடும்பத்தில் மீண்டும் தலைகாட்டும். பொருளாதார மட்டத்தில் வியாபாரம், தொழில் செய்யும் இருசாராரும் ஆசுவாசப்படுத்திக் கொள்ளக்கூடிய மாதம். உயர்மட்ட தொழில் புரிவோரும் பலன்களைப் பெறுவார்கள். பெண்கள் இருபாலாரும் பொருளாதார மட்டத்தில் திருப்திப்படக் கூடிய மாதமிது. பிள்ளைகள் அதிக நம்பிக்கையால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு பிரதிபலன் அனுபவிப்பார்கள். பக்கத்திலிருந்து பகிர்ந்து கொள்ளுங்கள். மாணவர்கள் முழுக்கவனத்தையும், முயற்சியையும் வெளிப்படுத்தியே ஆக வேண்டிய மாதம். இளைப்பாறாமல் தொடர்ந்து படியுங்கள். Peace of mind is the real rest, than physical comfort



**விருச்சிகம்:** எவ்வளவுதான் நீச்சல் தெரிந்திருந்தாலும், தண்ணீரில்லாத குளத்தில் பாய்ந்தால் பிரயோசனமில்லை. சரியாக தேர்ந்தெடுத்திருந்தால் இப்போது தனியாக அழ வேண்டாமே. உடல் நலத்தில் கோளாறுகள் அவ்வளவாகத் தோன்றாவிட்டாலும், எதிர்கால சுகத்திற்குக் கேடு விளைவித்துக்கொள்ள வேண்டாம். குடும்ப சூழல் சுமுகமாக இருக்கும். வியாபாரிகளுக்கு செலவும் நஷ்டமும் அதிகரிக்க, தொழில் புரிவோர் சமநிலையிலிருப்பார்கள். உயர்மட்ட தொழில் புரிவோருக்கும் சிறப்பு அம்சங்கள் அவ்வளவாக இல்லை. குடும்ப மற்றும் தொழில் புரியும் பெண்கள் இருசாராருக்கும், அலைச்சல், பகைமை தலைதூக்கும். சிறார்களின் முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கும். ஊக்கப்படுத்துங்கள். மாணவர்கள் தங்கள் சிந்தனையைச் சிதற விடுவதாலும், வெறுப்பினாலும் அல்லல்பட வாய்ப்புண்டு. அமைதியான எண்ணங்கள் அவசியம். Self help is best.



**தனுசு:** வாழ்க்கை, பத்துக் குதிரைகள் பூட்டிய வண்டி. ஆனால் நாம் அந்தப் பத்துக் குதிரைகளையும் பாவிப்பதில்லை. உங்கள் திறமைகள் அனைத்தையும் வெளியிட்டால்... தினசரி கவலைக்கு இடமேயில்லை. உடல் நலம் குறைந்தவர்களுக்குக்கூட பிரச்சினையில்லாத மாதம். குடும்ப சூழல்தான் சுமுகநிலையடையத் தாமதமாகும். பண நெருக்கடி இருந்தாலும் அன்றாட ஓட்டம் தானாக நிறைவேறும். வியாபாரம், உயர்தொழில் புரிவோர் சமநிலையில் வாழலாம். குடும்ப, தொழிற் பெண்கள் இருசாராருக்கும் சமயோசிதத்தின் பூரண பலாபலன்களை அறிவுறுத்தக்கூடிய மாதமிது. பொருளாதார நிலை... எல்லாத் துறைகளிலும் இக்கட்டைத்தான் தோற்றுவிக்கும். பிள்ளைகள் அநேகமாக பெற்றோருக்குத் திருப்தி தரும் வகையில் நடப்பார்கள். சந்தோஷப்படலாம். மாணவர்கள், அதிகப்பிரசங்கித்தனத்தை தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்துவது மிக அவசியமானது. Before go to bed think of a song you like.



**மகரம்:** வயதாக வயதாக அனுபவம் கூடும் என்பதை நாம் வயதானவுடன் ஏற்றுக்கொள்வது குறைவு. உடல் நலத்தைவிட உள நலத்தில் அக்கறை காட்ட வேண்டிய மாதம். குடும்ப சூழலில் நிலவி வரும் குழப்பங்கள் மறைய நாளாகலாம். வியாபார, தொழில், உயர்தொழில் புரிவோர் யாவருக்கும் குறிப்பிட்ட அளவு வருவாயே தென்படுகிறது. மாத முடிவில் சில முன்னேற்றங்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கு விரக்தி ஏற்படலாம். தொழில் புரிவோரின் பொருளாதாரம் குறிப்பிடும்படி சிறப்பாக இல்லை. பிள்ளைகளும் களைத்துப் போகும் மாதம். தொடர்ந்த பராமரிப்பு மிக அவசியம். மாணவர்கள் கடந்த காலங்களில் செய்த முயற்சிகளுக்கான முழுப் பலாபலன்களை அடைவார்கள். Everybody needs everyday including holidays.



**கும்பம்:** விடுமுறையில் நித்திரை செய்யாமல் நித்திரையே விடுமுறை என்று எண்ணிக்கொண்டால் நேரமில்லை, காலமில்லை என்று முணுமுணுக்கத் தேவையில்லைதானே? உடல் நலம் சிறப்பாக இருக்கும். வாய்வுப் பிரச்சினைக்காரர்கள் ஜாக்கிரதை. குடும்பச் சூழல் சுமுகமாக இருக்கும். வியாபாரம், உயர் தொழில், தொழில் புரியும் ஆண்கள் ஞாயங்களைக் காணுவதில் சிரமமான காலம். பெண்களில் குடும்ப, தொழில் புரியும் இருசாராரும் மிகவும் எச்சரிக்கையாக கையாளவேண்டிய மாதம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். சிறார்கள் மாத முற்பகுதியில் சிறப்பாக இருப்பார்கள். அரவணைத்து வழிநடத்துங்கள். மாணவர்கள், அடிப்படை பிரச்சினை அது இதுவென்று அல்லல்பட நேர்ந்தாலும் - விடா முயற்சியை மறக்க வேண்டாம். We all mostly likes to forget our own promises.



**மீனம்:** என்னதான் பணமிருந்தாலும், மழைக் காலத்தில் கூரையைப் பழுதுபார்த்தால்....? அனாவசியமாக மட்டுமல்ல, அசட்டுத்தனமாகவும் இருக்கக் கூடாது. உடல் நலம் எழுபது சதவீதம் சுகமாக இருக்கும். குடும்பத்திலிருந்த சில தகராறுகள் மறையும் மாதம். ஒத்துழையுங்கள். வியாபாரம் உயர்தொழில் செய்பவர்களுக்கு புதிய விடயங்களில் முதலீடு முற்றாகத் தவிர்க்கபபடவேண்டும். பொருளாதாரம் குறிப்பிடும் வகையில் சிறப்பாக இல்லை. குடும்ப, தொழில் புரியும் பெண்கள் இருசாராரும், இம்மாதம் கூடுமானவரை பொறுமையைக் கடைப்பிடியுங்கள். பண இருப்பு - அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். சிறார்கள் சிறப்பான உற்சாகத்துடன் இருப்பார்கள். அனுமதியுங்கள். தப்பில்லை. மாணவர்கள் தேவைகளை உணர்ந்து தங்களை சமப்படுத்திக் கொண்டாக வேண்டும். To open the door, - go close to it.

கிரகாச்சாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'**டாக்டர் ஆப்பரேஷநாதர்**' தமிழ் எழுத்துக்களைக் கண்டால் அவைகளைத் தனித்தனியாக அறுத்து வேறு வேறு அறைகளில் போட்டுப் பூட்டிவிடுவார். அதுபோதாதென்று ஆஸ்பத்திரியை விட்டு வேறெங்காவது போயும்விடுவதுண்டு. சில எழுத்துக்கள் அவ்வப்போது அதிக சேதமின்றித் தப்பித்துக் கொள்வதுமுண்டு. இந்தப் பரிதாப நிலையிலுள்ள எழுத்துக்களின் பகுதிகளைச் சரியாகப் பொருத்தி, அவைகளுக்குரிய சரியான அறைகளில் வைத்தீர்களென்றால்.....அநேக புண்ணியம் உங்களுக்கு!

அவ்வாறு எழுத்தின் பகுதிகளைச் சரியான அறைகளில் வைக்கும்போது, மறைந்துள்ள ஒரு வார்த்தையையும் கண்டு கொள்வீர்கள்.

சென்ற தடவை உங்கள் உதவியால் தப்பியவர்களைப் பற்றி அறிந்துகொண்ட டாக்டர் இம்முறை வெட்டோ வெட்டென்று துண்டாடிவிட்டு பெருமிதப் புன்னகை பூக்கிறார். டாக்டரா, நீங்களா, ஒரு கை பாருங்கள்.

கண்டுபிடித்த அந்த வார்த்தையை இங்குள்ள கட்டங்களுக்குள் எழுதி, கூப்பனை ஒரு தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.

முகவரி: 'அமுது'
டாக்டர் ஒப்பரேஷநாதர் - 2
இல: 35 டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு 10.

Copy Rights Reserved



டாக்டர் ஒப்பரேஷநாதர் - 1க்கு பதில்

சாதனைகள்
சஞ்சிகை
புத்தகம்
சந்தனம்

சரியான விடைகளை அனுப்பிய 46 வாசகர்களுள் குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரின் பெயர்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| நக்ஷத் ஷெரின் | ஏ. மகேந்திரன் | எம். எ. எப். ரிஸ்னியா |
| 516/A2, உதயா மாவத்தை | இல. 115இ கோவில் வீதி | இல. 236B |
| அனுராதபுரம் | ஹாவாஎலிய | பொல்கஹாதன்ன |
| | நுவரேலிய | நாம்புலுவ |
| | | பஸ்யால |

இவர்களுக்கான பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்




சிரியோ சிரியென்று சிரிப்போடு நின்றுவிடாமல் இப்படியான படங்களை வரைவதற்கு கருத்துக்களை நீங்களும் அனுப்பலாம். கருத்து உங்களுடையது ! படம் எங்களுடையது !



## ஙேஙேஷே.....ம்!

இங்கே புல் தரையில் அமர்ந்திருக்கும் நடிகை யார் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? ஒரு குழந்தை மாதிரி நட்சத்திரம்தான் இவரும். ரசிக உள்ளங்களைக் கலக்கிக் கொண்டிருக்கும் இன்றைய முன்னணி நடிகை ஒருவர்தான் இப்படி ஹாயாக அமர்ந்திருக்கிறார். இந்தப் படத்தை முழுமையாகப் பார்க்க 46ம் பக்கம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயன்பு போல ஆதரிக்கும்...

## நாம் எங்கள் சிறகுகளின் நிழல்...

அன்னையின் அன்புக்கு நிகரான அக்கறையுடன் உங்களை அல்லும் பகலும் அரவணைத்துக் காக்கும் இடமாகும்.

ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி கடந்த பத்து ஆண்டுகளாக உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான காரியங்களில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றது.

பண்டிகை காலங்களில் பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை உண்டுபண்ணும் எமது முயற்சி பெரும் பயனளித்திருக்கிறது. அனுராதபுரம் உற்சவ காலத்தில் யாத்திரிகர்கள் நீரில் மூழ்குவது எமது முயற்சியினால் தவிர்க்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மிக்க வேலைத்தலத்திற்கு நாம் விருது வழங்குகிறோம். பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றிப் பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கருத்தரங்குகளை நடத்துகிறோம். அதுமட்டுமன்றி, நாடு முழுவதிலும் சகல மக்களுக்கும் பாதுகாப்புப் பற்றி உணர்த்துவதற்கு ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 'ஈகிள் பாதுகாப்பு மாத' மாக அனுஷ்டிக்கப்படுகிறது.

நாம் காப்புறுதியை ஒரு தொழிலாக மட்டும் கருதவில்லை. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கடமையாகவும் கருதுகிறோம். மக்களின் நலனில் கண்ணும்கருத்துமாக இருந்துவருவதன் மூலம் பொறுப்பு வாய்ந்த ஒரு காப்புறுதித் துறைக்கு வழிகாட்டியாக விளங்குகிறோம்.

**சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

*எங்கள் சிறகின்கீழ் சேருங்கள்... என்றும் துணையிருப்போம்*

**10** ஆண்டு கால மகத்தான ஈகிள் காப்புறுதி. என்றும் உங்கள் அருகில் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நோயற்ற....

டொக்டர்
எம். கே. முருகானந்தம்

## தீயினால் சுட்ட புண் ஆற...

பாலைக் குடித்து முடித்த கமலன் தாயின் மடியிலிருந்து எழுந்து விளையாட ஆரம்பிக்கிறான். அவனுக்கு வயது ஒன்றரை ஆகின்றது. குறுகுறுப்பானவன். எந்த நேரமும் விளையாட்டும் ஆராய்ச்சியும்தான். கரடிப் பொம்மை ஒன்றை எடுத்து அதன் கைகளைக் கழற்ற முடியுமா என்ற முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்.

செவ்வந்திக்கு இனியும் அவனுடன் விளையாடிக் கொண்டிருக்க முடியாது. பரபரக்கிறாள். கணவன் சுந்தர் பாத்ருமிற்குள். வந்ததும் கோப்பி கொடுக்க வேண்டும். காலை உணவு தயாரிக்க வேண்டும். கொதிக்கும் நீர் நிறைந்த கேத்திலை இறக்கி மேசையில் வைத்து விட்டு சீனியும் மாவும் எடுப்பதற்காகத் திரும்பினாள்.

அதற்கிடையில் அது நடந்துவிட்டது. திகைத்து நின்றுவிட்டாள் ஒரு கணம். கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை!

கதறித் துடித்து அழுகிறான் கமலன். கரடி அலுத்துவிட்ட கமலனின் கண்கள் மேசையில் இருந்த கரண்டியில் பாய, அதை எடுக்க முயல, கேத்தில் சரிந்து கொதிநீர் முழுவதும் கொட்டிவிடுகிறது. வலியால் துடிதுடித்து கதறி அழுகிறான்.

நிதானத்திற்கு வந்த அவள் குழந்தையைத் தூக்கி தேற்ற முயல்கிறாள். "என்ன நடந்தது" ஈரத் துவாயுடன் பாத்ருமிற்குள் இருந்து சுந்தர் பாய்ந்து வருகிறான்.

"என்னப்பா பார்த்துக்கொண்டு நிக்கிறியள். மைப்போத்தலை எடுங்கோவன்" தேடிப் பார்த்துவிட்டு வெறும் போத்தலுடன் வருகிறான். "மை முடிந்துவிட்டது. வேறு என்ன போடலாம்" குழந்தையின் கதறல் ஊரைக் கூட்டுகிறது.

பக்கத்து அனெக்ஸ் மாமியும் பறந்து வந்துவிட்டா. "குழந்தை துடிக்கிதில்லே, முட்டையை உடைச்சுப் பூசுங்கோவன்" இன்னுமொரு தேடல், முட்டை முடிந்துவிட்டது.

இவர்கள் யோசித்து, பேசி, தேடி முடிப்பதற்குள் குழந்தை கதறித் துடித்து துவண்டுவிடுகிறது.

இது ஒரு சுடு காயம். சுடுகாயங்கள் தீயினால் மாத்திரமின்றி கொதிக்கும் திரவங்கள் (கொதி நீர், கொதிக்கும் எண்ணெய்) மின்சாரம், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றாலும் ஏற்படலாம்.

**நீங்கள் பெற்றோராக இருந்தால் என்ன செய்வீர்கள்?**

நீங்கள் சமயோசிதமும் பொது அறிவுமுள்ள பெற்றோர்கள் எனில் என்ன செய்வீர்கள்? கீழேயுள்ள கேள்விகளுக்கு உங்கள் பதில்கள் என்ன? விடைகளை பக்கத்தில் சரி பாருங்கள்.

(1) சற்றும் தாமதிக்காது வைத்தியசாலைக்குச் செல்வதற்கான வழியைப் பாருங்கள்.

(2) வைத்தியசாலைக்குப் போவதற்கு முன் முட்டையை உடைத்து சுடுகாயம் முழுவதும் பூசுங்கள்.

(3) கணவரின் ஈரத் துணியால் சுடுகாயங்களை மூடிக் குளிரச் செய்யுங்கள்.

(4) குழந்தையின் வலியைத் தணிக்க சிறிது சாராயம் பருக்குங்கள்.

(5) நீர் நிறைந்த வாளிக்குள் குழந்தையை சிறிது நேரம் அமிழ்த்துங்கள்

(6) குழந்தையின் சத்தத்தை அடக்க இரண்டு அடி போடுங்கள்.

(7) கவனயீனமாக இருந்ததற்காக மனைவியைக் கடிந்து கொள்ளுங்கள்.

(8) கொதிநீரால் நனைந்த குழந்தையின் உடைகளை உடனடியாகக் களையுங்கள்.

**விடைகள்- 1, 2, 4, 6, 7 - பிழை 3, 5, 8 சரி**

### முதலுதவி

(1) சுடுகாயத்தை ஏற்படுத்தும் பொருளை உடனடியாக அப்புறப்படுத்துங்கள்.

(2) தீக்காயம் பட்ட பகுதியை 5-10 நிமிடங்களுக்கு நீரில் அமிழ்த்துங்கள் அல்லது குளிர்ந்த நீரை தொடர்ந்து அதன் மேல் ஊற்றுங்கள்.

(3) ஆடைகளைக் களையுங்கள்.

(4) காயம்பட்ட பகுதிகளை சுத்தமான துணியால் மூடுங்கள். கொப்புளங்களை உடைக்க வேண்டாம்.

(5) பரசிற்றமோல் மாத்திரைகளை வயதிற்கேற்ப விழுங்கக் கொடுத்து வலியைத் தணியுங்கள். ஏனெனில் சுடுகாயங்கள் கடும் வலியை ஏற்படுத்துபவை.

(6) மூட்டுக்களைச் சுற்றி சுடுகாயம் ஏற்பட்டால் அது ஆடாமலிருக்க கட்டுப் போடுங்கள் (படம்) ஏனெனில் காயமுற்ற மூட்டுக்கள் அசையும்போது கடும் வலி ஏற்படும்.

(7) கண்களில் தெறித்திருந்தால் நுண்ணுயிர் கொல்லி கண் மருந்துகளை அக்கண்ணில் இட்டு, பாட் (PAD) வைத்து கண்களை மூடவும்.



### மருத்துவ ஆலோசனை

**திரு. மா. யோகலிங்கம் - நித்தம்புவ.**

எனது வயது 65. பிரசர் நோயாளி. தினமும் அட்டனோல் 100 மி. கி. பாவிக்கிறேன். ஒரு நாள் திடீரென தலைச்சுற்றலுடன் இடது கையும் காலும் விறைத்துக்கொண்டு வந்தது. அந்நேரம் பேச்சும் குளறியது. கையைக் காலை மடக்கி, நீட்டி பயிற்சி செய்யக் குணமாகிவிட்டது. சில மாதங்களுக்கு முன்னரும் ஒரு தடவை இவ்வாறு நேர்ந்தது. மருந்து சாப்பிடுகிறேன். இது என்ன நோய்? மீண்டும் வராமல் தடுப்பது எப்படி?

**பதில்:** உங்களது மூளையின் ஒரு பகுதிக்கு இரத்தம் செல்வது திடீரென சற்று நேரம் குறைந்ததால்தான் இத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. இதனை Transient ishchaemic attack (TIA) என்று சொல்லுவார்கள்.

சில நிமிடங்கள் மட்டும் நீடித்ததால் இதனை ஆபத்தற்ற நோய் என்று கருத வேண்டாம். இவ்வாறு வருபவர்களில் மூன்றில் ஒரு பேருக்கு அடுத்த ஒன்று முதல் ஐந்து வருடங்களில் பாரிசவாதம் வரக்கூடும் என மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. இதனை இன்னொரு விதத்தில் சொலலப் போனால் பாரிசவாதம் வந்தவர்களில் 100 வீதத்தினரும் தமக்கு இத்தகைய அறிகுறிகள் வந்ததை ஒத்துக் கொண்டனர். அத்துடன் TIA வந்தவர்களுக்கு மாரடைப்பு வரக்கூடிய வாய்ப்பும் அதிகமாகும். எனவே தாமதிக்காது மருத்துவ ஆலோசனை பெறுங்கள்.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ட்ரோல் ஆகிய நோய் இருப்பவர்களுக்கும் புகைப்பவர்களுக்கும் இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும். எனவே உங்கள் பிரஸரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருங்கள். புகைப்பவராயின் உடனடியாக நிறுத்துங்கள். நீரிழிவு, கொலஸ்ட்ரோல் ஆகியன இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தினமும் அஸ்பிரின் மாத்திரையில் பாதி உட்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு படம் ஏன் வெற்றி பெறுகிறது?...




இந்தக் காரணத்தை மட்டும் சரியாக கணித்துச் சொல்லிவிடுவீர்களானால், தமிழ் நாட்டின் அத்தனை படத் தயாரிப்பாளர்களும் உங்கள் காலடியில்.

பெரிதாக எதிர்பார்த்த படங்கள் தோல்வியைத் தழுவுவதும், சில படங்கள் அதன் டைரக்டரே நினைத்திராத வகையில் பிரமாண்ட வெற்றி பெற்று வசூலைக் குவிப்பதுமாக... நம் உள்ளூர் விமானப் பயணங்கள் போல தீர்மானகரமில்லாத நிலைதான் அங்கும்.

போட்ட காசை வெற்றிகரமாகத் திரும்ப எடுத்து விடுவதற்கான ஃபோமுலா இன்னும் புரிந்தபாடில்லை.

தாம்பரத்திற்கும் செங்கல்பட்டிற்குமிடையில் ஏதோ ஒரு தியேட்டரில் முதலாவது வாரத்தில் இடைவேளையின் போது விற்பனையாகும் பொரிகடலையின் அளவை வைத்துக்கொண்டு அந்தப் படத்தின் வெற்றி தோல்வியைக் கணிப்பிட்டுச் சொல்ல முயலும் விற்பன்னர்கள் அங்கே இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் தலையைப் பிய்த்துக்கொள்ளும் விதமாக முதலிரண்டு வாரங்களும் ஈயோட்டிக் கொண்டிருந்த படம், மூன்றாவது வாரத்திலிருந்து இருபது ரூபா ரிக்கற் நூறு ரூபா Block ல் போகுமளவுக்கு சூடு பிடித்து தலைசுற்ற வைத்திருக்கிறது.

படத்தை எடுத்தவர்களே மயக்கம் போடுமளவுக்கு "சின்னத்தம்பி" வசூல் குவித்தது. "கரகாட்டக்கார"னும் அவ்வாறே. காதலன், உள்ளத்தை அள்ளித் தா, பூவே உனக்காக, காதலுக்கு மரியாதை போன்ற படங்களின் பாடல்களும், படம் வெளிவருவதற்கு முன்பாகவே பிரபலம் ஆகி இருக்கின்றன. ஆனால் வானொலி, டீக்கடைகள், பொது விழாக்களில் திரும்பத் திரும்பப் போடப்பட்டு பிரபலமான பாடல்களைக் கொண்ட படம் பிய்த்துக்கொண்டு போகும் என்ற எதிர்பார்ப்பில் மண்ணள்ளிப் போட்டவை இருவர், ரட்சகன், ஜீன்ஸ் போன்றவை.

இதுபோலவே டெக்னிக்குகளும் பிரமாண்டங்களும் படத்தின் வெற்றிக்குத் தேவையானவை என்ற நினைப்பை உடைத்தெறிந்தவை காதல் கோட்டை, பொற்காலம், சொல்லாமலே போன்ற படங்கள்.



### கிளைமாக்ஸ் மாஜிக்!

பாடலைத் தவிர படத்தின் இறுதிக் காட்சியும் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதாக நம்பப்படுகிறது. படம் முடிந்து தியேட்டரை விட்டு வெளியே வரும்போது ரசிகர்கள் மனதில் ஏதோ ஒருவித அந்தரத்தை உணர வேண்டும். அந்த மாதிரியான படங்கள் கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்கின்றன. இதற்காகவே சென்னையில் வெளியாகும் படப் பிரதிகளில் ஒரு முடிவும் ராமநாதபுரத்தில் வெளியாகும் படத்தில் வேறொரு முடிவுமாக ஒரு படத்திற்கு இரண்டு கிளைமாக்ஸ் எடுத்து வெளியிட்ட இயக்குனர்களும் இருக்கிறார்கள். தளபதி படம்கூட தமிழ்நாட்டில் வெளியான பிரதிகளில் மம்முட்டி சாவதாகவும், கேரளாவில் வெளியான பிரதிகளில் ரஜனி சாவதாகவும் முடிவுஇருந்ததாம். ஹீரோவை சாகடித்த படங்கள் ஓடுவதில்லை என்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால் நாயகனில் கமல்ஹாசனைச் சாகடித்து படத்தை பெரு வெற்றியாக்கினார் டைரக்டர். கடைசியில் நாயகனும் நாயகியும் கல்யாணம் செய்து கொள்வதையே ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை "மூன்றாம் பிறை" மாற்றியது. கமல்ஹசன் யார் என்று தெரிந்து கொள்ளாமல் ரயில் ஏறிச் சென்றுவிடுவார் ஸ்ரீதேவி.

பாரதி கண்ணம்மாவில் மீனா எரிந்துகொண்டிருக்கும் சிதையிலேயே பார்த்திபனும் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்கிறார். ரசிகர்கள் அமோகமாகப் பாராட்டினார்கள்.

ஆனால் சோகம் என்னவென்றால், மேற்கண்ட வெற்றியளிக்கும் வித்தைகளையெல்லாம் சேர்த்து ஒரு படத்தைப் பண்ணினாலும் அது ஃப்ளப் ஆகி விடுவதுதான்.

ரசிகர்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும், நேற்று மஹா திருப்தியளித்த விஷயங்கள் இன்று போதுமானதாக இருப்பதில்லை என்பதும், இன்று வெற்றியளிக்கும் வகை மாதிரிகள் நாளை சலிப்பைத் தருவதாகிவிடும் என்கிற உண்மைதான் இதற்குக் காரணம். மாறி வரும் சமூகத்திற்கு - அதன் ரசனைக்கு ஏற்ப, புதிய புதிய எண்ணக் கருக்களையும், புதிய புதிய சொல்லும் முறைகளையும் தெரிந்து கொண்டவர்களே சினிமாவிலும் வெற்றி பெறுகிறார்கள். ●

திரைப்படப் பாடலாசிரியர்கள் என்றால் பெரும்பாலும் எல்லோரும் ஆண்களாகத்தான் இருந்து வந்திருக்கிறார்கள். ரோஷனாரா பேகம், கனிமொழி கருணாநிதி, விஷாலி கண்ணதாசன் போன்ற பின்புலம் உள்ள பெண்கள் முயன்றும் முத்திரை பதிக்க முடியவில்லை. "என்னால் முடியும்" என்று நம்பிக்கையோடு வந்திருப்பவர் தாமரை. "தென்றல் வந்துன் நடையைக் கேட்டது" என்று "இனியவளே" படம் மூலம் பாடலாசிரியையாக அறிமுகமாகியிருக்கும் தாமரை, கோயம்புத்தூரைச் சேர்ந்த மெக்கானிக்கல் எஞ்சினியர் பட்டதாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்போதெல்லாம் ஹீரோக்களைத் தேடி அதிகம் அலைந்து கொண்டிருப்பதில்லை டைரக்டர்களும் தயாரிப்பாளர்களும். தங்கள் பிள்ளைகளையே ஹீரோவாகப் போட்டுபடத்தை எடுத்துவிடுகிறார்கள். நாளைய தீர்ப்பில் மகனைத் திரைக்குக் கொண்டு வந்த எஸ். ஏ. சந்திரசேகரின் வெற்றியை இன்று பலரும் பரீட்சிக்கிறார்கள்.

விஜய் போல ஒரு நாயகனை உருவாக்கிவிட எந்த அப்பாதான் விரும்பமாட்டார்?

"கோகுலஸ்வரன்" பட நாயகன் எபி. பிள்ளையின் பிரகாச எதிர்காலத்திற்குக் களம் அமைத்திருப்பவர் பிரமாண்ட தயாரிப்பாளர் குஞ்சுமோன்.

இயக்குநர் இமயம் பாரதிராஜா, தன் மகன் மனோஜை ஹீரோவாக்க எடுத்த முயற்சியில் சிறு தடங்கல். மனோஜுக்கு சற்று மிதந்து வெளித் தெரியும் பற்கள். மகனை வெளியே அனுப்பி பற்களைச் சரிசெய்துகொண்டு திரும்பும் வரை காத்திருக்கிறார் பாரதிராஜா.

ஒளிப்பதிவாளர் அசோக்குமார் டைரக்ட் செய்யும் புதிய படத்தின் ஹீரோ, அவரது மகன் விஷால். நெஞ்சத்தைக் கிள்ளாதே, ஜானி, மூன்று முடிச்சு, சமீபத்திய ஜீன்ஸ் போன்ற பல படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணிபுரிந்தவர் அசோக்குமார். தமிழின் முதல் 3டி படமான மைடியர் குட்டிச்சாத்தானுக்கும் ஒளிப்பதிவாளர் இவர்தான். அசோக்குமார் டைரக்ட் செய்த முதல் படம் "அன்று பெய்த மழையில".

மகன் விஷால், மும்பையிலிருந்து புதிதாக இறக்குமதி செய்திருக்கும் ஆஷா மெஹ்ரா ஆகியோருடன் அசோக்குமார் இயக்கத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் படம் "காமா". காமம் என்பது ஒன்றும் அசிங்கமானது அல்ல என்கிறார் அசோக்குமார். சரிதான்! படத்தின் பெயரையும், படத்தில் ஆஷா தோன்றும் (அருகேயுள்ள) தோற்றத்தையும் பார்க்கின்றபோது அசோக்குமார் நஷ்டப்படமாட்டார் என்றே தோன்றுகிறது.

# வசீகர இசைக்குள் வார்த்தைகள்!

மதுரகவி பாஸ்கரதாஸ், பாபநாசம் சிவன் போன்றோரிடமிருந்து ஆரம்பித்த "தமிழ் சினிமாப் பாடல்" என்கிற அந்த "இசைக்குள் நிரப்பும் வசீகரத்தை" இன்றைய தேதிக்கு உற்பவித்துக்கொண்டிருப்பவர்களாக ஒரு பெரிய பாடலாசிரியர்கள் லிஸ்ட்டே இருக்கிறது.

வைரமுத்துவுக்குப் பிறகு பழனிபாரதியில் தொடங்கி அறிவுமதி, பொன்னியின் செல்வன், வாசன், நந்தலாலா, தாமரை, ரவிசங்கர், கலைக்குமார்.... என புதிய கவியரசுகள் நாளுக்குநாள் வந்தவண்ணமிருக்கிறார்கள்.


வைரமுத்து

இருபத்துநாலு மணிநேர ரேடியோக்களில் சலிக்காமல் ஃபோனடித்து திரும்பத் திரும்ப இந்தப் பாடல்களையெல்லாம் விரும்பிக் கேட்டுக் கொண்டுமிருக்கிறார்கள் ரசிகர்கள்.

விஷயமென்னவோ அதே வார்த்தைகள் தான். ஆனால், "மாசிலா நிலவே" என்றும், "வதனமே சந்திர பிம்பமோ" என்றும் சொல்லிக்கொண்டிருந்தது இன்று "அட்டா பூவின் மாநாடா அழகுக்கு இவள்தான் தாய்நாடா" என்றும், "50 கேஜி தாஜ்மஹாலே பொக்கற் சைஸில் வெண்ணிலவே" என்றும் ஆகியிருக்கிறது.

ஒரே ஒரு பாடல் எழுதினாலும் புதிய முறையில் எதையாவது சொல்லியாக வேண்டும் என்று மண்டையைக் குடைந்தும் கொள்கிறார்கள். தவசிமணி என்கிற கவிஞர், தமிழகத்தில் வெளியாகும் அத்தனை மாத, வார, தினசரிகளின் பெயர்களையும் இணைத்து மூவேந்தரில் எழுதிய பாடல் "குமுதம் போல் வந்த குமரியே" என்று தொடங்குகிறது. 'அன்பான ராட்சசிக்கு' என்று கவிதைகள் எழுத ஆரம்பித்த அறிவுமதி, காதலின் கீதங்களால் வானம் வளைக்கலாம் என்றாடி..!

"நீ காற்று நான் மரம் என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்" என்று ஒரு வரியிலேயே புதிதாய் வருபவர்களையெல்லாம் சதாய்த்துக் கொண்டிருப்பவராக வைரமுத்து இன்னுமிருக்கிறார்.

பட்டப் படிப்பு முடித்துவிட்டு, டைரக்டராகும் இலட்சியத்தோடு, இன்று உதவி டைரக்டர்களாக உலவிக் கொண்டிருப்பவர்களும் பாடல்கள் எழுதுகிறார்கள். ஆரிய வம்சம் படத்தில் "திருநாளு தேரழகா" பாடலுடன் அறிமுகமானவர் கலைக்குமார். பி. ஏ. பட்டதாரி. சொல்லாமலே படத்தில் "ராத்திரி ரவுண்டடிடா" என்ற கானா பாடல். ஆனால் உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் படத்தில் எழுதிய "ஏதோ ஒரு பாட்டு" இவருக்குப் பலரது பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது.

எஸ். ஏ. ராஜ்குமாரின் இசையில், ஹரிஹரனின் காந்தக் குரலில் ஒலிக்கும் அந்தப் பாடல்:

*ஏதோ ஒரு பாட்டு என் காதில் கேட்கும்*
*கேட்கும் போதெல்லாம் உன் ஞாபகம் தாலாட்டும்*
*என் கண்களின் இமைகளிலே உன் ஞாபகம் சிறகடிக்கும்*
*நான் சுவாசிக்கும் மூச்சினிலே உன் ஞாபகம் கலந்திருக்கும்*
*ஞாபகங்கள் மழையாகும்*
*ஞாபகங்கள் குடையாகும்*
*ஞாபகங்கள் தீமூட்டும்*
*ஞாபகங்கள் நீரூற்றும்*
*கவிதை என்றாலே உன் பெயரின் ஞாபகமே*
*கேட்கும் இசையெல்லாம் நீ பேசும் ஞாபகமே*
*பூக்களின் மேலே பனித்துளி பார்த்தால் முகப்பரு ஞாபகமே*
*அதிர்ஷ்டம் என்றதும் உன் மச்சம் ஞாபகம்*
*அழகு என்றதும் உன் மொத்தம் ஞாபகம்*
*தென்றல் என்றாலே உன் வாசல் ஞாபகமே*
*வசந்தம் என்றாலே உன் வருகை ஞாபகமே*
*தொட்டாற் சுருங்கி பார்த்தால் உந்தன் வெட்கம் ஞாபகமே*
*அலைகள் இரவிலே மோதும் உந்தன் ஞாபகம்*
*மறந்து போனதே எனக்கு எந்தன் ஞாபகம்.*


[illegible]


[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேவதி - சுரேஷ்மேனன் தம்பதியரின் சின்ன சின்ன ஆசை தொடரில் (சன் டி.வி) இப்போது தொடரும் **கூத்தாடி**யை இயக்குவது ராதாரவி. நடிகைகள் பற்றி இந்த சமூகம் வைத்திருக்கும் பார்வையை வன்மையாகச் சாடுகிறது தொடர்.

பார்பெஸ் றொபெர்ட்ஸன் என்னும் நடிகருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பேர்ணாட் ஷோ குறிப்பிட்டார்: "மற்ற வாழ்க்கைத் தொழிலாளர்களை விட, கலைத்துறையில் பித்தலாட்டமும் ஏமாற்றும் குறைவு என்பது என் தீர்மானமான கருத்து. பெரிய நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், மருத்துவ வல்லுநர்கள், சமயத் தலைவர்கள் இவர்களின் வாழ்க்கையை விட நடிகராகிய உங்கள் வாழ்க்கை மேன்மையுடையது, விரும்பத்தக்கதாக இருக்கிறது. நீங்கள் சீஸராகவோ ஹேம்லெற்றாகவோ மேடையில் வரும் போது அவர்களாக நடிப்பதாகக் காட்டிக் கொள்கிறீர்கள். ஆனால் நீதிபதி தாம் உண்மையாகவே நீதிக்கு இருப்பிடம் என்றும், மருத்துவர் தாம் உயிர் வாழ்க்கையைப் பற்றி முற்றிலும் அறிந்தவர் என்றும், மதகுரு சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் உரிய சாவிக்கொத்து தம் கையில் இருக்கிறது என்றும் சொல்லிக் கொண்டு நடிக்கிறார்கள். ஆனால் நடிகராகிய நீங்களோ அப்படி ஒன்றைச் சொல்லி ஏமாற்றி வேறொன்றாக நடிப்பதில்லை...."

ராதாரவி கேட்கிறார்: "சமூகத்தில் கேவலமான நடத்தைகள் எங்குதான் இல்லை? மற்றப் பெண்கள் காலையில் வேலைக்குக் கிளம்புகிறார்கள் என்றால், நடிகைகள் மாலையிலும் செல்ல வேண்டியிருக்கிறது. தியேட்டருக்குள் மெய்மறந்து நடிப்பைப் போற்றிவிட்டு வரும் மக்கள், சமூக வாழ்க்கை என்று வந்தவுடன் நடிகைகளை அவதூறு சொல்லி இழிவாய் நோக்குவது ஏன்?" என்றும் கேட்கிறார். செப்டெம்பரில் மறைந்து போன வீரப்பா பாணியில் பாராட்டலாம்: "சபாஷ் சரியான கேள்வி". அதுசரி, அங்கே யாரது முதல் கல்லை எறிவது?



"குடும்பத்தைக் கெடுத்திட்டான்னு வந்தாத்தான் தப்பு. கொலை பண்ணிட்டான்னு வந்தாத்தான் தப்பு. ஒரு பெண்ணை ஸ்பாயில் பண்ணிட்டு அது வயித்தில இருக்கிற குழந்தைக்கு ராதாரவிதான் தகப்பன்னு பேப்பர்ல வந்தாத்தான் தப்பு. கடன் வாங்கிறது, பிஸினஸ் லாஸ் ஆறது எல்லாம் தப்பு இல்லியே....... ஒரு பொண்ணைக் கெடுத்து கிளீன்டனே ஜாலியா வரான், போறான்......"

*- வீடு கடனில் மூழ்கி ஏலத்துக்கு வந்திருப்பது பற்றிக் கேட்டபோது ராதாரவி.*



ராதாரவிக்கு என்ன திடீர் கோபம்? குமுதத்தில் தொடராக வந்துபாதியிலேயே நிறுத்தப்பட்டதே.... அந்த **"ஒரு நடிகையின் கதை"** தந்த சினம் தான். நடிகைகள் என்ன அவ்வளவு இளப்பமா, எது வேண்டுமானாலும் எழுதுவதா? என்று போர்க்கொடி பிடித்து குமுதம் அலுவலகத்தை முற்றுகையிட்டார்கள் ராதிகா, ரேவதி போன்றோரெல்லாம். சின்னத்திரையில் பல தொடர்களைத் தந்துவரும் ரேவதி - சுரேஷ் மேனன் தம்பதியினர் எலக்ட்ரோனிக் மீடியாவினூடாக பத்திரிகைத் துறைக்கு முதல் சாட்டையைச் சொடுக்கினார்கள். பத்திரிகை விற்பனையைப் பெருக்குவதற்காக **"ஒரு நடிகையின் கதை"** என்ற பெயரில் பல அவதூறுகளைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியரின் மகள், தனது நிர்வாணப் படத்தை அந்தப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அனுப்பி தந்தையை அதிர வைத்து நீதி வசனங்கள் பேசித் திருத்துவது அந்தச் சின்னத் திரை தொடரின் கதை.

பிறகு இப்போது ராதாரவியின் **கூத்தாடி**. ஒரு நடிகை இழிவுபடுத்தப்படும் சந்தர்ப்பங்களையெல்லாம் காட்டி, "ஏ தாழ்ந்த சமுதாயமே!" என்று நீதி விளக்கி வசனம் பேச வைக்கிறார். இதற்கிடையில் சன் டி.வியில் **"லட்சியம்"** என்ற பெயரில் மற்றொரு தொடர், ஒரு நடிகை முன்னுக்கு வருவதற்காக எதையெதையெல்லாம் இழந்து சீரழிகிறாள் என்பதை விலாவாரியாகச் சொல்கிறது. ராதிகா, ரேவதி அன் கோ வினருக்கு இந்தத் தொடர் கண்ணில் படவில்லையா?" என்று குமுதம் கேட்டிருக்கிறது.

இதெல்லாம் ஒருபுறமிருக்க, பொதுவாக நடிகைகளை இழிவுபடுத்தினால் போர்க்கொடி உயர்த்துவதில் ஒற்றுமைப்படும் **ராதா ரவி** போன்றோரெல்லாம் சொந்த வீடு, உறவு என்று வரும் போது தாங்களும் கீழே இறங்கி விடுகிறார்கள்.

தன் தந்தையின் இன்னொரு தாரத்து மகளான **ராதிகா**வைப் பற்றிக் கேட்கும்போது ராதாரவி சொல்கிறார்: "ராதிகாவைச் சேர்த்துக்கொள்வதா இல்லையான்னு யோசிச்சுக்கிட்டு இருக்கோம். எல்லாரும் அட்ரஸைப் போட்டுகறாளுங்களே; ஒரு நாள் போனவங்களும் அட்ரஸ் போட்டுக்கறாங்க. 35 நாள் இருந்தவங்களும் அட்ரஸ் போட்டுக்கறாங்க. 45 வருஷம் இருந்தவங்களும் அட்ரஸ் போட்டுக்க நாங்கன்னா ஈக்குவல் ஆயிடுமா?"



இந்துவாகப் பிறந்து, முஸ்லீமாக மாறி, கிறிஸ்தவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு, வெள்ளையர்களால் சிதைத்துக் கொல்லப்பட்டவர் மருதநாயகம். இந்த சிக்கலான கதைக் கருவை வெற்றிகரமான படமாக்குவதற்கு, ஒரு தவத்தில் ஈடுபட்டிருப்பது போலவே சிந்தனையை ஒருமுகப்படுத்தி செயற்பட்டு வருகிறார் கமல் ஹாசன். தனது இத்தனை வருட சினிமா அனுபவத்தை மட்டுமல்ல, இத்தனை வருடங்களாக சம்பாதித்த பணத்தையும் இந்தப் படத்தில் முதலீடு செய்திருக்கிறார் கமல். ஒரே சமயத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் "மருதநாயகம்" வெளிவரவிருக்கிறது. மொத்தப் படப்பிடிப்பில் 25 சதவிகிதம்தான் இதுவரை முடிந்திருக்கிறது. தமிழ் ரசிகர்களை வியக்க வைக்கப்போகும் ஹொலிவூட் நவீன தொழில்நுட்ப உத்திகளையெல்லாம் இறக்கியிருக்கிறார் கமல். திரையில் ஆயிரக்கணக்கில் பாய்ந்தோடும் குதிரைகள், ஆர்ட் டைரக்டர் சாபு சிரில் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கோட்டை கொத்தளங்கள், காடுகள், ஹொலிவூட்டிலிருந்தே இறக்குவிக்கப்பட்டிருக்கும் மேக்கப் சாதனங்கள், யானையோடு தத்ரூபமாக மோதப்போகும் கமல், உடம்பு முழுவதும் சேறு மட்டுமே பூசிக்கொண்ட ஆட்களோடு ஒரு பிரமாண்டமான நிர்வாண சண்டை.... என்று அங்கங்கே உதிரிகளாக சில செய்திகள் கசிந்ததிலேயே கமல் ரசிகர்கள் பரபரப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.



**ஷே....ம்!**

குழந்தையைப் போல தரையில் அமர்ந்திருப்பது ரம்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் தமிழ்த் திரையுலகுக்குப் புத்துயிர் ஊட்ட வந்த நம்பிக்கை நட்சத்திரம் எனக் கருதப்பட்டவர் மணிரத்னம். ஆனால் அண்மைக் காலங்களில் இவர் எடுத்து வரும் படங்கள் வெறும் "மோடிமஸ்தான்" விளையாட்டுக்களாகவே அமைந்துள்ளன.

முக்கிய பிரச்சினைகளை பின்புலமாகக் கொண்டு எடுக்கும் படங்களின் கதையம்சம் ஆழம் மிகுந்தவையாக இருப்பதில்லை. பிரச்சினையின் பரிமாணங்களும் உரிய முறையில் வெளிக்கொண்டுவரப் படுவதில்லை.

காஷ்மீர் பிரச்சினையை மையமாகக் கொண்ட "ரோஜா", இந்து - முஸ்லிம் கலவரத்தை மையமாகக் கொண்ட "பம்பாய்" ஆகியன எப்படி ஆழமற்ற நுனிப்புல் மேயும் விதத்தில் அமைந்தனவோ அதே விதமாகத்தான் இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் உள்ள தீவிரவாதத்தை மையமாகக் கொண்ட "உயிரே" என்று தமிழிலும், "தில்சே" என்று ஹிந்தியிலும் மணிரத்னத்தால் சமகாலத்தில் எடுக்கப்பட்ட படம் அமைந்துள்ளது.




## "தில் சே - உயிரே"

இந்தியாவின் வட-கிழக்குப் பகுதியில் அசாம், மிசோரம், நாகலாந்து, மணிப்பூர் ஆகிய நான்கு மாநிலங்களிலும் வன்முறையில் நாட்டம் கொண்டிருக்கும் தீவிரவாத அமைப்புக்கள் செயல்படுகின்றன. இத்தீவிரவாதத்தை இந்தியாவின் அதிகாரரத்தரப்பு "பயங்கரவாதம்" என்றே அழைக்கின்றது. அதே பதப் பிரயோகத்தைக் கையாளும் மணிரத்னம் இம்முறை கதையின் முற்பகுதி இந்தியாவின் வட-கிழக்கில் நடக்கிறது என்று குறிப்பிட்டாலும் திட்டவட்டமாக ஒரு மாநிலத்தையும் குறிப்பிடவில்லை.

அவ்வாறு திட்டவட்டமாகக் குறிப்பிட்டால் ஒரு நேர்மையான அணுகுமுறையைக் கையாள வேண்டும். இது பல இக்கட்டுக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இதனை மணிரத்னம் செய்திருக்கலாம். இதனால் வட-கிழக்கு என்று சொல்லிவிட்டு ஜம்மு - கஷ்மீர் மாநிலத்தில் உள்ள பௌத்த பிரதேசமான எழில் மிகுந்த லடாக் பகுதியில் கதையை நகர்த்த இயக்குனரால் முடிகிறது. லடாக்கை பின்னணியாகக் கொண்ட காட்சிகளில் அண்மையில் வந்த "திபேத்தில் 7 வருடம்" ஆங்கிலப் படத்தின் சாயல் தென்படுகிறது.

உயிருள்ள எவரையும் குறிப்பவையல்ல என்று சொல்லிவிட்டு எம். ஜி. ஆர். - கருணாநிதி வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு "இருவர்" படத்தை எடுத்தார் மணிரத்னம். ஆனால் திராவிட இயக்க வளர்ச்சியையே கேலி செய்வது போல்தான் படம் அமைந்தது என்ற விமரிசனம் எழுந்தது.

அதேபோல் "உயிரே" படமும், இந்தியாவின் வட - கிழக்கு மாநில மக்களின் பிரச்சினைகளையோ அல்லது தீவிரவாதத்தின் எழுச்சிக்கான காரணிகளையோ சித்திரிக்காமல் ஒரு பொழுதுபோக்குச் சம்பவக் கோவையாகவே போய்விட்டது என்ற கண்டனக் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன.

வெறுமனே ஒரு "மசாலா" பாணி பொழுதுபோக்குப் படத்தை எடுப்பவர் மீது இவ்விமர்சனம் முன் வைக்கப்படுவதில்லை. ஆனால் மணிரத்னம் தன்னை ஒரு "புத்திஜீவி" இயக்குனராகக் காட்டிக் கொள்வதால்தான் இந்தப் பிரச்சினை. போதாக்குறைக்கு திரைக்கதை, வசனகர்த்தா சுஜாதா வட - கிழக்குப் பிரச்சினையை ஆராய ஆயிரக்கணக்கான நூல்களைப் படித்ததாகப் புளுகித் தள்ளியிருந்ததும் எதிர்பார்ப்புக்களை அதிகரித்து ஏமாற்றத்தை அளித்து விட்டது.

வர்த்தக அடிப்படையில் இந்தியா முழுவதிலும் படங்களைத் திரையிட்டுப் பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கம் படைப்பாளியான மணிரத்னம் மனதில் புகுந்துகொண்ட பின்னர் அவர் கையாளும் தந்திரம் "தேபக்தி"யாகும். "ரோஜா"வில் கதாநாயகன் எரியும் தேசியக் கொடியை அணைக்கப் பாடுபடும் கோமாளிக்காட்சி இதற்கோர் எடுத்துக்காட்டு. "உயிரே" மூலம் தேசபக்தி என்ற கீறல் விழுந்த இசைத்தட்டை மணிரத்னம் ஒலித்தாலும் அது எடுபடவில்லை.

படத்தின் பலவீனமான அம்சமே கதைதான். லட்சியத்தைக் காதலிக்கும் மனித வெடிகுண்டுப் பெண்ணும் அவளைக் காதலிக்கும் வானொலியாளரான இளைஞனும்தாம் பிரதான கதாப்பாத்திரங்கள். அவனது வீட்டில் இருந்துகொண்டு, அவனோடு தொழில் புரிந்துகொண்டு ஜனாதிபதியைக் கொல்லத் திட்டமிடுகிறாள். அதை அறிந்த பின் அவன் தடுக்க முயல்கிறான்.

பலவீனமான திரைக்கதை ஒரு புறம், கதையை நகர்த்தும் இயக்குனரின் மேலோட்டமான பாணி மறுபுறம் என்று படம் ஏனோ தானோவென்று போகிறது. சட்டென்று தோன்றும் முடிவு படத்தை சப்பென்று ஆக்கி விட்டது.

மிகப் பெரும் ஏமாற்றமான இப்படத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிறப்பம்சங்கள் சந்தோஷ் சிவனின் கவிதாம்சம் பொருந்திய படப்பிடிப்பு, ரகுமானின் ரசானுபவம் மிக்க இசையமைப்பு, மனிஷா கொய்ராலாவின் நவரசம் ததும்பும் நடிப்பும்தான். கதாநாயகன் ஷாருக்கான் நன்கு நடித்திருந்தாலும் அவரது ஏனைய படங்களின் மறுபதிப்பு போலவே தென்படுகிறார்.

இந்திய வட - கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகள், அவற்றால் எழுந்த போராட்டங்கள் ஆகியவற்றை மணிரத்தினமும் சுஜாதாவும் கொச்சைப்படுத்தித்தான் "உயிரே" படத்தை உருவாக்கியுள்ளனர். மணிரத்னம் பற்றிய மாயை மேலும் அகல இப்படம் துணை செய்யும்.

**வெற்றி வேந்தன்**



ஒருவர்: ஒரு சிகரட் கிடைக்குமா?
மற்றவர்: இந்தாங்க, பக்கெற்றையே வைச்சுக்கோ!
ஒருவர்: தீப்பெட்டி இருக்குதா?
மற்றவர்: லைட்டரையே வைச்சுக்கோ!
ஒருவர்: பெரிய பக்டரிக்கே சொந்தக்காரர் போல....?
மற்றவர்: இல்ல, இப்ப நான் நுரையீரல் நோய்க்கு சொந்தக்காரன்.

## முதலாவது தபாற் பெட்டி

கி. பி. 1453இல் டடோமன் துருக்கியர்களால் கொன்ஸ்தாந்திநோபல் நகரம் கைப்பற்றப்பட்டதன் பின், ஐரோப்பாவிலிருந்து கீழைத்தேய நாடுகளுக்கு பிரயாணம் செய்துகொண்டிருந்த பாதை தடைப்பட்டு, அம்மக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனால் கடல் மார்க்கமான பாதைகளைத் தேட வேண்டிய தேவை ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது.

கீழைத்தேய நாடுகளுக்கான புதிய பாதையைத் தேடி, அதற்கான தடயங்களைக் காண பர்த்தோலமியு டயஸ் என்பவர் 1484இல் புறப்பட்டார். கால நிலையில் ஏற்பட்ட மாற்றத்தினால் 1500 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்கக் கடற்கரையில் இவர் கரையொதுங்க நேரிட்டது. காலநிலை சீரடைந்ததுடன் கப்பல் புறப்படத் தயாரானபோது, மாலுமிக்கு ஒரு ஐடியா பிறந்தது. கரையொதுங்கிய அந்தக் கரை பற்றிய பூரணமான விபரம் ஒன்றை எழுதி ஒரு சப்பாத்துக்குள் போட்டு, அதை ஒரு மரத்தில் கட்டித் தூக்கிவிட்டுச் சென்றார். ஓராண்டு காலத்தின் பின் அந்தப் பாதையில் பயணம் செய்த ஜோ ஆம்டானோவா என்பவர் இந்தச் சப்பாத்திலுள்ள கடிதத்தைக் கண்டெடுத்தார். டானோவா இந்த இடத்தில் இருந்து பிரிவதற்கு முன் அங்கு சிலரைக் குடியிருக்க அமர்த்திவிட்டுச் சென்றார். அம்மக்கள் தபால் பெட்டியாக அந்த சப்பாத்தையே தொடர்ந்து பாவித்தனர். உலகின் முதலாவது தபால் பெட்டி இந்தச் சப்பாத்துதான். இது கிழிந்து போகும் வரை தபால் பெட்டியாக பாவனையில் இருந்தது. பிறகு அவ்விடத்தில் வேறு ஒரு சப்பாத்து வைக்கப்பட்டது.



இந்த இடம் இன்றும் ஆபிரிக்காவில் மெசேல் பொக்க எனும் இடத்தில் காணப்படுகிறது. தற்பொழுது இம்மரத்தடியில் சீமெந்திலான ஒரு தபாற்பெட்டி வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எப்படித் தெரியுமா? அதுவும் சப்பாத்து வடிவில்தான்.

**எச். எஸ். டீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்




## மாயத் தோற்றம் விலை: ரூபா 75.00

**ஏ. இக்பால் படிப்பு வட்டம் 9, எஸ். எ.ஃ.ப். மாவத்த, தர்கா நகர்.**

வரலாறு, கவிதை, இலக்கியம், என்று பல துறைகளிலும் எளிமையாகவும் சிறப்பாகவும் எழுதி வருகின்ற ஏ. இக்பாலின் ஒன்பது படைப்புகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி. எந்தப் பத்திரிகையிலும் இதுவரை வெளியாகாத, தேசிய நூலக சேவையின் அனுசரணையோடு வெளியிடப்பட்ட தொகுதி இது.

இக்பாலின் கதைகளைப் படிக்கின்ற வாசகனுக்கு மிகவும் தனித்துவமான பாணியொன்றாக அவரை இனங்காண முடியும். எந்தப் பீடிகையோ, சொற் சிலம்பமோ அற்ற கதை சொல்லும் போக்கு புதிய இலக்கிய அடையாளமாக இக்பாலை இனங்காட்டுகின்றது. முதல் வார்த்தையிலேயே வாசகனைத் தனது படைப்பில் ஒன்றி அத்யந்தமாகத் தொடர்ந்து செல்ல வைக்கின்ற நேர்த்தியும் உயிர்ப்பும் ஒவ்வொரு கதையிலும் மின்னித் தெரிகின்றது.

இக்பாலின் கதை உலகம், சின்னஞ்சிறு குடும்பத்தின் உள்ளும் வருகின்றது. "மாயமோ நானறியேன்", "என்னை வீழ்த்தும் என் பாடல்" போன்ற கதைகளின் எல்லை சின்னஞ்சிறியது. வருபவர்களும் ஒற்றை இரட்டையான மனிதர்களே. ஆனால் இரத்தினக் கல்லில் பளபளவென்று தெறிக்கும் வண்ண வெளிச்சங்களைப் போல சூழல், உரையாடல், பாத்திரங்கள் யாவுமே துல்லியமாய் வாசகனிடம் பதிவாகிவிடுகின்றன. மீண்டும் கதையிடம் செல்லும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. இத்தகைய வாசிப்பே சிறந்த படைப்பினை இனங் கூறுபவை. மிகத் தேர்ந்த நடையில், மனிதப் போக்கினை நேயத்தோடும் நியாயம் தேர்ந்த பார்வையோடும் சொல்லுகின்ற இந்தக் கதைகள் டி. எம். ஸபா சொல்லியிருப்பது போல, "எழுதாமல் இருக்க முடியாததற்காக எழுதும் கலைஞர்களின் ஆக்கங்கள் கலைத்துவ நுணுக்கம் பெற்றவை" என்பது முற்றிலும் உண்மைதான்.




## சிதைவுகள் விலை: ரூபாய் 75.00

**(Things Fall Apart என்ற ஆங்கில மொழி ஆபிரிக்க நாவலின் தமிழாக்கம்)**

**சினுவா ஆச்சிபி தமிழில்: என். கே. மகாலிங்கம் காலச்சுவடு பதிப்பகம் 151, கே. பி. சாலை, நாகர்கோவில் 629001**

நைஜீரிய நாவலான "சிதைவு"களில் வெளிப்படும் உலகம் இங்கேயுள்ள நம் வாழ்க்கையையும் பெரிதும் நினைவூட்டக்கூடியது. நம் மரபு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், தொன்மம், வாய்மொழிச் செல்வம், விடுதலை வேட்கை அனைத்தும் மற்றொரு விதத்தில் இந்த நாவலில் பிரதிபலிப்பது தமிழ் வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடியது. 1930இல் பிறந்த சினுவா ஆச்சிபி தனது 28வது வயதில் முதல் படைப்பான "சிதைவு"களை வெளியிட்டார். இந்நாவல் அமெரிக்காவில் மட்டும் 20 இலட்சம் பிரதிகள் விற்றுள்ளது. ஐம்பது உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலக வாசகர்களிடையே விற்ற பிரதிகள் 80 லட்சம். நைஜீரிய அரசியலிலும் ஆச்சிபி ஆற்றிய பங்கு மிகப் பெரியது. "சிதைவு"களைப் படிக்கும் தமிழ் வாசகன், நமது வாழ்வுடன் அது கொண்டிருக்கும் ஒற்றுமையை உணராமல் இருக்க முடியாது.




## புதிய பூக்கள் விலை: ரூபாய் 80.00

**வ. இராசையா அரவிந்தம் வெளியீட்டகம், 40, லில்லி அவென்யூ, கொழும்பு-6.**

ஆறு ஆண்டுக்கு மேற்பட்ட வயதுள்ள சிறுவர்களுக்கு என ஆக்கப்பட்டுள்ள சிறந்த கவிதைகள். இந்தக் கவிதைகள் குழந்தைகள் இராகமாகப் பாடத்தக்க பாட்டுக்கள். வெறும் இராகப் பாட்டுக்களாக மட்டுமல்லாமல் சிறுவர்களின் மனதிலே இலகுவில் பதியத்தக்க நற்பண்புகள், அறிவியல் கருத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இனிமை கொண்டவை. இள வயதினர் திரும்பத்திரும்ப விருப்பத்துடன் பாடத்தக்க இவற்றை ஆக்கிய குழந்தைக் கவிஞர் வ. இராசையா, இளந் தலைமுறைக்கு தனது முன்னைய நூல்களான, **"கண்டியன் ஓநாய்"**, **"சந்தனக் கிண்ணம்"** மூலம் நன்கு அறிமுகமானவர். பரிசளிக்கவும், பிறந்ததின விழாக்களுக்கும் கொடுக்கத்தக்க விதத்தில் **"சந்ரா"** வின் ஓவியங்களுடன் தரமாகவும் அழகாகவும் பதிக்கப்பட்டுள்ளது **புதிய பூக்கள்.**

**என் நினைவில் ஒரு கவிஞர்**
**"இலக்கிய மாமணி" சாரணா கையூம்**
**அப்பூப் இல்லம்,**
**162/5, லோவர் வீதி, பதுளை.**
**விலை: இந்தியாவில் ரூபாய் 18,**
**இலங்கையில் - குறிப்பிடப்படவில்லை.**




கவிஞர் அப்துல் காதர் லெப்பை பற்றி, அவரது மாணவரான சாரணா கையூம் மீட்டிப் பார்த்த நினைவுகள். நூலைப் பதித்திருப்பவர் தமிழ்மணி மானா மக்கீன்.




**பசியா வரம்**
**விலை: ரூபா 100.00**
**கே. கோவிந்தராஜ்**
**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்**
**95, ரஜமல்வத்தை, கொழும்பு-15.**

மலையக கலை இலக்கிய சமூக அம்சங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட கே. கோவிந்தராஜ், மலையக மக்களின் வாழ்வை கலையழகோடும், யதார்த்தபூர்வமாகவும் எழுதி வருகின்ற சிறந்த படைப்பாளி. இவரின் படைப்பாற்றல் நாடகத்துறையிலும் வியாபித்து, மலையக வாழ்வை பரவலாகவே எடுத்துச் சொல்கிறது. பன்னிரண்டு கதைகளைக் கொண்ட இந்தத் தொகுதி, மலையக வாழ்வின் எல்லா இயல்புகளையும், துயரங்களையும், மீறல்களையும் மலையக மண்ணின் மணத்தோடும் இயல்போடும் சொல்கின்றது. மலையக இலக்கியம், எழுத்துப் படைப்புத்துறைக்கு புதிய இரத்தம் பாய்ச்சும் வல்லமை கொண்டது என்பதை "பசியாவரம்" இன்னொருமுறை உறுதி செய்கிறது.

**மலையக மாணிக்கங்கள்**
**விலை: ரூபாய் 65.00**
**அந்தனி ஜீவா**
**துரைவி பதிப்பகம்,**
**85, ஸ்ரீ இரட்ணசோதி சரவணமுத்து மாவத்தை,**
**கொழும்பு-13.**



மலையக மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்த முன்னோடிகளைப்பற்றிய தகவல்களை இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தரவேண்டுமென்கிற ஆர்வமே இந்நூலாக்கத்திற்கான காரணம் என்கிறார் அந்தனி ஜீவா. மறைந்த முன்னோடிகள் பன்னிருவரைப் பற்றி பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும், கருத்தரங்குகளிலும் ஆசிரியர் எழுதியும் பேசியும் வந்த தகவல்கள் தொகுக்கப்பட்டு நூலாகியிருக்கிறது.

**நூலாய்வு: மாணிக்க வாசகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான தேர்வு



சரியான தேர்விற்குத்
தெளிவான கண்கள் தேவை

தெளிவான கண்கள் கொண்டு
மகாவலி மெரீன் சீமெந்தைத்
தேர்ந்தெடுத்தால் நீங்கள்
புத்திசாலிகள்.

ISO 9002




**MAHAWELI MARINE CEMENT**

நிர்மாணத்தின் நிலையான அடித்தளம்

69. புதிய களனிப் பாலம் வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 451212 பக்ஸ்: 451049 டெலெக்ஸ்: 21655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஏராளமாக பரிசு பெறும் வாய்ப்புகள்**

சாதாரண சேமிப்புக் கணக்கு, காந்தா ரண் கினும் (மகளிர் பொற்கணக்கு), ரண்கொவி தன்பத்து கணக்கு,
ரணவிறு ரண் கினும், மற்றும் ரண் கதெல்ல குடும்பக் கணக்கு மூலம் நீங்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

## ரண்கினும் வாசனா (பொற்கணக்கு அதிர்ஷ்டம்)

## தேசியரீதி மாபெரும் சீட்டிழுப்பு

நீங்கள் செய்யவேண்டியது இதுவே

1999 ஏப்ரல் மாதம் 01ந் திகதி முதல் ஜூன் மாதம் 30ந் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் மேலே குறிப்பிட்ட கணக்குகளில் 10,000/- ரூபா அல்லது ரண் கதெல்ல தொகுதியில் 12,000/- ரூபா வரை கூட்டாக ஆகக் குறைந்த கணக்கு மீதியாக வைத்திருப்பது மட்டுமே நீங்கள் செய்ய வேண்டியது.

### முதலாம் பரிசு

25 இலட்சம் ரூபா பெறுமதியான வீடொன்று

### இரண்டாம் பரிசு

ஒவ்வொன்றும் 12 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சொகுசுக் கார்கள்

### மூன்றாம் பரிசு

ஒவ்வொன்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான 3 மோட்டார் கார்கள்

### ஆறுதல் பரிசுகள்

20 வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள்
20 குளிர்சாதனப் பெட்டிகள்
20 சலவை இயந்திரங்கள் (வோஷிங் மெஷின்கள்)

## மாகாணப் சீட்டிழுப்பு (10 மாகாணங்களுக்காக)

இதில் கலந்துகொள்ள 1998 ஒக்டோபர் 01ந் திகதி முதல் டிசெம்பர் 31ந் திகதிவரை பின்வரும் முறையில் உங்கள் சேமிப்புக் கணக்குகளில் கணக்கு மீதி இருக்கவேண்டும்.

பிரிவு 1

ரூபா 5,000/- அல்லது அதற்குக் கூடிய தொகையை மீதியாக வைத்திருக்கும் மேலேயுள்ள சேமிப்புக் கணக்கு வைத்திருப்போருக்கு அல்லது ரூபா 6,000/-ற்கு அதிக தொகையை கூட்டு மீதியாக வைத்திருக்கும் ரண்கதெல்ல (பொன் மனை) குடும்ப அங்கத்தவருக்காக

### முதலாம் பரிசு

10 மோட்டார் கார்கள்

### இரண்டாம் பரிசு

20 இரண்டு சக்கர கை உழவு இயந்திரம் அல்லது 20 மூன்று சக்கர ஓட்டோ வண்டிகள்

### மூன்றாம் பரிசு

40 வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள்

### ஆறுதல் பரிசுகள்

100 தையல் இயந்திரங்கள், 100 சைக்கிள்கள், 100 காஸ் அடுப்புகள்

**[illegible] சிறிய சேமிப்பாளர்களுக்குக் கூட இந்த சீட்டிழுப்பில் கலந்துகொள்ள [illegible]**

2ம் பிரிவு

1000/- ரூபா முதல் 4999/- ரூபா வரையில் மீதி வைத்திருக்கும் கணக்கு வைப்பாளர்களுக்கு மாகாணத்திற்கு 100 வீதம் தேர்ந்தெடுக்கப்படும் 1000 கணக்கு வைப்பாளர்களுக்கு கணக்கிலுள்ள தொகையைப் போல் இன்னொரு மடங்குத் தொகை இலங்கை வங்கியால் கணக்கில் வரவு வைக்கப்படும். வெற்றி பெற்றால் நீங்கள் சேமித்த தொகை தானாகவே இரு மடங்காகிடும்.

இலங்கை வங்கியின் ரண் கினும் வாசனா பொற் கணக்கு அதிர்ஷ்டத்தின் பொற்கதவு உங்களுக்காக திறந்துள்ளது. இலங்கை வங்கியில் மேலும் மேலும் சேமியுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் இலங்கை வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்.

**இலங்கை வங்கி**

தேசத்தின் வங்கியாளர்

FIRST & FORWARD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org